விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : 32

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 19 ஞாயிற்றுக்கிழமை (03.01.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 015

## பெரும்பான்மையினருக்கு சார்பாக

# அரசியல் யாப்பு தயாரிக்கப்பட்டுள்ளது

## விக்னேஸ்வரன் சந்தேகம்



(கொழும்பு)

பெரும்பான்மை சமூகத்தவருக்கு சார்பான ஒரு அரசியல் யாப்பு வரைபை ஏற்கெனவே தயாரித்து வைத்துக் கொண்டு பொதுமக்களிடம் கருத்துக் கேட்பதாகப் பாசாங்கு செய்து ஈற்றில் ஏற்கெனவே தயாரித்த குறித்த வரைபை வெளிவிடுவதே அரசின் எண்ணம் என்று நாம் கருதுகின்றோம் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் சந்தேகம் வெளியிட்டுள்ளார். (31ஆம் பக்கம் பார்க்க)


ஆலடி
மாநாடு
வியாசர்
பதில்களுடன்
உங்கள்
சங்குநாதம்
உள்ளே

## தனியார் வகுப்புக்கள் விரைவில் ஆரம்பம்

### தொற்று நோயியல் பிரிவு

(கொழும்பு)

பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கப்பட்ட பின்னர், தனியார் கல்வி வகுப்புகளை மீண்டும் தொடங்க திட்டங்கள் 31

## பண்டிகைக் காலத்தில் பெருமளவானோர் மேல் மாகாணத்திலிருந்து வெளியேற்றம்

### அடுத்துவரும் சில நாட்களில் புதிய கொத்தணி உருவாகும் ஆபத்து

(கொழும்பு)

இலங்கையில் அடுத்துவரும் சில நாட்களில் புதிய கொரோனா கொத்தணிகள் உருவாகும் வாய்ப்புள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண எச்சரித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபை பிரிவிற்குள் கொரோனா பரவல் ஓரளவு குறைவடைந்துள்ளது. 31

## கொரோனாவுக்கு மேலும் மூவர் பலி நேற்றும் +502 பேருக்கு தொற்று

### உயிரிழப்பு 211 ஆக உயர்வு

(கொழும்பு)

நாட்டில் கோவிட் - 19 நோய்த் தொற்றால் மேலும் 3 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைகளம் நேற்று சனிக்கிழமை அறிவித்துள்ளது.

இதன்மூலம் நாட்டில் கோவிட் - 19 நோயால் உயிரிழந்தோர் எண்ணி 31

## முல்லைத்தீவில் மினி சூறாவளி



31

## விபரீத முடிவெடுத்த ஆட்டோ சாரதி மரணம்

### சாவகச்சேரியில் சம்பவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் விபரீத முடிவெடுத்த ஆட்டோ சாரதி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை மாலை 31

### 10 அத்தியாவசிய பொருட்களின்

## நிர்ணய விலையை பேண அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

10 அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான நிர்ணய விலையை பேணுவதற்கு வர்த்தகத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது. 31

## கொரோனாவால் உயிரிழப்பவர்களை அடக்கம் செய்வதால் வைரஸ் பரவாது

### மருத்துவக் கல்லூரி

08ஆம் பக்கம் பார்க்க

### போர்க்குற்றங்கள் இடம்பெறவில்லை

## சாட்சியங்களுடன் ஐ.நாவில் நிரூபிப்போம்

### அமைச்சர் சரத் வீரசேகர

(கொழும்பு)

இலங்கையில் போர்க் குற்றங்கள் இடம்பெில்லை என்பதை ஐ.நா மனித 31

## யுத்த குற்றம் இழைக்காவிட்டால் சர்வதேச விசாரணைக்கு அஞ்சுவது ஏன்?

### கமால் குணரத்னவிடம் விக்னேஸ்வரன் கேள்வி

(கொழும்பு)

உங்கள் படைகள் யுத்தக் குற்றம் இழைக்கவில்லை என்று நீங்கள் கூறுவது உண்மை என்றால், சர்வதேச விசாரணைகளைக் கண்டு அஞ்சுவது ஏன் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்னவைப் பார்த்துக் கேள்வி எழுப்பியிருக்கின்றார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன். 31

# கொரோனாவால் உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்யலாம்

## நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் உடல்களின் இறுதிச் சடங்கு தொடர்பான பிரச்சினையை ஆய்வு செய்ய சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, அடக்கம் மற்றும் தகனம் ஆகிய இரண்டையும் பரிந்துரைத்துள்ளது.

கொரோனா வைரஸால் பாதிக் கப்பட்டவர்களை கட்டாயமாக தகனம் செய்வதை முஸ்லிம்கள் ஆட்சேபித்ததை அடுத்து இந்த விவகாரம் குறித்து ஆய்வு செய்ய இந்த குழு நியமிக்கப்பட்டிருந்தது.

அந்த குழுவின் அறிக்கை வெளியாகியுள்ளது.

முந்தைய பரிந்துரையில், இறந்த உடல்களை பிரத்தியேகமாக தகனம் செய்வது குறித்த வழிகாட்டுதல்கள் யோசனைகளை வலியுறுத்தியிருந்தது.

எவ்வாறாயினும், தற்போதைய அறிக்கையில் திருத்தம் செய்யப்பட்டு, குறிப்பிட்ட பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கடைபிடிக்கும் போது, தகனம் மற்றும் அடக்கம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய உடல்களை அகற்றுவதற்கான பரிந்துரைகளை குறிப்பிட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் வெளியான நிபுணர்குழு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இறுதிச் சடங்கு அறிவிப்பு விடுக்கப்பட்ட 24 மணித்தியாலயத்திற்குள் உடலை அடக்கம் அல்லது தகனம் செய்ய வேண்டும்.

சடலங்களை அடக்கம் செய்வதால் நீர் மூலம் வைரஸ் பரவுகிறது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. அடக்கம் செய்வதானால் உடலை இரட்டை அடுக்கு உடல் பையில் வைக்க வேண்டும் என்று குழு கூறுகிறது. (ம-03)

# யாழ். போதனாவில் கொரோனா பரிசோதனை

## எவருக்கும் தொற்றில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்றுச் சனிக்கிழமை 374 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனை கள் மேற்கொள்ளப்பட்டது.

பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட எவருக்கும் கொரோனாத் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி டாக்டர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார். (ம-03)

# பிரித்தானியாவில் உருமாறிய கொரோனா வைரஸ்

## சீனாவிலும் பரவத் தொடங்கியது

(கொழும்பு)

பிரித்தானியாவில் கண்டுபிடிக்கப்பட்ட உருமாறிய கொரோனா வைரஸ் தற்போது சீனாவிலும் பரவத்தொடங்கியுள்ளது.

சீனாவின் ஹுபேய் மாகாணம் வுகான் நகரில் கடந்த 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த வைரஸ் தற்போது உலகின் பல நாடுகளுக்கும் பரவி பல அழிவுகளை உண்டாக்கியுள்ளது.

கொரோனா தாக்கத்தால் உலகம் முழுவதும் இதுவரை 18 இலட்சத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் உருமாறிய கொரோனா வைரஸ் பிரித்தானியாவில் முதன் முதலாக உறுதி செய்யப்பட்டது.

ஆரம்பத்தில் பரவிய கொரோனாவை விட தற்போது உருமாறியுள்ள கொரோனா 70 சதவீதம் வேகமாக பரவும் என தெரியவந்துள்ளது.

இந்நிலையில், சீனாவிலும் தற்போது உருமாறிய கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் சீனாவில் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா தற்போது உருமாறிமீண்டும் சீனாவையே வந்தடைந்துள்ளது.

பிரித்தானியாவிலிருந்து 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 14 ஆம் திகதி சீனாவுக்கு சென்ற 23 வயதான இளம் பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் புதிய கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-03)

## கடமைகளை மேற்கொள்ளாததற்கு

# கொரோனா வைரஸை காரணம் காட்டாதீர்

## அமைச்சர் நிமல் சிறிபால

(கொழும்பு)

தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடாமல், தமது கடமையை மேற்கொள்ளாமல் இருப்பவர்கள் கொரோனா வைரஸை காரணம் காட்ட வேண்டாம் என தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, தொழில் வழங்குனர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் அச்சத்தால் ஒழிந்திருப்பதன் மூலம் சவாலை வெற்றி கொள்ள முடியாது. கொரோனா வைரஸை சிறந்த திட்டத்தின் மூலமே வெற்றிகொள்ள முடியும்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக அநேக நாடுகள் பொருளாதார வீழ்ச்சியை சந்தித்திருக்கின்றன. உலகின் முன்னணி நாடுகளும் இதில் அடங்கும். இந்த நிலையில் நாட்டு மக்கள் சுகாதார வழிமுறைகளுக்கு முன்னுரிமை அளித்து செயற்படவேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ம-03)

**கணித வகுப்புகள்**
2021 புதிய கணித வகுப்புகள் தரம் 6 - 11 வரை
( ஆங்கில மொழி மூலம் )
அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால்
வரையறுக்கப்பட்ட குழுவாக
ஆரம்பிக்கப்படுகின்றன.
இடம் : சட்டநாதர் கோவில் அருகாமை
076 849 3134
(5156)

**VN அக்கடமி**
சண்டிலிப்பாய்
தரம் 01 முதல் A/L வரை
புதிய கல்வியாண்டு – 2021
ZOOM மூலம்
ஆரம்பம் : 04.01.2021
திங்கள் மாலை 3 மணி
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
நிர்வாகி : V. கஜரூபன்
077 500 5861
(5151)

**மணமகன் தேவை**
யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த
1976 ஆம் ஆண்டு பிறந்த
குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை
புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை
பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு
070 640 5951
e-mail : engchelvam@gmail.com
(5073)

**நல்லூர் பாம் சென்ரர்**
உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட
புறோயிலர், கல்பேட், ஊர்க்கோழி, Parents
காலை 7.00 மணி தொடக்கம்
மாலை 7.00 மணி வரை சுகாதார
முறைப்படி சுத்தம் செய்து பெற்றுக்
கொள்ளலாம். வாடிக்கையாளர்களை
அன்புடன் அழைக்கின்றோம்.
நல்லூர் பாம் சென்ரர்
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.
(C-1083)

**அன்பொளி கல்வியகம்**
கல்வியாண்டு – 2021
தரம் 3, தரம் 4, தரம் 5 Zoom
வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.
இணைய விரும்பும் மாணவர்கள்
076 174 7490 என்ற
எண்ணுடன் தொடர்பு
கொண்டு முற்கூட்டியே பதிவு
செய்து கொள்ளவும்.
(C-1082)

**பராமரிப்பாளர் தேவை**
யாழ். நீராவியடி, பிறவுண் வீதியில் வசிக்கும் வயோதிபப் பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கு பெண் பராமரிப்பாளர் தேவை. 45 வயதிற்கு மேற்பட்டவரும் 24 மணி நேரமும் உடன் இருந்து கவனிக்கக் கூடியவரும் விரும்பத் தக்கது. ஊதியம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(5153)
077 757 0203

**மணமக்கள் தேவை**
படித்த உள்நாட்டிலுள்ள மணமகன், மணமகளுக்கு
படித்த மணமக்கள் தேவை.
1992 கனடா, 1982, 1983, 1987 ஜேர்மன், வெளிநாட்டில்
உள்ள மற்றும் ஐரோப்பாவில், அமெரிக்காவிலுள்ள
மணமக்களுக்கு மணமக்கள் தேவை.
(5159)
தொடர்பு : 077 023 7639
WhatsApp : 004917643399372
IMO NO : 076 475 2219

**ஓலைச்சுவடி சோதிட நிலையம்**
உலகப் புகழ்பெற்ற தமிழ்நாடு வைத்தீஸ்வரன் கோவில் இந்தியாவில் இருந்து ஓலைச்சுவடி மூலம் பார்க்கப்படும். உங்களுடைய எதிர்காலப் பலன்கள், ஆரோக்கியம், கல்வி, திருமண வாழ்க்கை, ஆயுள் தீர்க்கம், உத்தியோகம், வெளிநாட்டுப் பலன்கள், முற்பிறப்பு, இப்பிறப்பில் தடைகள் ஏற்பட்டால் அவைகள் விலக நிவர்த்தி பரிகாரங்கள் மற்றும் எதிர்கால பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.
மட்டக்களப்பு, திருகோணமலையில் உள்ளவர்களுக்கு
வவுனியாவில் வாசிக்கப்படும். சுபம்
தொடர்புகளுக்கு:- ஓலைச்சுவடி சோதிட நிலையம்
கைலாச பிள்ளையார்
கோவிலுக்கு அருகாமையில், யாழ்ப்பாணம். (5160)
தொடர்புகளுக்கு. 076 328 7119

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
விஸ்வலிங்கம் மணிவண்ணன்
[ யாழ். மாநகர மேயர் ]
மாநகர சபையின் மிகுதியாக உள்ள
காலத்தில் யாழ். மக்களின் பிதாவாக
மக்களுக்கு என்ன சேவை
செய்யலாமோ அதனைச்
செவ்வனே செய்து மக்கள்
மனதை வெல்ல வாழ்த்துக்கள்...
(C-1085)

வடலியடைப்பு நண்பர்கள்

**உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?**
எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?
குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு
**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**
கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.
பாவித்து 15 நாட்களில் அற்புதமான
அழகைக் காண்பீர்கள்
(5158)
077 210 6155 221, நாவலர் ரோட், யாழ்ப்பாணம்.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532






குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் வருடாந்த மார்கழி மாதத்து திருவாசக முற்றோதல் நிகழ்வும், விசேட யாக வழிபாடுகளும் நேற்று சனிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. கோப்பாய் சுப்பிரமணிய கோட்டத்தின் முதல்வர் ஆன்மிகச் சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் மற்றும் சுந்தர்மடம் வேதாந்த மடத்தின் எட்டாவது குருபீடாதிபதி ஸ்ரீவேத வித்யாசாகரர் சுவாமிகள் ஆகியோர் இணைந்து விசேட யாக வழிபாடுகளை நிகழ்த்தினர். தீபாராதனை வழிபாடுகளும் இடம்பெற்றன. தற்போதைய கொரோனா கால சுகாதாரக் கட்டுப்பாடுகளுக்கு அமைய மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களுடன் மாத்திரம் குறித்த நிகழ்வுகள் இடம்பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(படங்கள்-ரவிசாந்)

# பட்டதாரி பயிலுநர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும்



(கொழும்பு)

ஒரு வருடப் பயிற்சியை முடித்த பட்டதாரி பயிலுநர்களுக்கான நிறுத்தப்பட்டிருந்த கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

கடந்த நல்லாட்சிக் காலத்தில் முதல் கட்டமாக வழங்கப்பட்ட பட்டதாரி பயிலுநர்களான நியமனம் பெற்றவர்களில் 43 பட்டதாரி பயிலுநர்கள் கிழக்கு மாகாண சபை அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களின் ஒருவருட பயிற்சியைப் பூர்த்தி செய்ததன் பின்னர் அவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படாமை தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரனின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

அரச அதிபரின் துரித செயற்பாட்டினாலும், முயற்சியினாலும் இப்பட்டதாரி பயிலுநர்களுக்கு நீண்ட கால மாக வழங்கப்படாமல் இருந்த கொடுப்பனவினை வழங்குவதற்கு திறைசேரியின் அனுமதி மாகாண சபைக்கு வழங்கப்பட்டு இவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்குவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ-4)

# வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள புதிய வசதி

(கொழும்பு)

நாட்டில் காணப்படும் தற்போதைய நிலைமைகள் காரணமாக வெளிநாடுகளில் பணிபுரிவோரின் முறைப்பாடுகளை இணைய வழியாக அனுப்புவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, வெளிநாடுகளில் உள்ள பணியாளர்கள் அவர்களது உறவினர்களுக்கு ஏதேனும் முறைப்பாடுகள் இருப்பின் அறிவிக்க முடியும். www.slbfe.lk என்ற இணையத் தளத்தின் ஊடாக முறைப்பாடுகளை பதிவு செய்ய முடியும்.

பணியாளர்களின் பயணச் சீட்டு இலக்கம், பெயர், தொலைபேசி இலக்கம் மற்றும் முறைப்பாடுகளை இதன் ஊடாக பதிவேற்ற முடியும். முறைப்பாடு தொடர்பான இலக்கமும் அந்தத் தருணத்திலேயே கையடக்கத் தொலைபேசிக்கு SMS ஊடாக கிடைக்கப் பெறும் எனவும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது. (ஐ-4)

# கைகழுவும் திரவங்களை பதிவு செய்வது கட்டாயம்

**(கொழும்பு)**

**தேசிய ஔடத ஒழுங்குறுத்தல் அதிகார சபையினால் பதிவு செய்யாத கைகழுவும் திரவங்கள் தொடர்பில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை விசேட ஒழுங்கு முறைகளை விதித்துள்ளது.**

அதன்படி, அதிகார சபைக்குள்ள அதிகாரத்திற்கு அமைய அவ்வாறான திரவங்களை விற்பனை செய்வது, தயாரிப்பது, விநியோகிப்பது உள்ளிட்டவற்றை தேசிய ஔடத ஒழுங்குறுத்தல் அதிகார சபையின் கீழ் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

அதிகார சபையினால் வழங்கப்படும் இலக்கங்கள் இல்லாத எந்தவொரு திரவத்தையும் விற்பனை செய்ய முடியாது.

இவ்வாறு பதிவு செய்யப்படாத கைகழுவும் திரவங்களை உற்பத்தி செய்தல், ஏற்றுமதி செய்தல், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் அல்லது மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யப்படுமாயின் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# போக்குவரத்து சேவைகளில் மக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டும்

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

போக்குவரத்துச் சேவைகளில் பொதுமக்களின் நம்பிக்கையினை மீட்டெடுப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துரைத்த தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன இதனை தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் தனியார் பேருந்து சேவையில் 50 வீதம் மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்காரணமாக தனியார் பேருந்து சேவை பொருளாதார நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளது.

எனவே ஜனாதிபதியின் தலையீட்டுடன் அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ-4)

# சிறைக் கொத்தணி அதிகரிப்பு

(கொழும்பு)

சிறைச்சாலையில் கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 87 ஆக அதிகரித்துள்ளது.

புதிதாக 71 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் 3 ஆயிரத்து 347 பேர் தொற்றில் இருந்து குணமடைந்துள்ளதுடன் மேலும் 731 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ-4)

# விபத்துக்களில் 12 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்துக்களில் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதன்போது, 40 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

கொவிட்-19 தொற்று ஏற்படுவதற்கு முன்னரான காலப்பகுதியில் நாளொன்றில் அதிகபட்சம் 8 பேர் வரை மாத்திரமே விபத்துக்களில் உயிரிழந்ததாகவும் அவர் கூறினார். (ஐ-4)

# தேசியப் பால் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

உள்நாட்டுப் பால் உற்பத்தி இவ்வாண்டில் 70 சதவீதம்வரை அதிகரிக்கப்படும் என தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையின் தலைவர் மஞ்சுள மாகமகே தெரிவித்துள்ளார்.

மாறுபட்ட சுற்றாடல் நிலைகளுக்கு ஈடுகொடுக்கக்கூடிய கால்நடைகளை இனப்பெருக்கம் செய்வது பற்றியும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பான பேச்சுவார்த்தையை ஒத்திவைக்க வேண்டாம்

## இராதாகிருஷ்ணன் வேண்டுகோள்



(கொழும்பு)

கொவிட்- 19 தொற்றை காரணம் காட்டி பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பான பேச்சுவார்த்தையை ஒத்திவைக்க வேண்டாமென மலையக மக்கள் முன்னணி தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத்தலைவர் அமரர் பெ.சந்திரசேகரனின் 10 ஆவது ஆண்டு சிரார்த்த தின நிகழ்வு, ஹற்றன் ஸ்ரீ கிருஷ்ணபவான் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

அதில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். "கடந்த 5 வருடங்களாக 1000 ரூபாய் சம்பள உயர்வுக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 2015 ஆம் ஆண்டுக்குப் பிறகு இரண்டு கூட்டு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டும் ஆயிரம் ரூபாய் பிரச்சினை கவனத்தில் கொள்ளப்படவில்லை.

புதிதாக பதவிக்கு வந்துள்ள அரசாங்கத்தில் 1000 ரூபாய் சம்பள உயர்வை வழங்க வேண்டும் என பிரதமர் பாராளுமன்ற வரவு-செலவுத் திட்ட உரையில் கூறியுள்ளார். இருந்தும் கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் தான் சம்பள உயர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலையே உள்ளது.

கூட்டு ஒப்பந்தம் இல்லாமல் சம்பளப்பிரச்சினையைத்தீர்க்க முடியாது என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், இன்றுள்ள விலைவாசி அதிகரிப்புக்கு ஏற்ப தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படை சம்பளத்தை 1000 ரூபாவாகப் பெற்றுக் கொடுக்க வேண்டியது சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்களின் பொறுப்பாகும்.

சம்பள உயர்வு தொடர்பாக இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டும் இணக்கம் எட்டப்படவில்லை. இந்த நிலையில் 'கொவிட் - 19' காரணமாக சம்பள உயர்வு தொடர்பான பேச்சுவார்த்தையை நடத்த முடியாமல் ஒத்தி வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பேச்சுவார்த்தை ஒத்தி வைக்கப்பட்டு காலம் இழுத்தடிக்கப்படும் போது தொழிலாளர்களுக்குத் தான் இழப்பு ஏற்படும் என்பதை மறந்து விடக் கூடாது.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு முக்கியமான ஒன்று என்பதைக் கவனத்திற் கொண்டு இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தொழிற்சங்கங்கள் கம்பனிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கலாம். அதை விடுத்து 'கொரோனாவை' காரணம் காட்டி பேச்சுவார்த்தையை இனிமேலும் இழுத்தடிக்கக் கூடாது" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# 150 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனாத் தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கித்தவித்த மேலும் 150 இலங்கையர்கள் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளனர்.

அந்த வகையில் கட்டார் டோஹா நகரில் இருந்து 103 பேரும் அபுதாபியில் இருந்து 47 பேரும் இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர். (ஜ-4)

# ஐ.தே.க.வெற்றிடம் குறித்து அடுத்த வாரம் தீர்மானம்- ருவான்



(கொழும்பு)

'கட்சி சீர்திருத்தங்கள் குறித்தும் வெற்றிடமாக உள்ள இடங்களை நிரப்புவது குறித்தும் முடிவினை எட்ட அடுத்த வாரம் செயற்குழு கூடும் என்றும் இதேவேளை தேசியப் பட்டியல் ஆசனம் குறித்து தீர்மானிக்க மேலும் காலத்தை எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

அத்தோடு இந்த விடயத்தில் கட்சி பொறுமை காக்க வேண்டும் எனக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உறுப்பினர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசியப் பட்டியல் ஆசனம் தொடர்பாக தீர்மானிக்கும் முன் பாராளுமன்றத்தின் முன்னேற்றங்களை கண்காணிக்க கட்சி விரும்புவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# இஸ்லாமியர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நாவில் முறையிட வேண்டும்

(மட்டக்களப்பு)

இஸ்லாமியர்களுக்கு எதிராக இடம்பெறும் உரிமை மீறல்கள் குறித்து ஐ.நாவில் முறையிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற சமகால அரசியல் தொடர்பாக விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"இந்த வருடம் மூன்றாவது மாதம், ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவை கூடவுள்ளது.




கடந்த அரசாங்கத்தில் இப்பேரவையில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் தொடர்பில் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஆனால் தற்போதைய புதிய அரசாங்கம் இப்பேரவையில் இருந்து வெளியேறுவதாக குறிப்பிட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் ஏனைய தமிழ் அரசியல் தரப்பினர் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பாகிய நாமும் சகல தமிழ் தரப்பினரும் தற்போது இணைந்து ஒரு முன்மொழிவினை இப்பேரவையில் முன்வைக்கவே விரும்புகின்றோம்.

இலங்கையில் இஸ்லாமியர்களுக்கு எதிராக இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்தும் முஸ்லிம் நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதனால் இலங்கையில் இடம்பெறுகின்ற மனித உரிமைக்கு எதிராக எம்முடன் இஸ்லாமிய நாடுகளும் ஒன்று சேர வேண்டும். 2013 ஆண்டு திகண அளுத்கமவில் தொடங்கி தற்போது ஜனாஸா வரை இடம்பெற்று வருகின்ற மனித உரிமை மீறல்கள் குறித்து முறைப்பாடு செய்ய முன்வர வேண்டும்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# வன விலங்கு காரியாலயம் மீது தாக்குதல் ஐவர் கைது

(கொழும்பு)

வனவிலங்கு காரியாலயம் மீது தாக்குதல் மேற்கொண்ட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை - பானம பிரதேச வாசிகளால் நேற்று முன்தினமிரவு பானம வனவிலங்கு காரியாலயம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையிலேயே குறித்த தாக்குதலை மேற்கொண்ட 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 30 ஆம் திகதி பானம குடும்பிகலயில் சிறுத் தையின் தாக்குதலுக்குள்ளாகி நபரொருவர் உயிரி ழந்தமையை யடுத்து.

குறித்த பிரதேச வாசிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# சு.க.தனித்துப் போட்டியிட்டால் பொதுஜன பெரமுனவுக்கு பாதிப்பில்லை

## திலும் சாடல்

(கொழும்பு)

மாகாண சபை தேர்தலில் சுதந்திரக் கட்சி தனித்து போட்டியிட்டால் பொதுஜன பெரமுனவிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. பொதுஜன பெரமுனவின் வெற்றிக்கு சுதந்திரக்கட்சி மாத்திரம் பங்குதாரரரல்ல. அரசியல் மட்டத்தில் கடந்த காலத்தை சுதந்திரக் கட்சி மீட்டிப்பார்க்க வேண்டும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.



சுபீட்சமான எதிர்கால கொள்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. கொவிட்-19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் பல அபிவிருத்தி பணிகள் கடந்த வருடம் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வருடத்துக்குள் பல அபிவிருத்தி பணிகள் நிறைவு செய்யப்படும்.


அரசாங்கம் சுதந்திரக் கட்சிக்கு அநீதி இழைத்துள்ளது என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. பொதுஜன பெரமுனவில் கூட்டணி அமைத்த அனைத்து கட்சிகளுக்கும் சமமான உரிமை வழங்கப்பட்டுள்ளது.

மாகாண சபை தேர்தலில் சுதந்திரக் கட்சி தனித்து போட்டியிட்டால் பொதுஜன பெரமுனவிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# பிரிவினைவாதத்திற்கும் தீவிரவாதத்திற்கும் இடமில்லை - பாதுகாப்பு செயலர் திட்டவட்டம்

(கொழும்பு)

**மலர்ந்துள்ள புத்தாண்டில் பிரிவினைவாதத் திற்கும் தீவிரவாதத்திற்கும் இடமில்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.**



ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர், எதிர்வரும் காலங்களில் ஆயுதங்களை எடுக்க எவரையும் அனுமதிக்கப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டு ள்ளார்.

சிறைச்சாலையின் இடக் கட்டுப்பாடுகள் மற்றும் சிறைகளில் கொரோனா வைரஸ் பரவுகின்ற போதும் பெரிய அளவிலான போதைப்பொருள் வலயத்தில் ஈடுபட்டுள்ள கைதிகள் விடுவிக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் வெளிநாட்டிலிருந்து போதைப்பொருள் வலையமைப்பில் ஈடுபட்டவர்களை கைது செய்ய இன்டர்போல் மூலம் 18 சிவப்பு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில்சட்டவிரோத போதைப் பொருள் வலையமைப்பைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் புதிய ஆண்டில் மேலும் பலப்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# உத்தரவை மீறிய பொலிஸார் பணி இடைநிறுத்தம்

(புத்தளம்)

முந்தல் பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றும் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள், உடன் அமுலுக்கு வரும் வகையில் பணியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர். புத்தளம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரால் அவர்கள் இவ்வாறு பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

முந்தல் பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் பொலிஸ் சார்ஜன், பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோரே இவ்வாறு பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

உயர் பொலிஸ் அதிகாரி ஒருவரின் அறிவுறுத்தலின்றி, வாகன வேகத்தை அளவீடு செய்யும் கருவியைப் பயன்படுத்தக் கூடாதென புத்தளம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், தனது வலயத்தில் சேவையில் உள்ள பொலிஸாருக்கு ஏற்கனவே உத்தரவிட்டிருந்தார்.

எனினும் அந்த உத்தரவை மீறி, கடந்த டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி, அதிகாலை முந்தல் பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் உத்தியோகத்தர்கள் இருவரும் வேக அளவீட்டு கருவியை எடுத்துச் சென்று கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது, சிலாபம் - புத்தளம் வீதியில் பயணித்த வாகனங்களின் வேகம் தொடர்பில் அவர்கள் அவதானம் செலுத்தியுள்ளனர்.

இதன்போது அவ்வழியால் வந்த கார் ஒன்றினை அவர்கள் அதிக வேகம் காரணமாக நிறுத்தியுள்ளனர். அந்த காரில், புத்தளம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரே இருந்துள்ளார்.

இந்நிலையிலேயே, தனது உத்தரவை மீறி, வேக அளவீட்டு கருவியை எடுத்து சென்றமை தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ-4)

# தேங்காய் இறக்குமதி

(கொழும்பு)

தேங்காய்க்கு நாட்டில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக தேங்காய் இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், அதனுடன் தொடர்புடைய தொழிற்றுறையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை குறைத்துக் கொள்ளும் வகையில் தேங்காய் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் பி.எதிரிமான்ன தெரிவித்தார்.

இந்தியா, பிலிபைன்ஸ் மற்றும் வியட்நாமிலிருந்து தேங்காய் இறக்குமதி செய்யவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தேங்காய் தட்டுப்பாட்டிற்கு குறுங்கால தீர்வு வழங்கும் நோக்குடன் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# தனிமைப்படுத்தலை மீறிய 1900 பேருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறியதாக இது வரையில் 2,044 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களுள் 1900 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பில் ஆறு பொலிஸ் பிரிவுகளும், அவிசாவளை, ருவன்வெல்ல மற்றும் காத்தான்குடி ஆகிய பொலிஸ் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், அத்தியாவசிய தேவையின்றி அந்த பகுதிகளில் வசிப்பவர்கள் வேறு பிரதேசங்களுக்கு செல்வதோ, வெளிப்பிரதேசங்களில் இருப்பவர்கள் அந்த பிரதேசங்களுக்கு வருகைத்தரவோ அனுமதி வழங்கப்படமாட்டாது. அவ்வாறு எவரேனும் சென்றால் அது தண்டனைக்குரிய குற்றச் செயற்பாடாகும்.

அதனால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசித்து வரும் மக்கள் தொடர்ந்தும் தங்களது பிரதேசங்களில் இருப்பதுடன், உரிய சுகாதார சட்ட விதிகளை பின்பற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# கடித விநியோகம் தாமதம்

(கொழும்பு)

தபால் ரயில் சேவை போக்குவரத்தில் ஈடுபடாமையாலும் இலங்கை போக்குவரத்து சபைக்குரிய பேருந்துகளை பயன்படுத்த முடியாமையாலும் கடிதங்களை விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

திணைக்களத்தின் வாகனங்களை மாத்திரம் பயன்படுத்தியே தற்போது கடிதங்கள் விநியோகிக்கப்படுவதாக தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன குறிப்பிட்டார்.

இதனால் கடிதங்களை பகிர்ந்தளிப்பதில் இரண்டு நாட்களுக்கு மேல் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கொழும்பு மற்றும் அதிக மக்கள்தொகை உள்ள பகுதிகளிலேயே கடிதங்களை பகிர்ந்தளிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தபால்மா அதிபர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஐ-4)

# உடல்களை அடக்கம் செய்ய அரசு அனுமதி வழங்க வேண்டும்

## மைத்திரி கோரிக்கை



(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்யும் உரிமையை முஸ்லிம் மக்களுக்கு வழங்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார அமைப்பு அடக்கம் செய்ய அனுமதி வழங்கியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவில் வெளியாகும் த ஹிந்து பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றால் இறக்கும் அனைத்து நபர்களின் உடல்களை தகனம் செய்ய வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி அங்கம் வகிக்கும் தற்போதைய பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கு எதிராக அவர் கருத்து வெளியிட்டுள்ளமை அனைத்து தரப்பினரின் கவனத்தையும் திருப்பியுள்ளது. (ஐ-4)

# 3ஆயிரத்து 772 பேர் ஆசிரியர் சேவையில்

(கொழும்பு)

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய 3,772 பேரை சேவையில் இணைத்துக்கொள்ளும் செயற்பாடு எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் முன்னெடுக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளவர்களுக்கான நியமனக் கடிதங்களை அவர்களின் வீடுகளுக்கே அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் பீ. கே.எஸ்.சுபோதிகா குறிப்பிட்டார். எதிர்வரும் 11 ஆம் திகதி பாடசாலை கல்வி செயற்பாடுகள் ஆரம்பமாவதற்கு முன்னர், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் டிப்ளோமா கற்கை நெறிகளை பூர்த்தி செய்தவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# மாகாண சபையை பலப்படுத்தி நாம் சுதந்திரமாக வாழ வேண்டும்

## பிரதேச சபை தவிசாளர் கோரிக்கை

**(சாவகச்சேரி)**

**அரசாங்கம் மாகாணசபைகளைப் பலப்படுத்தி சிறுபான்மை இனங்களை அவர்களுக்கு உரித்தான சுதந்திரத்துடன் வாழ வழிவகுக்க வேண்டும் எனச் சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

அண்மையில் பிரதேச சபையில் இடம்பெற்ற வருட இறுதி அமர்வில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

எமக்கு கிடைத்திருக்கும் அரிய வாய்ப்பு மாகாணசபை முறைமை. இதனூடாக பல வரப்பிரசாதங்களை நாம் அனுபவிக்க முடியும். மாகாணசபை முறைமையை இல்லாதொழிப்பதனூடாக சிறுபான்மையினங்களை ஒதுக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. அதனை ஒட்டியே அமைச்சர் சரத் வீரசேகரவின் கருத்து அமைகிறது. நாம் இந்த அரசாங்கத்திடம் விநயமாகக் கேட்டுக்கொள்வது யாதெனில் பாதிக்கப்பட்டவர்களின் மனங்களைப் புரிந்துகொண்டு அவர்களை தமக்குரிய சுதந்திரத்தோடு வாழ வழி வகுத்துத் தர வேண்டும்.

அத்துடன் இந்த நாட்டில் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும். அரசு அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (நி-4-30)

# தீக்காயத்திற்கு உள்ளான சிறுமி வைத்தியசாலையில்

(கரணவாய்)

பருத்தித்துறை மருதங்கேணி பகுதியில் தீக்காயத்திற்கு உள்ளான நிலையில் சிறுமி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில், நாய் உண்ணியைப் பெற்றோல் ஊற்றி எரிக்க முற்பட்ட வேளை பெற்றோல் குறித்த சிறுமி உடலில் பட்ட தைத் தொடர்ந்து உடலில் தீ பரவ ஆரம்பித்தது.

தீ பரவலைத் தொடர்ந்து சிறுமி ஆபத்தான நிலையில் மருதங்கேணி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (நி-4-60)




யா/குடமியன் அ.த.க பாடசாலைக்கு பாட சாலையின் பழைய மாணவன் வேலாயுதபிள்ளை விஜயகுமாரின் நிதியுதவியில் நவின நிழல் பிரதி இயந்திரம் அண்மையில் அன்பளிப்பு செய்யப் பட்டது. (படம்- சுபேசன்)

# சுதேச ஆயுர்வேத மருத்துவத்துறைக்கு புதிய ஆணையாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுதேச மற்றும் ஆயுள்வேத மருத்துவ ஆணையாளராக வைத்திய கலாநிதி கனகேஸ்வரி ஜெபநாமகணேசன் வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய ஆணையாளராக பதவியேற்ற வைத்திய கலாநிதி திருமதி கனகேஸ்வரி ஜெபநாமகணேசன் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை முதல் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (நி-4)

# குற்றச் செயல்களை கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண தற்போதைய நிலைமை தொடர்பில் அண்மையில் கருத்துரைக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த வருடம் உலகத்தினை அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள கொரோனா வைரஸ் அச்சத்துடன் கடந்து சென்றுள்ளது.

அதேபோல் எதிர்வரும் காலத்திலும் உலக நியதிக்கு இணங்க வட பகுதியிலும் கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்துவதற்குரிய கட்டுப்பாடுகள், நடைமுறைகளை பின்பற்றி பொது மக்களைச் செயற்படுத்துவதற்கு பொலிஸார் பூரண ஒத்துழைப்பினை வழங்குவார்கள்.

அதேபோல வடக்கு மாகாணத்தில் கடந்த வருடத்தை விட குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்குரிய மேலதிகமான சில வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளோம்.

பொது மக்களை நல்வழிப்படுத்தி குற்றச் செயல்களை தடுத்து வடக்கு மாகாணத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதே எமது நோக்கமாக காணப்படுகின்றது.

அத்துடன் வட மாகாணத்தில் தற்போது இடம்பெறுகின்ற சில கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் செயற்பாடுகள் தொடர்பில் முப்படையினரும் பொலிஸாரும் இணைந்து அதனை கட்டுப்படுத்துவதற்கு உரிய வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.



சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தி பொது மக்கள் சுதந்திரமாக வாழ பொலிஸார் பூரண ஒத்துழைப்பினை வழங்குவார்கள். அதேபோல பொதுமக்களுக்கு ஒரு அழைப்பினை விடுக்க விரும்புகின்றேன்.

அதாவது சட்டவிரோத செயற்பாடுகள், போதைப்பொருள் மற்றும் கொள்ளை செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் தொடர்பில் ஏதாவது தகவல்கள் அறிந்திருந்தால் அதனை உடனே தெரியப்படுத்தினால் குறித்த சட்டவிரோத செயற்பாடுகளை தடுத்து நிறுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4-33)

# பிரதேசசபைக்குரிய வசதிகளை செய்து தருமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபைக்குச் சொந்தமாக ஜே.சி.பி வாகனம் இல்லாமையால் இயற்கை அனர்த்தங்களின் போது பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கி வருவதாக பிரதேசசபை சுட்டிக்காட்டியுள்ளது.

அண்மையில் சாவகச்சேரி பிரதேசசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே இவ் விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

சபைக்கென சொந்தமாக ஜே.சி.பி வாகனம் இல்லாமையால் வெள்ள அனர்த்தங்களின் போது வாய்க்கால் வெட்டுதல் மற்றும் வெள்ளம் கடத்தல் ஆகிய செயற்பாடுகளின் போது பெரும் சிரமங்களை பிரதேசசபை எதிர்நோக்கி வருகிறது.

அண்மையில் ஏற்பட்ட புரேவித் தாக்கத்தின் போது தென்மராட்சியின் பல பாகங்களிலும் வெள்ளம் தேங்கி அனர்த்தம் ஏற்பட்டிருந்தது.

இதன்போது ஜே.சி.பி.வாகனம் சொந்தமாக இல்லாமையால் பெரும் இடர்பாடுகளைச் சந்திக்க நேர்ந்தது.

தற்போது உள்ளூராட்சி சபைகள் சபை நிதியிலிருந்து வாகனம் கொள்வனவு செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4-30)



# பிறர் மீது சாட்டுதல் செய்யும் மனநிலையை தவிர்த்து பொறுப்பினை உணர்ந்து செயலாற்றுவோம்

## மேல் நீதிமன்ற நீதிபதி

(யாழ்ப்பாணம்)

**எமது பொறுப்பினை உணர்ந்து** செயலாற்றுவோம். பிறர் மீது சாட்டுதல் செய்யும் மன நிலையைக் கைவிடுவோம்" என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நீதித்துறை உத்தி யோகத்தர்களின் புத்தாண்டு உறுதி உரை நிகழ்வில் தலைமையுரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எம்மை நாடிவரும் மக்களுக்கு நாம் உரிய தேவைகளை செய்து கொடுக்க வேண்டும்.

எமது கடமையை உணர் ந்து அதற்கு தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறானதொரு சேவை சிறந்த அர்ப்பணிப்பான சேவை என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4-33)

# எழுவருக்கு கொரோனா

(கொழும்பு)

பேலியகொட பகுதியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட புதிய மெனிங் சந்தையில் 7 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த மெனிங் சந்தையில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில்7 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அப்பகுதிக்கு பொறுப்பான பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட7 கொரோனா தொற்றாளர்களும் மேலதிக பரிசோதனைக்காக கொரோனா சிகிச்சை மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


## வேலை ஆட்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது ஸ்தாபனத்திற்கு பின்வருவோர் தேவை.

I. ஒட்டு வேலை செய்வதற்கு வெல்டரும் உதவியாளரும் தேவை
வெல்டருக்கு மாதம் -40,000/= திலிருந்து
உதவியாளருக்கு - 25. 000/= திலிருந்து வழங்கப்படும்.

II. ஸ்பிறே பெயின்ரிங் தெரிந்தவர்கள் தேவை.
மாதம் 40,000/= திலிருந்து வழங்கப்படும்.

III.வயறிங் வேலை (Three Face wairing) தெரிந்தவர்கள் தேவை.
மாதம் - 35,000/= இலிருந்து வழங்கப்படும்.

தொடர்பு - T.P- 0740490003

(5152)

## Technicians தேவை

கொழும்பில் இயங்கி வரும் டிஷ் ஆண்டெனா மற்றும் கேபிள் டிவி உதிரிப்பாக விற்பனை மற்றும் சேவை நிறுவனத்திற்கு கீழ்க்காணும் வேலைக்கு ஆட்கள் தேவை.

01. டிஷ் ஆண்டெனா ரிஸீவர்கள் திருத்தக்கூடிய எலெக்ட்ரோனிக் டெக்னீசியன் திறமைக்கு ஏற்ப Rs.50.000/ வரை +over time

02. டிஷ் ஆண்டெனா பொருத்துநர் திறமைக்கு ஏற்ப Rs.50,000/ +over time

03. விற்பனை உதவியாளர் திறமைக்கு ஏற்ப Rs.30, 000/ வரை உணவு, தங்குமிடம் உண்டு

07/01/2021 இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

Contact kumar @ 0777710785

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

Canada VISA

நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்

STUDENT VISA

- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம்
- Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்

VISIT VISA பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்

REFUSED VISA உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

Hotline: 0777-761 346

Sponsor Letters Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

flex Institute

6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk

10 வருட கால நம்பிக்கையான சேவை

## வேலணை பிரதேச சபை பகிரங்க ஏல அறிவித்தல்

சாட்டி வாகனத் தரிப்பிடமும் மலசலகூடமும் சேர்ந்த சற்றுலா மையம், சிற்றுண்டிச்சாலைகள், மண்டைதீவு வாராந்த சந்தை என்பவற்றை 18.01.2021 முதல் 31.12.2021 வரை குத்தகைக்கும் நயினாதீவு கடைகளை நீண்டகால குத்தகைக்கும் வழங்குவதென தீர்மானித்துள்ளோம். எனவே இதில் பங்கு பெற்ற விரும்புபவர்கள் ஆள் அடையாளத்தை நிரூபிக்கும் வகையிலான உரிய ஆவணங்களுடன் அதன் நிழற் பிரதியுடனும் மீளளிக்க முடியாத வைப்புத் தொகையான ரூபா 500.00 இனை செலுத்தி பகிரங்க ஏலத்தில் பங்குபற்றலாம். இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகம், உப அலுவலகங்களில் கடமை நேரத்தில் பார்வையிடலாம்.

பகிரங்க ஏலம் நடைபெறும் திகதி :- 11.01.2021 திங்கட்கிழமை பி .ப.02.00 மணி

பகிரங்க ஏலம் நடைபெறும் இடம் : -வேலணை பிரதேச சபை தலைமைக் காரியாலயம் வங்களாவடிச் சந்தி, வேலணை.

தவிசாளர்
பிரதேச சபை, வேலணை.

(c-1076)


# சவால்களை வெற்றிகொள்ள அனைவரும் ஒன்றிணைவோம்

## சபாநாயகர் அழைப்பு

**(கொழும்பு)**

**கொவிட்-19 சூழல் காரணமாக ஏற்பட்டுள்ள சவால்களை வெற்றிகொள்ள ஒரே தேசமாக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.**

இந்த வருடத்துக்கான பாராளுமன்ற ஊழியர்கள் உறுதியுரை எடுத்துக்கொள்ளும் நிகழ்வு பாராளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த வருடம் இலங்கைக்கு மாத்திரமன்றி முழு உலக நாடுகளுக்கும் நிச்சயமற்ற வருடமாக அமைந்தது. இந்த நிலைமை இவ்வாண்டும் நீடிக்கக்கூடும். எனவே சகலரும் புரிதலுடனும் கவனத்துடனும் செயற்படுவது அவசியமாகும். அனைவரையும் ஒன்றிணைத்து செயற்படுவதன் ஊடாக கொவிட்-19 சவாலை வெற்றி கொள்ள முடியும்.

கொவிட் சவாலுக்கு மத்தியிலும் ஜனநாயகத்துக்காக இலங்கையர்கள் பல வெற்றிகளைப் பெற்றுள்ளனர். வருடத்தின் ஆரம்பத்தில் நாட்டின் விவகாரங்களை முன்னெடுத்துச் செல்ல பாராளுமன்றம் இருக்கவில்லை.

எனினும் பாராளுமன்றத் தேர்தலை நடத்தி மக்கள் புதிய அரசாங்கத்தையும் புதிய பாராளுமன்றத்தையும் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்புக் கிடைத்தது.

அனைவரும் பொது நன்மைக்காக உழைக்க வேண்டும். கடந்த வருடத்தில் புதிய



பாராளுமன்றம் மற்றும் அரசாங்கத்தை அமைக்கக் கிடைத்தமை குறிப்பிடத்தக்க வெற்றியாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# ராஜபக்ஷ குடும்பத்திற்கு வெளியே உள்ளவரே அடுத்த ஜனாதிபதி

## என்கிறார் பிரபல ஜோதிடர்


(கொழும்பு)

நாட்டில் அடுத்த முறை புதிய தலைமைத்துவம் ஒன்று கிடைக்கவுள்ளதாக பிரபல சோதிடர் சந்திரசிறி பண்டார தெரிவித்துள்ளார்.

அந்த நபர் தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சராக செயற்படுவதாகவும் அவர் சிம்ம ராசி உடையவர் எனவும் அவர் ராஜபக்ஷ குடும்பத்திற்கு வெளியே உள்ள ஒருவர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவரது பெயரை தற்போது வெளிப்படுத்த முடியாது. அவரது ஜாதகம் என்னிடம் உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# மக்களுக்கான பொறுப்பை நிறைவேற்றுவோம்



(கொழும்பு)

பொதுஜன பெரமுன பெற்றுக் கொண்ட வெற்றியை பாதுகாத்து சவால்களுக்கு மத்தியில் நாட்டு மக்களுக்காக ஏற்றுக் கொண்ட பொறுப்பினை முறையாக செயற்படுத்துவோம் என பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புதுவருட பிறப்பு அனுஸ்டானத்தில் ஈடுபட்டதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் பூகோளிய மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள கொவிட்-19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் நிறைவு செய்துள்ளது.

கட்சி என்ற ரீதியில் பெற்றுக் கொண்ட மக்களாணையை பாதுகாக்கும் பொறுப்பு உயர் மட்ட தலைவர்களுக்கும் கிராமிய உறுப்பினர்களுக்கும் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் அனைவருக்கும் உண்டு.

சிறந்த கொள்கையினை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கொண்டுள்ளது. அனைத்து தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றி பெறும் பலம் உள்ளது.

2021 ஆம் ஆண்டு மக்களுக்கு சேவையாற்றும் ஆண்டாக உள்ளது.

அனைத்து சவால்களுக்கு மத்தியில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை பொதுஜன பெரமுன நிறைவேற்றும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# ஸ்புட்னிக் வி தடுப்பூசி அறிவியல் தரவுகளையும் பகிர்ந்து கொள்ளத்தயார்

## இலங்கைக்கு ரஷ்யா உறுதி

(கொழும்பு)

**ஸ்புட்னிக் வி தடுப்பூசி முன்னேற்றங்கள் குறித்து தேவையான அனைத்து அறிவியல் தரவுகளையும் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருப்பதாக ரஷ்யா உறுதியளித்துள்ளது.**



இலங்கை சுகாதார அமைச்சு, ரஷ்ய சுகாதார அமைச்சு மற்றும் ரஷ்யாவின் தொற்று நோயியல் மற்றும் நுண்ணுயிரியல் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது குறித்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

ஒன்லைன் மூலம் இடம் பெற்ற இந்த சந்திப்பின் போது தடுப்பூசி உற்பத்தியில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம், அதன் பாதுகாப்பு மற்றும் செயற்றிறன், மருத்துவ பரிசோதனைகளின் முடிவுகள் மற்றும் ஒப்புதல்களின் நிலை குறித்து இருதரப்பும் விவாதித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் தொற்று நோயை எதிர்கொள்ளக் கூடிய சர்வதேச விஞ்ஞான ஒத்துழைப்பின் முக்கியத்தும் மற்றும் இரு நாடுகளின் சுகாதாரம் தொடர்பான உறவை விரிவுபடுத்துவது குறித்தும் இந்த சந்திப்பின் போது முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வைரஸ் மாற்றங்கள் மற்றும் இலங்கையின் நோய்த்தடுப்பு திட்டம் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி குறித்து இலங்கை தரப்பு ரஷ்ய நிபுணர்களுக்கு விளக்கமளித்ததாகவும் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. (ஜ-4)

# கொரோனா தொற்றுள்ள தாய்மார் பிரசவித்துள்ள 40 குழந்தைகள்

(கொழும்பு)

கொவிட்-19 தொற்றுக்குள்ளான 38 தாய்மார்கள், கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையில் கடந்த டிசெம்பர் முதலாம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையிலான ஒரு மாத காலத்தில் 40 குழந்தைகளை பிரசவித்துள்ளதாக குறித்த வைத்தியசாலையின் பிரசவ மற்றும் மகப்பேற்று வைத்திய நிபுணர் மயூரமான தேவாலகே தெரிவித்தார். அனைத்து தாய்மார்களும் நலமான குழந்தைகளை பிரசவித்துள்ளதுடன் பிரசவத்தின் பின்னர் இரு குழந்தைகளுக்கு மட்டும்கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. (ஜ-4)

# அழிந்து வரும் தீவு

(புத்தளம்)

புத்தளம் மாவட்டம் முத்து பந்திய தீவிலுள்ள வீடுகள் கடல் நீரில் மூழ்கியுள்ளன.

சுமார் மூன்றடி உயரமான கடல் நீர் திடீரென கரை புகுந்ததாக புத்தளம் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

தீவின் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்ட கல் வேலியில் இருந்த கற்கள் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளன.

கடல் அலையுடன் வந்த குப்பைகள் வீடுகளுக்கு அருகில் குவிந்து கிடப்பதாகவும் அவர் கூறியுள்ளார். சுனாமி ஏற்பட்ட போது கூட இந்தளவு கடல் நீர் தீவுக்குள் வரவில்லையென அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

# பிரதேச சபை தவிசாளர்கள் இருவர் உடன் பதவி நீக்கம்

(கொழும்பு)

வெலிகந்த மற்றும் ரம்பெவ பிரதேச சபை தவிசாளர்கள் தற்காலிக பணிநீக்கம்செய்யப்பட்டுள்ளனர்.

வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் விடுத்துள்ள அறிவுறுத்தலின் பிரகாரம் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த பணிநீக்கம் தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள பிரதேச சபை தவிசாளர்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் காணப்படுமாயின் எதிர்வரும் 3 மாத காலப்பகுதிக்குள் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# அரசின் அசமந்தப் போக்கே இரண்டாம் அலை-பொன்சேகா சாடல்

(கொழும்பு)

நாட்டில் புதிய நோயாளிகள் அடையாளம் காணப்படுகின்றமைக்கு அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர், அரசாங்கத்தின் அசமந்தப் போக்கே நாட்டில் கொரோனாத் தொற்றின் இரண்டாவது அலை ஏற்படக் காரணம் என்றும் குற்றம் சாட்டினார்.

அத்துடன் தொற்றின் இரண்டாவது அலை ஏற்படக் கூடும் என எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில் அரசாங்கம் அதனை எதிர்கொள்ளத் தயாராக இருக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த சுகாதாரத் துறையினர், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் உள்ளிட்ட தரப்பினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட போதிலும் அரசாங்கத்தின் இயலாமை காரணமாக அதனை கட்டுப்படுத்த முடியாமல் போனதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மாகாண சபையை மீண்டும் செயற்பாட்டுக்குக் கொண்டு வருவதானது முட்டாள்தனமான விடயம் எனவும் மாகாண சபைக்கு புதிய முகங்களையே மக்கள் எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# கொரோனா சடலங்களை அடக்கம் செய்வதால் வைரஸ் பரவும் என்பதற்கு ஆதாரமில்லை

## மருத்துவக் கல்லூரி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கொரோனாவினால் மரணமாவோரின் உடலங்களை அடக்கம் செய்தால் வைரஸ் பரவல் அதிகரிக்கும் என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்று மருத்துவ கல்லூரி ஒன்று தெரிவித்துள்ளது.

இலங்கை சமூக மருத்துவக் கல்லூரி (College of Community Physicians of SriLanka) இந்த கருத்தை வெளியிட்டுள்ளது.

உலகளாவிய வழிகாட்டுதல்களின்படி இலங்கையின் ஒவ்வொரு குடிமகனும் குடிமகளும் தகனம் செய்ய அல்லது அடக்கம் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும் என்று கல்லூரி சுட்டிக்காட்டியுள்ளது.

கொரோனாத் தொற்று வேகமாகப் பரவிய சூழ்நிலை என்பதால், தொற்றுநோயின் ஆரம்பத்தில் அரசாங்கத்தின் கட்டாய விதியை ஏற்றுக்கொண்டதாக இலங்கை சமூக மருத்துவக் கல்லூரி கூறியுள்ளது.

எனினும் அடுத்தடுத்த சான்றுகளின் அடிப்படையில் அந்த ஏற்றுக்கொள்ளலை மறுபரிசீலனை செய்ய தாம் தூண்டப்பட்டதாக கல்லூரி தெரிவித்துள்ளது. கொரோனா தொடர்பில் உலகில் 85 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அறிவியல் இலக்கியங்கள் வெளியாகியுள்ளன.

எனினும் கொரோனாவினால் இறந்த உடலத்தின் வழியாக வைரஸ் பரவுவதாக எந்த ஒரு பதிவும் வெளியாகவில்லை என்றும் கல்லூரி தெரிவித்துள்ளது.

நிலத்தடி நீர் வழியாக நேரடியாக நோய் பரவுகின்ற கூற்றுக்கள் அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை என்றும் குடிநீர் மூலம் வைரஸ் பரவக்கூடும் என்பதற்கான அறிகுறி எதுவும் இல்லை என மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ஜ-4)

# தேசத்திற்காக உயிர்த்தியாகம் செய்தவர்களுக்கு பிரதமர் அலுவலக ஊழியர்கள் அஞ்சலி

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டிற்காக பிரதமர் அலுவலக ஊழியர்கள் தத்தமது பணிகளை ஆரம்பிக்கும் நிகழ்வு, பிரதமரின் செயலாளர் காமினி செனரத் தலைமையில் அலரிமாளிகையில் இடம்பெற்றது.



நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற குறித்த நிகழ்வில் பிரதமரின் செயலாளர் காமினி செனரத், தேசியக் கொடி ஏற்றியதைத் தொடர்ந்து புதிய வருடத்திற்கான பணிகளை ஆரம்பிப்பதற்கான சந்திப்பு இடம்பெற்றது.

முழு நிகழ்வும் சமூக இடைவெளி பேணல் உள்ளிட்ட முறையான சுகாதார வழிகாட்டல்களுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முதலில் இராணுவத்தினர் உள்ளிட்ட தேசத்திற்காக உயிர்த்தியாகம் செய்த அனைவரையும் நினைவுகூர்ந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. புத்தாண்டில் பணிகளை ஆரம்பிக்கும்போது கொவிட்-19 வைரஸ் பரவலை தடுப்பதற்கான ஒவ்வொருவரது பொறுப்பு குறித்தும் வலியுறுத்தப்பட்டது. (ஜ-4)

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 290

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2051 | 03.01.2021 | தொலைபேசி : 021 222 3378



## தமிழ் அரசியலில் ஏற்பட்ட தாழமுக்கம்









உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

## தமிழர் பகுதியில் அரசியல் தாழமுக்கம்

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்களில் விதானையார் விசுவலிங்கத்தைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

2021 ஆம் ஆண்டு இனிய ஆண்டாக அமைய அனைவருக்கும் வாழ்த்துக்கள். வாத்தியார் வைத்திலிங்கம் புத்தாண்டு வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

புத்தாண்டோட யாழ்ப்பாண மாநகர சபையிலும் நல்லூர் பிரதேச சபையிலும் ஆட்சி மாற்றம் நடந்திருக்குது. கங்காணி கார்த்திகேயன் கூறினார்.

விதானையார்: யாழ்ப்பாண மாநகர சபையிலும் நல்லூர் பிரதேச சபையிலும் நடந்த ஆட்சி மாற்றம் சாதாரணமான விடயமல்ல. அது தமிழர்களின்ர அரசியலில் எப்பவும் பேசுபடுபொருளாக இருக்கும்.

விதானையார் இவ்வாறு கூறியதும் என்ன விதானையார் சொல்லுறியள். எனக்கெண்டால் ஒண்டும் புரியல்ல என்றார் மூப்பர்.

விதானையார்: மூப்பர் அண்ணே! ஆட்சி மாற்றம் நடந்த யாழ்ப்பாணம் மாநகர சபையையும் நல்லூர் பிரதேச சபையையும் ஒருக்கால் ஆராய்ந்து பாருங்க.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்ர வரவு-செலவுத்திட்டம் இரண்டு தடவைகள் தோற்கடிக்கப்பட்டதனால், முதல்வரும் தவிசாளரும் தத்தம் பதவிகளை இழக்க வேண்டியதாயிற்று.


இருந்தும் ஆனல்ட்டை மீளவும் முதல்வர் பதவிக்குப் போட்டியிட அனுமதித்த கூட்டமைப்பு, நல்லூர்ப் பிரதேச சபையின்ர தவிசாளராக இருந்தவரை ஓரங்கட்டி விட்டுது.

கங்காணி: இதில என்ன அரசியல் இருக்குது விதானையார்.

விதானையார்: இஞ்ச தான் பெரும் அரசியல் நடந்திருக்குது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்ர உறுப்பினர்கள் மணிவண்ணனையும் மயூரனையும் ஆதரித்திருக்கினம் எண்டால், யாழ்ப்பாண மாநகர சபையிலும் நல்லூர் பிரதேச சபையிலும் இருக்கின்ற முன்னணியின்ர உறுப்பினர்கள் மணிவண்ணனின்ர ஆதரவாளர்கள் என்பது உறுதியாகிறதல்லோ.

சிறாப்பர்: அதுதானே பத்து உறுப்பினர்களை கட்சியில இருந்து நீக்கிறதாக முன்னணியின்ர தலைமை அறிவித்திருக்குது.

சாத்தியார்: அப்ப பேரவையில இருந்து சிலரை நீக்கவேணும் எண்ட தாழமுக்கம் இப்ப முன்னணிக்குள்ள நகர்ந்திருக்கிறதாமோ.



சிறாப்பர்: என்ன சாத்திரியார் சொல்லுறியள்.

சாத்திரியார்: இல்ல முந்தி தமிழ் மக்கள் பேரவையில இருந்து சுரேஷ் பிரேமச்சந்திரனையும் தர்மலிங்கம் சித்தார்த்தனையும் விலத்த வேணும் எண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்ர தலைமை சொன்னது.

இப்ப தமிழ்த் தேசிய முன்னணியில இருந்து அந்தக் கட்சியில போட்டியிட்டு வெற்றி பெற்று உள்ளூராட்சி சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட பத்துப் பேரை நீக்கிறதாக முன்னணி அறிவிக்கிறதெண்டால், அதுவொரு தாழமுக்கம்தானே.!

வாத்தியார்: என்னவோ எனக்கு இதுகள் பற்றி ஒண்டும் விளங்கல்ல. ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இரண்டு பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றுவதற்கு முன்னணியின்ர மாநகர, பிரதேச சபை உறுப்பினர்களின் வகிபாகம் காத்திரமானது.

இதனைத் துஷ்பிரயோகம் செய்யாமல் தம்பி கஜேந்திரகுமார் பார்த்துக்கொள்ள வேணும் அவ்வளவுதான் எனக்குத் தெரிந்தது.

விதானையார்: வாத்தியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. அதோட யாழ்ப்பாண மாநகர சபையிலும் நல்லூர் பிரதேச சபையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியை இழந்ததால் கூட்டமைப்புக்குள்ளவும் தாழமுக்கம் உருவெடுத்துள்ளது என்பதையும் நாங்கள் சொல்லித்தானாக வேணும்.

பண்டிதர்: என்ன இண்டைக்கு ஒரே தாழமுக்கமாக இருக்குது.

விதானையார்: தாழமுக்கம் தானே புயல், கனமழை, இடி, மின்னல் இதுகளை ஏற்படுத்தும். அந்த புயல், கனமழை, இடி, மின்னல் அரசியலில் ஏற்பட்டால் அது அரசியல் தாழமுக்கம் தானே.

மூப்பர்: அது சரி, கூட்டமைப்புக்குள்ள என்னெண்டு குழப்பம் ஏற்படும்.

விதானையார்: மூப்பர் அண்ணே! யாழ்ப்பாண மாநகர சபையையும் நல்லூரையும் கூட்டமைப்பு இழந்த போது, சுமந்திரரும் மாவையரும் கருத்தில முரண்படத் தொடங்கிற்றினம்.

இதைச்சமாளித்து நிலைமையைச் சுமுகமாக்க கூட்டமைப்பிற்குள்ளும் ஒருத்தரும் இல்லைப் போல.

இந்த நிலைமை நீடித்தால் கூட்டமைப்புக்குள்ள ஏற்பட்ட தாழமுக்கம் வலுக்குறையாதல்லோ.

பண்டிதர்: அங்கயும் தாழமுக்கம். இஞ்சயும் தாழமுக்கம் எண்டால் எங்கட பிரச்சினைகளை ஜெனிவாவில கையாள்வதிலும் குழப்பங்கள் ஏற்படச் செய்யும்.

இந்த விடயத்தில நாங்கள் மிக விழிப்பாக இருந்து தமிழ் அரசியல் தரப்புகளை ஒற்றுமைப்படுத்தி காரியம் பார்க்க வேணும்.

இவ்வாறு பண்டிதர் கூற, அதனைத் தானும் ஏற்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

## யாழ்.மாநகர மேயர் விவகாரம்

# உடைப்பெடுக்கும் குளங்களாய் உருமாறிய உட்கட்சிப் பூசல்கள்

வடபுலத்தில் இப்போது அரசியல் பரபரப்பு என்றால் அது யாழ்.மாநகர மேயர் விவகாரமே எனலாம்.

ஆம், யாழ்.மாநகர மேயராக சட்டத்தரணி வி.மணிவண்ணன் கடந்த புதன்கிழமை பதவியேற்றுக் கொண்டார்.

இதுவே இப்போதைய பரபரப்பாக இருந்து வருகிறது. இது விடயத்தில் சமூக வலைத்தளங்களில் இருதரப்பு வாதங்களும் விவாதங்களும் நடந்து கொண்டே இருக்கின்றன.

யாழ்.மாநகர சபையின் மேயராக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தமிழரசுக் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இமானுவேல் ஆனல்ட் 2018 ஆம் ஆண்டு மார்ச் 26 ஆம் திகதி மேயராகத் தெரிவு செய்யப்பட்டு அவரின் கீழ் யாழ்.மாநகர ஆட்சி அதிகாரங்கள் கொண்டு வரப்பட்டன.

என்னதான் சிறப்பாகச் செயற்பட்டாலும் அரசியல் என்பது கத்திமேல் நடப்பதற்கு ஒப்பானது என்பதை இப்போது முன்னாள் மேயர் ஆனல்ட் புரிந்து கொண்டிருப்பார் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமேதும் இல்லை.

உள்ளூராட்சி அமைப்புக்களைப் பொறுத்த வரை நல்லாட்சிக் காலப் பகுதிகளில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கும் இணக்கப்பாடு இருந் ததை அவதானிக்க முடிந்திருந்தது.

சகல பிரதேச சபைகளிலும் கணிசமான ஆசனங்களைப் பெற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆட்சி அமைத்து விடக் கூடாது என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிக உறுதியாக இருந்தமையே அதற்கான காரணம் எனலாம்.

அதன் விளைவு சில சபைகளை இழந்தாலும் சில பேரம் பேசல்களுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனது ஆட்சியை அநேக இடங்களில் நிலை நிறுத்தியது.

நல்லாட்சி அரசின் வீழ்ச்சியை அடுத்து ராஜபக்ஷ ஆட்சி மலர்ந்ததன் பின் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் போக்கு மாற்றமுற, அது கூட்டமைப்பிற்கு இறங்குமுகமானது என்பதை அனைவராலும் உணர்ந்து கொள்ள முடியும்.

அதற்கு தகுந்த உதாரணமே யாழ்.மாநகர சபையின் தற்போதைய நிலை என்று கூடச் சொல்லலாம். கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்குப்பின் யாழ்.மாநகர சபையினால் கொண்டு வரப்பட்ட வரவு-செலவுத் திட்டத்திற்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி கடும் எதிர்ப்பை வெளியிட்டது.

ஏலவே தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி சார்ந்த உறுப்பினர்கள்

> **ஏலவே தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி சார்ந்த உறுப்பினர்கள் தமது எதிர்ப்பைத் தொடர்ந்து தெரிவித்து வந்த நிலையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களின் எதிர்ப்பும் இணைந்த போது அது பலமான எதிர்ப்பாக எழுந்ததன் விளைவு இரண்டாவது முறையும் யாழ்.மாநகர சபையின் வரவு-செலவுத் திட் டம் தோற்கடிக்கப்பட்டது.**

தமது எதிர்ப்பைத் தொடர்ந்து தெரிவித்து வந்த நிலையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களின் எதிர்ப்பும் இணைந்த போது அது பலமான எதிர்ப்பாக எழுந்ததன் விளைவு இரண்டாவது முறையும் யாழ்.மாநகர சபையின் வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது. இருமுறை தோற்கடிக்கப்பட்டதன் விளைவு யாழ்.மேயர் பதவியில் இருந்து ஆனல்ட் நீக்கப்பட்டார்.

இதன் பின்பு தான் பிரச்சினை எழ ஆரம்பித்தது. ஆம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் ஆனல்டை முதல்வராக்க நினைத்தது.

அதற்கு சபையில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். ஆளும்-எதிர்க்கட்சிகளில் இருவர் போட்டியிட்டு யாருக்கு அதிக வாக்கு கிடைக்கிறதோ அவரே முதல்வர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மீண்டும் ஆனல்டை முதல்வராக்க நினைத்தால் மீண்டும் அவரை தோற்கடிப்போம் என எதிர்க்கட்சிகள் எச்சரித்தும் ஏனோ மீண்டும் ஆனல்டே மேயர் வேட்பாளரானார். ஆனல்டை எதிர்த்து சட்டத்தரணி வி.மணிவண்ணன் போட்டியிட்டார்.

ஏலவே தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியில் இருந்து மணிவண்ணனை நீக்கியதாக கட்சி தலைமை அறிவித்ததும் மணிவண்ணன் தானே கட்சியின் அமைப்பாளர் எனச்செயற்பட்டதும் இது விடயம் நீதிமன்றம் வரை சென்று விட்ட நிலையில்,

மணிவண்ணனுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஆதரவு தெரிவிக்க மாட்டார்கள். எனவே சுலபமாக ஆனல்ட் வென்று விடுவார் என்ற தழிழரசுக் கட்சித் தலைமையின் சிந்தனையை தகர்த்தெறிந்து மணிவண்ணனுக்கு வாக்களித்தனர் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் பலர்.

மணிவண்ணனுக்கு ஆதரவாக 21 வாக்குகளும் ஆனல்டுக்கு ஆதரவாக 20 வாக்குகளும் கிடைக்க மணிவண்ணன் யாழ்.மாநகர சபையின் புதிய மேயராக தெரிவானார்.

தமிழரசுக் கட்சியின் யாழ். மாநகர சபை உறுப்பினர் ம.அருள்



குமரன் நேரடி வாக்கெடுப்பில் நடுநிலை வகித்திருந்தார். அந்த ஒரு வாக்கே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மீண்டும் ஆட்சியமைக்க தடையானது எனவும் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மணிவண்ணனை ஏற்காத தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியில் போட்டியிட்ட அக் கட்சியின் சர்வதேச அமைப்பாளர் வி.மணிவண்ணன் தன்னிச்சையாகச் செயற்பட்டதாகக் கூறி அவரை கட்சியில் இருந்து விலக்குவதாக அறிவித்திருந்தது.

ஆனால் அவை எவற்றையுமே காதில் வாங்காத மணிவண்ணன் தானே அக்கட்சியின் அமைப்பாளர் எனவும் தன்னை கட்சியில் இருந்து யாராலும் நீக்க முடியாது எனக் கூறினார்.

மணிவண்ணனுக்கு யாழ்.மாநகர சபையில் ஆதரவாக வாக்களித்த உறுப்பினர்கள் அனைவரையும் நிறுத்துவோம் என மீண்டும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கூறியதுடன் மணிவண்ணன் ஈ.பி.டி.பியுடன் இணைந்து தான் யார் என்பதை தமிழ் மக்களுக்கு காட்டி விட்டார் என்று கூறி வருகிறது.

இது இவ்வாறிருக்க தமிழரசுக் கட்சிக்குள் மீண்டும் உட்பூசல்கள் எழ ஆரம்பமாகியிருக்கின்றமை வெளிவந்துள்ளது.

ஆம், ஆனல்டை மீண்டும் மேயராக தெரிவு செய்ய வேண்டாம் என பலதரப்பட்டவர்கள் தெரிவித்தும் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஆனல்டை களமிறக்கி தமிழரசுக் கட்சியை அதலபாதாளத்தில் தள்ளி விட்டார் என கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத் தரணி எம்.ஏ.சுமந்திரன் காட்ட மான அறிக்கை ஒன்றை விட, அதை மறுத்து அனைவரின் அனுமதியுடனேயே ஆனல்டை தெரிவு செய்தோம். கட்சியை வெளிப்படையாக விமர்சிக்கும் சுமந்திரனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மறுப்பு அறிக்கை விட,

“ஆஹா கிளம்பிட்டாய்யா கிளம்பிட்டான்” எனும் வடிவேலுவின் நகைச் சுவையே நினைவில் வந்தது. இது இவ்வாறிருக்க சமூக வலைத்தளங்களில் தமிழளரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவை விமர்ச் சித்து சுமந்திரன் ஆதரவாளர்கள் பதிவிட, அதற்கு மாவையின் ஆதரவாளர்கள் எதிர்ப்புத் தெரிவிக்க சமூக வலைத்தளங்கள் ரணகளமானது.

நடப்பவை அனைத்தையும் வைத்து பார்க்கின்ற போது கட்சி அரசியலை தவிர்த்து மக்களுக்கு சேவை செய்பவர்களையே மக்கள் விரும்புகின்றார்கள். இதன் விளைவே.

◆ முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் பாராளுமன்ற பிரவேசம்.

◆ எவ்வளவோ எதிர்ப்பிரசாரங்களைச் செய்தபோதும் இன்று வரை டக்ளஸ் தேவானந்தாவை வீழ்த்த முடியாமை.

◆ தற்போது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியில் இருந்து வெளியேற்ற நினைக்கும் மணிவண்ணனுக்கு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியில் கிடைத்திருக்கும் ஆதரவு.

◆ தமிழ் மக்களின் உரிமைசார் விடயத்தில் கவனம் எடுக்காத தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வீழ்ச்சி.


இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். என்னதான் அரசியல் சுயலாபங்களுக்காக யார் குத்தி முறிந்தாலும் மக்களின் எண்ணத்திற்கு விரோதமாய் நடந்தால் மக்கள் அவர்களுக்கு பாடம் கற்பித்தே தீருவர்.

இதைப் புரிந்து ஆட்சியை மக்களுக்காக, மக்கள் நலனுக்காக, மக்கள் அபிவிருத்திக்காக நடத்தினால் யாரையும் வீழ்த்த முடியாது. இதுவே யாழ்.மாநகர சபை விவகாரமும் கற்றுத் தந்திருக்கிறது.

— அபிமன்யு —




# பெரிய மீன் சிறிய மீன்



பிரபலமான தத்துவ வாதி ஒருவர் முல்லா வசிக்கும் ஊரை கடந்து செல்ல வேண்டியிருந்தது. அப்போது அவர் அவ்வழியாக வந்த முல்லாவிடம் நல்ல உணவு விடுதி எங்குள்ளது என்று கேட்டார்.

முல்லா அதற்கு பதில் சொன்னார். தத்துவவாதி தன்னுடன் சாப்பிட வருமாறு அழைத்தார்.

முல்லா அவரை அருகிலிருந்த உணவு விடுதிக்கு அழைத்துச் சென றார். அங்கே போன பிறகு 'அன்றைய சிறப்பான உணவுப் பொருள் என்ன? என்று கடையில் உணவு பரிமாறுபவரைப் பார்த்து முல்லா கேட்டார்.

'மீன்! புதிய மீன்!' என்று பதில் சொன்னார் சிப்பந்தி. 'இரண்டு துண்டுகள் நல்லதாக கொண்டு வாருங்கள்' என இருவரும் ஓடர் செய்தனர்.

சிறிது நேரம் கழித்து கடையில் உணவு பரிமாறுபவர் ஒரு பெரிய தட்டில் இரு மீன் துண்டுகளை வைத்துக் கொண்டு வந்தார். அதில் ஒரு துண்டு பெரியதாகவும், இன்னொரு துண்டு சிறியதாகவும் இருந்தது.

அதைக் கண்டவுடன் முல்லா எந்தவொரு தயக்கமில்லாமல் பெரிய மீன் துண்டை எடுத்து த்னது தட்டில் போட்டுக் கொண்டார்.

அதற்கு தத்துவவாதி 'முல்லா நீங்கள் நடந்து கொண்ட முறையானது எந்த தர்ம, நீதி, நியாய, மத சாஸ்திரத்துக்கும் ஒத்து வராத ஒன்றாகும்' என்றார்.

அதற்கு முல்லா "நீங்களாக இருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?" என்றார். "நான் மனச்சாட்சியுள்ள மனிதனாகையால் சிறு மீன் துண்டை எடுத்திருப்பேன்".

'அப்படியா, ரொம்ப நல்லது. இந்தாருங்கள் உங்கள் பங்கு' என்று சொல்லி சின்ன மீன் துண்டை அந்த தத்துவவாதி தட்டில் வைத்தார்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## கலங்க வைத்த கிரானிகஸ் யுத்தம்




சொல்லிவிட்டு முன்னோக்கி நகர்ந்த அலெக்சாண்டர் குதிரையோடு ஆற்றில் இறங்கினார். மன்னன் எவ்வழியோ வீரர்களும் அவ்வழி. ஒருவர் பின் ஒருவராக அலெக்சாண்டரைப் பின் தொடர்ந்தனர். பார்மீனியோவும் தான். அப்போதைக்கு வேறு வழியில்லை.

மாசிடோனிய வீரர்கள் ஆற்றைக் கடக்கத் தொடங்கியதை அசைவுகள் மூலம் உணர்ந்த டேரியஸின் படை அவர்களை நோக்கி அம்புகளைத் தொடுத்தது சரமாரியாக. குறி பார்த்து அடிப்பது சாத்தியமில்லை. கும்மிருட்டு. கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒன்றுமே புலப்படவில்லை.

இத்தனை அடி தூரத்தில் வந்து கொண்டிருப்பார்கள். அதற்கு இவ்வளவு வேகத்தில் அம்புகளைச் செலுத்தினால் அவர்களைத் தாக்கும் என்று மனதுக்குள் ஒரு கணக்குப் போட்டு கொண்டு அம்புகளை செலுத்தினார்கள்.

சில அம்புகள் வீரர்களைத் தாக்கின. குதிரைகளும் தப்பவில்லை. ஆனால் பெரிதாக எந்தவித இழப்பும் இல்லை.


இருள் மறைவதற்குள் ஒட்டுமொத்த மாசிடோனியப் படையும் கரையைக் கடந்தது.

நல்லவேளை இரவு நேரத்தில் வந்தோம். இல்லாவிட்டால் தாக்குதல் இன்னும் மோசமாக இருந்திருக்கும். வீரர்களில் ஒருவர் உரத்த குரலில் சொல்ல பார்மீனியோவுக்குச் சுருக்கென்று கோபம் வந்துவிட்டது.

திரும்பி அலெக்சாண்டரைப் பார்த்தார். அவரும் இவரையே நோக்கிக் கொண்டிருந்தார். பரஸ்பரம் மானசீகமாக முறைத்துக் கொண்டார்கள்.

அது மன்னர் அலெக்சாண்டருக்கும் தளபதி பார்மீனியோவுக்கும் இடையேயான விழுந்த முதல் மோதல். பேசிக்கொண்டிருக்கும் போதே கண்களை உரசியபடி சென்று மண்ணில் செருகிக் கொண்டு நின்றது. என்னவாக இருக்கும்? பார்வையைக் கூர்மையாக்கிப் பார்த்தார். குத்தீட்டி.

அலெக்சாண்டரைக் குறிவைத்துதான் வீசப்பட்டதா? அல்லது வெறுமனே வீசப்பட்டதா? ஆராய்ச்சி செய்து கொண்டிருக்க இது நேரம் இல்லை. விரைந்து செயற்பட்டாக வேண்டும். உயிர் முக்கியம். வெற்றி முக்கியம். இலக்குகள் அதைவிட முக்கியம். (தொடரும்)



# இந்திய அணியில் டோனியா, கோலியா தலை மையில் சிறந்தவர்?

**சுதன்** **குப்பிழான்**

**தமிழர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்றார்கள். இப்போது அவரும் தமிழரைக் கைவிட்டு விட்டாரே?**

தமிழினம் அதன் முற்பிறப்பில் மிகவும் கொடுமை செய்த இனமாக இருந்திருக்கும் போல. அதுதான் இந்த பிறவியில் கடவுள் கூட கைவிடப்பட்ட இனமாக இருக்கிறது.

எல்லாவற்றிக்கும் பரிகாரம் உண்டல்லவா? அந்த பரிகாரம் எது என்பதை அறிந்து உணர்ந்து செயற்பட்டால் எம் இனம் மீட்சி பெறும்.

அந்த பரிகாரம் எது என்பதைக் கண்டு பிடிக்க வேண்டியது தான் இப்போதைய வேலை.

**வினோஜிதான்** **ஹாட்லிக்கல்லூரி**

**வியாசரே யோகாசனத்தைப் பற்றி தங்கள் கருத்து என்ன?**

நாம் எதை எதையெல்லாம் விட்டுவிட்டு மேலைத்தேயக் கலாசாரத்துக்குள் புகுந்து கொள்கிறோமே அவற்றை மேலைத்தேயம் தமதாக்கிக் கொள்கிறது.

விரும்பியவரை திருமணம் செய்யலாம். பிடிக்கவில்லை என்றால் விவாகரத்துச் செய்யலாம்.

இதன் விளைவு கொடிய எச்.ஐ.வியை உருவாக்க வழிவகுத்தது. மேலைத்தேயம் இப்போது ஒருவனுக்கு ஒருத்தி என்கிறது. நாம் விவாகரத்தில் மூழ்கிக் கிடக்கிறோம்.

நோயற்ற வாழ்விற்கு வழி சொல்லும் யோகாசனங்களை நாம் கைவிட்டு விட மேலைத்தேயம் தூக்கி தலையில் வைத்துக் கொண்டாடுகிறது.

**சதாசிவம்** **யாழ்ப்பாணம்**

**யாழ்.மாநகர மேயராக மணிவண்ணன் வந்தது பற்றி. நீங்கள் சொல்லுங்களேன்?**

மணிவண்ணன் மேயர் ஆகிவிட்டார்.

அவரை எதிர்க்கும் பலர் அவரை தோழர் என்பது எதனால் என்பது தான் புரியவில்லை.

வரவு–செலவுத்திட்டத்தை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் ஈழமக்கள் ஜனநாயக் கட்சியும் ஒன்றிணைந்து எதிர்த்தது.

அதற்காய் மணிவண்ணன் தனக்குக் கிடைத்த ஆதரவை மறுக்க வேண்டிய தேவை என்ன என்பதுதான் புரியவில்லை.



தமிழ் மக்கள் நன்றாகப் புரிந்திருப்பார்கள் என்பதை இவ்விடத்தில் கூறிக்கொள்ளலாம்.




**சுகிர்தமலர்** **யாழ்ப்பாணம்**

**இயற்கையின் சீற்றம் மனிதனுக்கு எதனை உணத்துகிறது?**

மனிதனுக்கு இந்த உலகம் படைக்கப்பட்டது தனக்கானது எனும் ஆணவம் இருக்கிறது.

உதாரணத்திற்கு சாதாரணமாக நிலத்தில் எமது காலடியில் சிக்கி உயிர் விடும் எறும்புகளை எடுத்துக் கொள்ளலாம்.

உலகத்தில் உள்ள அத்தனை எறும்புகளும் உருமாறி மனித இனத்திற்கு எதிராக எழுந்தால் நிலை எப்படி இருக்கும்.

இயற்கை மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட கொடை. அதை மதித்தால் அது எம்மை தாலாட்டும். மீறி மிதித்தால் தூக்கி அடிக்கும் கவனம்.

**தமிழ்** **யாழ்ப்பாணம்**

**கொரோனாவுக்கு காரணம் என்ன வியாசரே?**

இயற்கையை அழித்து அழித்து அதில் சுகம் கண்ட மனிதனுக்கு இயற்கையால் (கடவுள்) கொடுக்கப்பட்ட சாபக்கேடே கொரோனா.

இதை உணர்ந்து கொண்டால் சரி. இல்லை இன்னும் நான் நினைத்ததைத்தான் செய்வேன் என்று அடம் பிடித்தால் இப்போது உருமாறியது ஒன்றாய். இன்னும் உருமாறும் நூறாய்.


இந்த உலகம் மனிதனுக்கானது என்பதை முதலில் விட்டுவிடுங்கள். இயற்கையை மதியுங்கள். அதை அழிவிலிருந்து காத்துக்கொள்ளுங்கள். உங்களை இயற்கை காக்கும் அவ்வளவே.

**கேதீஸ்** **கீரிமலை**

**ரஜினி அரசியலில் இருந்து விலகுவதாக அறிவித்து விட்டாரே?**

நான் எப்ப வருவேன், எப்படி வருவேன் என்று சொல்ல முடியாது. ஆனால் வரவேண்டிய நேரத்தில் கரக்டா வந்து நிற்பேன். இது ரஜினியின் பிரபல்யமான வசனம்.

இன்னும் ஆச்சரியங்கள் ஏற்படலாம் பொறுத்திருந்து பார்ப்போமே.



# வியாசரே யோகாசனத்தைப் பற்றி தங்கள் கருத்து என்ன?

**தர்மா** **மீசாலை**

**உங்களை யாரும் தவறாகச் சொன்னால் நீங்கள் என்ன செய்வீர்கள் வியாசரே?**

எப்போதும் நாம் போகும் பாதை நேர்மையான பாதை எனின் எவர் என்ன சொன்னாலும் அமைதியாய், பொறுமையாய் அதைக் கடந்து எமது பாதையில் நடந்து செல்லவேண்டும்.

நேர்மையான பாதையின் முடிவு ஒருநாளும் நரகமாக இருக்காது என்பதை உணர்ந்து உணர்ச்சி வசத்தைக் கட்டுப்படுத்தி நடந்தால் சுவர்க்கத்தை அடையலாம்.

**தனு** **சண்டிலிப்பாய்**

**இந்திய அணியில் டோனியா, கோலியா தலைமையில் சிறந்தவர்?**

அடுத்த கதை இன்றி கூறும் பெயர் டோனி. இதை சிறி பிள்ளையைக் கேட்டால் கூடச் சொல்லி விடும்.

கோலி சிந்த வீரர் தான். ஆனால் அவர் தலைமை டோனியை மிஞ்சும் அளவில் இல்லை என்பதே உண்மை.

இன்னொரு டோனி உருவாக இன்னும் மூன்று பத்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.

**ஆகாஸ்** **எழுதுமட்டுவாழ்**

**இனியாவது வவுனிக்குளத்தின் அணைகள் புனரமைப்பு செய்யப்படுமா?**

மூன்று உயிர்கள் என்பது சர்வசாதாரணமான தொன்றல்ல, அந்த இழப்பை எவராலலும் எவற்றாலும் ஈடு செய்து விட முடியாது.

ஆனால் இனி ஒருமுறை இப்படி ஒரு இழப்பை ஏற்படுத்தாமலிருக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆபத்து இருக்குமெனின் பாதுகாப்பற்ற பாதைகளை மூடி மாற்றீடு செய்தால் அப்பாவி உயிர்கள் பறிபோகாமல் இருக்கும்.

**தமிழ்** **யாழ்ப்பாணம்**

**தமிழர்களுக்கான உரிமையினைத்தந்து நிம்மதியாக வாழ விடமாட்டார்களா வியாசரே?**

என்னது தமிழர்களாவது நிம்மதியாக வாழ்வதாவது.

நீங்கள் உங்கள் உறவுகளை நினைக்கக் கூடாது. நினைத்தாலும் அவர்களுக்காக தீபமேற்றக் கூடாது. ஏன் கார்த்திகை தீபத்தைக் கூட ஏற்றக் கூடாது.

ஏற்றினால் காலால் அடித்து வீழ்த்துவோம். உங்களைக் கைது செய்வோம்.

**அன்பு வாசகர்களே!**

**அரசியல், ஆன்மீகம், நகைச்சுவை, பொழுதுபோக்கு என உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்திற்கு SMS செய்யுங்கள் அல்லது ஆசிரியர், வியாசர் பதில்கள், இல. 03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.**

## கண்ணீர் காயவில்லை



சமுத்திர அன்னை சாபமிட்டு
சடுதியில் சுனாமி உருவெடுத்தாள்
சந்தோசம் நிறைந்த தரணியிலே
சாவின் ரணங்கள் அவள் விதைத்தாள்!

ஆழியின் தாயவள் அழைப்பாலே
அகிலமும் ஒரு தினம் அதிர்ந்ததுவே!
வன் அலை வழங்கிய வரவேற்பால்
வாழும் உயிர் பல அழிந்தனவே!

கடலின் கரிய அலைகளுடன்
கண்ணீர் அருவி கலந்து சென்று
சமுத்திர அன்னையின் மடி தவழ
சாப விமோசனம் அவளும் தந்தாள்!

பசுமரத்தாணியாய் பல வடுக்கள்
பாரினில் யாவர்க்கும் நீ கொடுத்து
பதினாறு ஆண்டுகள் ஆயிடினும்
பலர் கண்ணீர் இன்னும் காயவில்லை!

செல்வி. பாமகள் சண்முகராஜா
கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை

## இன்னல்கள் நீங்குமா?

உடுவிலூர் கலா

மரணத்தின் போர்வையில் உலகம்
மனிதக் காலடியில் கொரோனா
எமனின் வேள்வித்தீயில்
எரிகின்றன நாடுகள்
நடத்தைப் பிறழ்வுகளால்
நலிந்தன மரணங்கள்
நம்பிக்கையின் பயணங்கள்
நாதியற்றுப் போயின
குவிந்தன பிணங்கள்
குற்றுயிரானது மனிதம்
சிதைந்தது பொருளாதாரம்
சீர்குலைந்தது வாழ்வியல்
தொலைந்தது நிம்மதி
தொடர்கிறது சமூக இடைவெளி
உயிர்க்கவசமாய் முகக்கவசங்கள்
உயிர்காக்கின்றது ஊரடங்கு
பணம் தேடி ஓடியவன்
பயத்தில் உறைந்துவிட்டான்
தொடர்ந்து ஓடியவனுக்கு
தொடர்கிறது ஓய்வு
அறிவியல் விபரீதத்தில்
அங்கலாய்க்கிறது மனுக்குலம்
நம்பிக்கை வாழ்வியல்
களவாடப்பட்டது- மூன்றாம்
உலகப் போரா- இல்லை
உலக அழிவா-புரியவில்லை
அசகாயசூரனாய் வைரஸின்
ஆட்சி மகுடம் சூடுகிறது எம்
இன்னல்கள் துன்பங்கள் நீக்கி
இருபத்தொன்று பொலிவு தருமா?

## கலங்காதே



கலங்காதே மனிதா மனம் கலங்காதே

சிந்தித்துப் பார் சிந்தும் ஒவ்வொரு
கண்ணீரும் அறிவுரை கூறும் கலங்காதே

உன் வழி சரி என்று தவறென
கூறியவர்களுக்கும்
ஒருநாள் புரியும் கலங்காதே

உன்னை நீ மற்றவர்களுக்கு நிரூபிக்க வேண்டிய
அவசியம் உனக்கில்லை கலங்காதே

நீ உயர்வதும் உன் மனதில் தான்
நீ தாழ்வதும் உன் மனதில் தான்
உனக்கும் காலம் வரும் கலங்காதே

உன்னைத் துன்பப்படுத்தி வந்த
உன் ஒவ்வொரு கண்ணீர்த்துளிக்கும்
காரணமானோர் பதில் சொல்லத்தான்
வேண்டும் கலங்காதே

மனிதா நீ தடம் பார்க்க மட்டுமல்ல
தடம் பதிக்கவும் பிறந்தவன் கலங்காதே

சிவகரன் விநோஜிதன்
யா/ ஹாட்லிக் கல்லூரி

## மௌனத்தின் தேடல் –509



### துரோகம்

நம் தறி கெட்டுப் போன
அரசியலிலும்
இதுபோன்ற இழிவுகள்
உள்ள வரையில்
நமக்கான விடியல் என்பது
கேள்விக் குறியே

தேன்நிலா, நல்லூர்

## நட்பின் வலி

அன்புமழை தனில் நனைந்து
ஆனந்த ஜாலங்கள் புரிந்திடவே
உன்னோடு நான் நட்பு பூண்டேன்
ஆனால் நீயோ என் கையிலிருக்கும்
அதிகாரப் பெட்டியைக்
கைப்பற்றும் நோக்கில் நட்பு பூண்டாயோ?
என்னிலிருந்து அன்பு எனும்
தேனமுதை உன்னில் சொரிந்தேன்
உன்னிலிருந்து துரோகம் என்னும்
அம்பு என் நெஞ்சைத் துளைத்தது
பின் இருந்து முதுகில் குத்தும்
உன் உயரிய நட்பை
நான் என்னவென்று கூறுவேன்

ஆ.பாலமதுஜா
யா/ மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை

## தள்ளிவிடும் துரோகம்

சூரிய உதயத்தில்
என் அஸ்தமனத்தை
காண்கின்றேன்
உதைத்துவிட துரோகியும்
உதறித்தள்ள பகைஞனும்
இருப்பதால்
இங்கு எல்லோரும்
முகமூடி மனிதர்கள்தான்
கூட்டிருந்து
குழிபறித்ததுமன்றி
அதில் தள்ளிவிடும் துரோகம்
மன்னிக்க முடியாதது

வி.டிலக்ஸன்
யா/ தும்பளை
சிவப்பிரகாச ம.வி.

## நட்பில் பதர்

காட்டிக் கொடுப்போரும்
கருவறுத்து உறவுகளை
நிலைப்பாட்டில்
வீழ்த்துவரோ நட்பில்
பதர் என்றே எண்ணிப்
பழகுதல் தவிர்ப்பீர் அன்றி
மனவளத்தைப் பேணி நிதம்
மானுடமாய் வாழவைக்க
தினம் முயல்வோம் திருத்த

வைகதன், கொக்குவில்

## மௌனத்தின் தேடல் –510



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## நம்பிக்கைத் துரோகம்

நல்ல நண்பன் என நம்பி நன்மை பயக்கும் என நம்பி
நட்பாகி நண்பர்களானார்கள் அந்தோ!
நம்பிக்கைத் துரோகம்! நயவஞ்சக நடிப்பு நண்பனால்
அழிக்கப்படும் நண்பன் போல
உலகில் துரோகம் மலிந்து விட்டது

சி.சுகிர்தமலர், உரும்பிராய்

## நிழல்கூட நிஜமில்லை

கலியுகத்தில் மலிந்து விட்டது
துரோகங்களும் பழிவாங்கலும்
உடன்பிறப்போ உற்ற நட்போ பச்சோந்திக்கு
இணையான காலமே இது
நிழல்கூட நிஜமில்லை–இதை நினைவில் வை
உன்கை சிகரம் தொடும்

புஸ்பராசா கோபிகா

# நத்தார் தினத்தில் நடுவீதியில் நடந்த கொடூரம்

## நடந்தது என்ன?

**துடிதுடித்த அந்த உயிர் தன்னைக் காப்பாற்ற ஓரிரு அடி வைத்து ஓடியுள்ளது. இருப்பினும் அந்த வலி மோகனதாஸை மேலும் ஓர் அடி கூட எடுத்து வைக்க முடியாத அளவிற்கு செய்துள்ளது. குடிமனைகள் நிறைந்த, தனது வீட்டிற்கு கூப்பிடு தூரத்தில் உள்ள அந்தக் கிரவல் வீதியில் சுயநினை விழந்து மடிந்து விழுகிறார் மோகனதாஸ்.**

தென்மராட்சி -மீசாலை வடக்கு இராமாவில் பகுதியில் கடந்த வருடம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நத்தார் தினத்தன்று காலை நடு வீதியில் இட்ம்பெற்ற கொலைச் சம்பவம் தென்மராட்சி மக்களை மட்டுமன்றி குடாநாட்டு மக்களையே ஒரு கணம் உலுப்பியுள்ளது.

மீசாலை வடக்கு கொடிகாமம் எனும் முகவரியில் அமைந்துள்ள அமைதியான இராமாவில் எனும் கிராமத்தில் வசித்து வந்த ஐயாத்துரை மோகனதாஸ் (வயது-51) என்பவரது கொலைச் சம்பவமே இன்றுவரை மர்மம் துலங்காத நிலையில் தென்மராட்சி மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

குடிமனைகள் நிறைந்த கிரவல் வீதியில் பட்டப்பகலில் அதுவும் நத்தார் பண்டிகை தினத்தில் மோகன்தாஸ் இனந்தெரியாத ஆயுததாரிகளால் மார்பில் கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

புளியம்பொக்கணையை சொந்த இடமாகக் கொண்ட மோகனதாஸ் முல்லைத்தீவு -வள்ளிபுனம் கிராமத்தைச் சேர்ந்த பெண்ணை மணம் முடித்து 2009 ஆம் ஆண்டு வரை புளியம்பொக்கணையிலேயே வசித்து வந்தார்.

இவர்களுக்கு புளியம் பொக்கணையில் ஓர் பெண் குழந்தை பிறந்துள்ளது. இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் அவரது வாழ்க்கையில் திருப்புமுனையை ஏற்படுத்தியிருந்தது. யுத்தம் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து யாழ் மாவட்டத்தின் தென்மராட்சி பிரதேசத்தில் இராமாவில் எனும் தோட்டச் செய்கைக்கு பெயர் போன அமைதியான கிராமத்தில் தனக்கென சொந்தமாக நிலம் ஒன்றினை வாங்கியிருந்தார்.

பின்னர் படிப்படியாக தனது சொந்த உழைப்பில் தான் வாங்கிய நிலத்தில் அழகான கல் வீடு ஒன்றினை அமைத்து வாழ்ந்துவந்த நிலையில் 2011 ஆம் ஆண்டில் ஆண் குழந்தை ஒன்றும் கிடைத்துள்ளது. தனது அழகிய குடும்பத்துடன் மிக மகிழ்வாகச் சென்றது அவரது வாழ்க்கை.

காலங்கள் கடந்தோடின. மோகனதாஸ் வலிப்பு நோயினால் அவதிப்பட அவரால் பெரிதாக உடல் உழைப்பை காட்டி தொழில் செய்ய முடியவில்லை. இருப்பினும் இராமாவில் தோட்ட நிலத்தில் சிறிதாக கமம் செய்து தனது குடும்பத்தை எந்தவிதக் குறையும் இன்றி கவனித்து வந்துள்ளார். மோகனதாஸ் குடும்பத்திற்கு சிறந்த தலைவனாக விளங்கிய அதேவேளையில் கடவுள் நம்பிக்கை உடையவராகவும் இருந்துள்ளார்.

இராமாவில் கிராமத்தில் தட்டாங்குளம் பிள்ளையார் ஆலயம் ஆகியன மோகனதாஸின் நம்பிக்கைக்குரிய ஆலயங்களாக இருந்து வந்துள்ளன. அத்துடன் இவர் அங்கு சிறுசிறு சமயத் தொண்டுகளையும், உதவிகளையும் ஆற்றி வந்துள்ளார்.

இவ்வாறு தனது மனையாளுக்கு சிறந்த கணவனாகவும் இரு பிள்ளைகளுக்கும் நல்ல தகப்பனாகவும் மிகவும் சந்தோசமாக வாழ்ந்து வந்த மோகனதாஸின் வாழ்க்கை விதியின் கோரப் பிடிக்குள் சிக்கும் என்று தெரியாமலே அன்றைய பொழுது விடிந்தது.

25.12.2020 வெள்ளிக்கிழமை இந்துக்களுக்கு பக்திமயமான தினம் அதேவேளை கிறிஸ்தவர்களுக்கு அன்று நத்தார் பண்டிகை. அப்படிப்பட்ட புண்ணிய தினத்தில் மோகனதாஸின் வாழ்வில் விதி விளையாடியிருந்தது. அன்று வழமைபோல் தனது அன்றாட கடமைகளில் ஈடுபட்ட மோகனதாஸ் காலையில் புலமைப்பரிசில் வகுப்பிற்காக பாடசாலையில் விட்ட தனது ஒன்பது வயது மகனை ஏற்றி வருவதற்காக காலை 11.00 மணியளவில் வீட்டில் இருந்து புத்தூர் வீதி நோக்கி துவிச்சக்கரவண்டி ஒன்றில் புறப்படுகிறார். வீட்டில் இருந்து வெறுமனே நூறு மீற்றர் தூரம் பயணித்த மோகனதாஸிற்கு நடு வீதியில் அதிர்ச்சி காத்திருந்தது.

ஆம், மோட்டார்ஸ்சைக்கிளில் கூரிய ஆயுதங்களுடன் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் இருவர் மோகனதாஸிற்கு எமனாக மாறி இருந்தனர். மோகனதாஸை வழிமறித்து அவரது மார்பில் ஆழமாக குத்திவிட்டு தப்பிச் சென்றார்கள்.

துடிதுடித்த அந்த உயிர் தன்னைக் காப்பாற்ற ஓரிரு அடி வைத்து ஓடியுள்ளது. இருப்பினும் அந்த வலி மோகனதாஸை மேலும் ஓர் அடி கூட எடுத்து வைக்க முடியாத அளவிற்கு செய்துள்ளது. குடிமனைகள் நிறைந்த, தனது வீட்டிற்கு கூப்பிடு தூரத்தில் உள்ள அந்தக் கிரவல் வீதியில் சுயநினைவிழந்து மடிந்து விழுகிறார் மோகனதாஸ்.

சனநடமாட்டம் நிறைந்த அந்த தட்டாங்குள வீதியில் அந்தத் தருணத்தில் மோகனதாஸை காப்பாற்றவோ, அவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லவோ உடனடியாக எவரும் முன்வரவில்லை.

இரத்தம் வடிந்த நிலையில் சுயநினைவற்று வீதியில் கிடந்த மோகனதாஸை சில நிமிடங்களின் பின்னர் மீட்ட அயலவர்கள் உயிரை காப்பாற்றும் முனைப்பில் சம்பவம் நடைபெற்ற 2கிலோமீற்றர் தொலைவில் உள்ள சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வந்து சேர்க்கின்றனர்.

அந்த நிமிடங்கள் உறவினர்கள் ஒவ்வொருவர் மனங்களிலும் பெரும் ரணமாக ஓடிக்கொண்டிருந்தது.

அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் சுகாதார பணியாளர்கள் மோகனதாஸின் உயிரைக் காப்பாற்ற பெரும் பிரயத்தனம் செய்கின்றனர். வெளியே உறவினர்கள் வேண்டாத தெய்வங்கள் இல்லை. இருப்பினும் விதியை வெல்ல யாரால் முடியும்.

வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற ஐந்து நிமிடங்களிலேயே சிகிச்சை பலனின்றி பிரிகிறது மோகனதாஸின் உயிர். மீசாலையில் கத்தியால் குத்தி ஒருவர் கொடூரக் கொலை என்ற செய்தி காட்டுத் தீயாக பரவுகிறது.

வைத்தியசாலையில் கூடிய அனைவரும் கூறிய ஒரே வார்த்தை " இந்த அப்பாவி மனுசனுக்கு யார் பகையாளி. இப்படி கொடூரமாக கொலை செய்யும் அளவிற்கு மோகனதாஸ் எந்தத் தவறும் இழைக்கக்கூடியவர் அல்ல " என்பதே.

ஒருவர் இருவர் அல்ல ஊரே கூடி மோகனதாஸின் நல்ல உள்ளத்தை எடுத்துரைத்தது. அப்படியென்றால் இந்தக் கொலை ஏன் நடந்தது? கொலையாளி யார்? கொடூரமாக கொலை



செய்யும் அளவிற்கு மோகனதாஸ் என்ன செய்தார்? எனப் பல கேள்விகள் பொலிஸாரின் எண்ணத்தில் மாத்திரமல்ல மக்களின் உள்ளங்களிலும் இன்றுவரை ஓடிக் கொண்டிருக்கிறது

ஆனால் இது ஆள் மாறியோ, உடன டியாக எழுந்த கோபத்தாலோ நடந்த விபரீதம் அல்ல என்பதற்கு சில சான்றுகள் ஊர் மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னர் மோகனதாஸின் நம்பிக்கைக்குரிய ஆலயமான பெரிய தெய்வம் ஆலயத்தில் வர்ணப் பூச்சு இடம்பெற்றுள்ளது. அங்கு மோகனதாஸ் வர்ணம் பூசுபவருக்கு ஒத்தாசையாக இருந்துள்ளார். அந்தச் சமயத்தில் அங்கு வந்த இனம் தெரியாத சிலர் ஆலயத்தை புகைப்படம் எடுப்பது போன்று மோகனதாஸையும் சேர்த்து புகைப்படம் எடுத்துள்ளனர்.

கொலை நடக்க நான்கு நாட்களுக்கு முன்னர் இனந்தெரியாதவர்கள் மோகன்தாஸ் பற்றி ஊரில் விசாரித்து திரிந்துள்ளனர். இந்த இரண்டு சம்பவங்களையும் வைத்துப் பார்க்கும் போது நெடுநாளாக திட்டம் தீட்டப்பட்டு இந்தக் கொலை நடந்துள்ளது என்பதனை உணர முடிகிறது.

அப்படியானால் கொலையாளிக்கு மோகனதாஸ் வீட்டில் இருந்து புறப்பட்ட தகவல் கூறியது யார்? அல்லது கொலையாளிகள் நெடு நேரம் வீதியில் காத்திருந்து கொலையைச் செய்தனரா?, இக் கொலை தனிப்பட்ட பகை காரணமாக நடைபெற்றதா? இவ்வாறு பல மர்மங்கள் இன்றும் தெளிவு பிறக்காமல் பலரின் மனங்களிலும் சந்தேகத்தை உண்டு பண்ணுகிறது. இந்தக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவர் கைதாகி விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பொதுமக்களின் மனங்களில் எழுந்துள்ள கேள்விகளுக்கு பொலிஸார் வெகு விரைவில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். கொலையாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

ஆயுதமும் -அடக்குமுறையும் நிரந்தர வெற்றியைத் தராது. யாரும் யாருடனும் முரண்பட்டுக்கொண்டு நிம்மதியான வாழ்க்கையை வாழ முடியாது. இந்த உண்மையை சகலரும் உணர வேண்டும்.

**த.சுபேசன்**

# சிந்தனை விருந்து இசைவாக இருவர்



நகரில் இசைநிகழ்ச்சி ஒன்று நடப்பதாக இருந்தது. இந்த நிகழ்ச்சியைக் காண ஆசைப்பட்டான் ஒருவன்.ஆனால், நுழைவுச்சீட்டு இல்லை! கலக்கத்துடன் இருந்தவனுக்கு, பிரபல பத்திரிகை ஒன்றில் ஓவியராகப் பணிபுரியும் நண்பன் ஒருவன் உதவ முன்வந்தான். "எங்கள் அலுவலகத்தில் ,ஓவியருக்கென நுழைவுச்சீட்டு ஒன்று உண்டு. அதை உனக்குத் தருகிறேன்" என்று நண்பன் சொன்னதும் நம்மவனுக்கு உற்சாகம் கரைபுரண்டது.

இசை நிகழ்ச்சி நடைபெறும் நாளன்று, நண்பன் தந்த நுழைவுச் சீட்டை வாங்கிக் கொண்டு இசையரங்கத்துக்குச் சென்றான்.அங்கே, நுழை வாயிலில் நின்றவர், இவனை சந்தேகத்துடன் பார்த்தார்.

" நீங்க... அந்தப் பத்திரிகையின் ஓவியர்தானா?" என்று கேட்டார்.

"ஆமாம்..." என்றான் தயங்கியபடி.

உடனே அவர், "அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் இப்பத்தான் உள்ளே போனார். வாங்க அவரைப் பார்க்கலாம்" என்று கூற, ஆடிப்போய் விட்டான் நம்மஆள்!

'இனி, பின்வாங்க முடியாது... என்ன நடக்கப் போகிறதோ? தான் ஓவியர் இல்லை என்ற உண்மை தெரிந்து விட்டால், வெளியே அனுப்பி விடுவார்களோ? இசை நிகழ்ச்சியைப் பார்க்கமுடியாதே' தயக்கமும் குழப்பமுமாக அவரைப் பின்தொடர்ந்தான்.

அவர்... முதல்வரிசை நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவரிடம் மிகவும் பவ்யமாக, "ஐயா! ஒரு சந்தேகம்..." என்றார் இவனை அழைத்துச் சென்றவர்.

'என்ன?' என்பது போல் பார்த்தார் அவர்!

"இவரை உங்களுக்குத் தெரியுமா?"

உடனே, நாற்காலியில் அமர்ந்திருந்த அந்தநபர், நம்ம ஆளை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்து விட்டு, "ஏன், எதுக்குக் கேட்கறீங்க?" என்றார் அழைத்து வந்தவரிடம்!

"இல்ல... இவர், உங்க பத்திரிகையின் ஓவியரான்னு தெரிஞ்சுக்கணும்?"

"ஆமாம்... இல்லேன்னு யார் சொன்னது?" கோபத்துடன் பதில் சொன்னார் அவர்!

அவ்வளவுதான்... நம்ம ஆளை சந்தேகப்பட்டவர், இருவரிடமும் மாறி மாறி மன்னிப்பு கேட்டு விட்டு, வாசலுக்கு நகர்ந்தார். நம்ம ஆளுக்கு போன உயிர் திரும்பி வந்தது. மெள்ள ஆசிரியரின் பக்கம் திரும்பி, "ஐயா... என்மானத்தைக் காப்பாத்தினதுக்கு ரொம்ப நன்றி!" என்றான் நெகிழ்ச்சியுடன்.

உடனே அவர், "இதுக்கு எதுக்கு தம்பி நன்றி? ஒருத்தருக்கொருத்தர் செய்ற உதவிதானே இது!" என்றார்.

இவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவரே தொடர்ந்தார் "என்ன புரியலையா? நானும் பத்திரிகை ஆசிரியர் இல்லப்பா. உன்னைப் போல ஓசி டிக்கெட் வாங்கிட்டு வந்தவன்தான்!" என்றார் சிரித்தபடி.

நண்பர்களே! இன்றைய ஆன்மிக உலகமும் இப்படித்தான் உள்ளது. பெரும்பாலானோர் ஆன்மிக வேடம் தரித்திருக்கிறார்கள். வேடம் கலைய வேண்டும் வெளிச்சம் தெரிய வேண்டும்.அப்போதுதான் உண்மையான ஆன்மிகத்தை உங்களால் அடையாளம் காண முடியும்.

# புகைப்பரிசோதனையென்றால் பெற்றோல் குறைக்க வேணும்



~இந்திரபுத்திரன்

பரீட்சை என்றதும் பயப்படாதவர்கள் யாருமாக இருக்க முடியாது. பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்பார்கள். பரீட்சை என்றால் படபடக்காதவர்களே இல்லை.சிறுவயது முதல் படித்துப் பட்டம் வாங்கி நேர்முகப் பரீட்சைக்கு செல்பவர் வரை இந்தப் பரீட்சை மனித வாழ்வுடன் ஒட்டிக் கொண்டிருந்து மனிதனைப் படபடக்க வைக்கிறது. அதுசரி, ஏன் இப்போது இந்தப் பரீட்சைக்கதை என நீங்கள் என்னைப் பார்த்து பல்லு நெருமுவது புரிகிறது.

"புகைப் பரிசோதனை" இதைத் தெரியாதவர்களும் இதற்குப் பயப்படாதவர்களும் இப்போது இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் புகைப்பரிசோதனை நிலையத்தில் பணிபுரிபவர்களாகவே இருக்கும்.

வாகனங்களுக்கான வாகனவரிப் பத்திரத்தைப் பெற வேண்டும் என்றால் வாகனத்தினைப் புகைப்பரிசோதனை செய்து அந்த வாகனம் சூழலுக்கு மாசுறும் வகையில் இல்லை எனும் சான்றிதழ் இருக்கவேண்டும்.

அண்மையில் எனது மோட்டார் சைக்கிளுக்கு ஒயில் மாற்ற ஒரு மோட்டார் சைக்கிள் திருத்தும் கடைக்குச் சென்றிருந்தேன்.

ஒருவர் மிகவும் படபடப்புடன் மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கினார்.

கடையில் நிற்கும் பெடியன் ஒருவன் "வாங்கோ சேர்" என்றதும் " டேய் தம்பி ரக்ஸ் முடிஞ்சுது. புகைப்பரிசோதனை செய்யவேணும் ஒருக்கா செற் பண்ணி விடுடா" என்றதும் அவன் மோட்டார் சைக்கிளை இயக்கிக்கொண்டு பெற்றோலை நன்றாகக் குறைத்துக் கொண்டு அக்சிலேற்றரை முறுக்கி முறுக்கிப் பார்த்து விட்டு "சரி சேர் கொண்டு போங்கோ. புகைப்பரிசோதனை முடிஞ்சதும் கொண்டு வாங்கோ" என்றான்.

சரிடா என்றவர் மிகவும் சிரமப்பட்டு மோட்டார் சைக்கிளை ஓடிக்கொண்டு சென்றார்.

நான் கேட்டேன் " ஏன் தம்பி திரும்ப கொண்டுவரச்சொன்னீர" என.

"புகைப்பரிசோதனையில பாஸ் பண்ணுறதுக்கு நல்லா பெற்றோலைக் குறைத்துக் குடுத்துவிட்டிருக்கு. அங்க சரி எண்டா மீண்டும் பெற்றோலைக் கூட்டிவிடுவம். அப்படியே ஓடேலா" என்றான்.

நாசமறுக்க. சூழலுக்கு மாசுறாமல் இருக்கிறதுக்கெண்டு கொண்டு வந்த திட்டம் இப்ப எந்த நிலையில் நிக்குது எண்டு நினைக்க எனக்குத் தலையைச் சுத்திச்சுது.

புகைப்பரிசோதனையில பாஸ் பண்ணுறதுக்கு பெற்றோலைக் குறைச்சால் அதை ஓடேலாது. அலுவல் முடிஞ்சதும் பெற்றோலைக் கூட்டிவிட்டால் எதுக்கு புகைப்பரிசோதனை? நினைக்க மீண்டும் தலை சுற்றியது. அப்படியே இருந்த போது தோளைத்தட்டி "சேர் உங்கட வேலை முடிஞ்சுது. 900 ரூபா தாங்கோ?" என்றான் அந்தப்பெடியன். கொடுத்துவிட்டு எனது அலுவலகம் நோக்கிப் புறப்பட்டேன். புகையைக் கக்கிக்கொண்டு ஒரு வாகனம் சீறிப்பாய்ந்து சென்றது.

கொரோனாவுக்காக போட்ட மாஸ்க் புகையிலிருந்து காக்கிறது என்ற திருப்தி என்னை ஆசுவாசப்படுத்தியது

# செல்பி எடுக்க ஒரு மியூசியம்



அருங்காட்சியகங்கள் தெரியும். தந்திரக்கலை அருங்காட்சியகங்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? சென்னையிலேயே அப்படி ஓர் அருங்காட்சியகம் உள்ளது. அதுதான் 'கிளிக் ஆர்ட் அருங்காட்சியகம்'. இது 3டி தந்திரக்கலை அருங்காட்சியகம்.

அதென்ன தந்திரக்கலை?தந்திரக்கலைக்கு இரண்டாயிரம் ஆண்டு வரலாறு உண்டு. மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றிய இந்தக் கலையை பிரெஞ்சு மொழியில் 'தோம்பேலோயில்' ('Tompe-l'oeil') என்றழைக்கிறார்கள். 'கண்கட்டுவித்தை'யைத் தான் அப்படி அழைக்கிறார்கள்.

இருபரிமாணத்தில் வரையப்பட்டிருக்கும் ஓர்ஓவியத்தை முப்பரிமாண ஓவியமாக மாற்றிக் காட்டும் மாயவித்தை தான் இந்தத் தந்திரக்கலை. கிரேக்க, ரோமானிய காலத் தில் உருவான இந்தத் தந்திரக்கலை, படிப்படியாக ஐரோப்பா விலும் வளர்ந்தது.

உலகம் முழுவதும் பலநாடுகளில் இந்தத் தந்திரக்கலை அருங்காட்சியகங்கள் உள்ளன.

சென்னை ஈ.சி.ஆர். சாலை ஈஞ்சம்பாக்கத்தில் அமைந்துள்ள இந்த அருங்காட்சியகத்தில் விதம்விதமான தந்திரக்கலை ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த ஓவியங்களில் பெரும்பாலானவை நகைச்சுவை உணர்வுடன் படைக்கப்பட்டவையே. செல்ஃபி எடுக்கும் சிம்பன்சி, வெனிஸ் படகுப் பயணம், புருஸ்லீயிடம் அடிவாங்குவது, ஆதாமிடம் ஆப்பிள் வாங்குவது, ஆஸ்கர் விருது பொம்மையிடமே ஒஸ்கார் விருது வாங்குவது, பொம்மலாட்டம் ஆடுவது எனப் பல சுவாரசியமான ஓவியங்கள் இந்த அருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ளன.

# கடல் புறா

## பூர்வாங்கம் ஒரு கதை

இளவரசருக்கு இந்தச் சந்திப்பால் உண்டாகக்கூடிய வியப்பும் வருத்தமும் என்னைவிட வேறு யாருக்குப் புரியும்?" என்று கேட்டான் சுங்க அதிகாரியான கண்டியத்தேவன் பதிலுக்கு.

"எங்கள் விடுதலைக்கு மூன்று பேர்களைத்தான் முக்கியமாக நம்பியிருந்தேன்" என்று அநபாயன் மீண்டும் உணர்த்தினான்.

"தெரியும்" இந்த ஒற்றைச் சொல்லிலும் விளக்கத்தைக் காட்டினான் சுங்க அதிகாரி.

"அரபு நாட்டு அமீர் மூலம் இந்தப் பாலூரரை விட்டு வெளியேறத் திட்டமிட்டுவிட்டுப் பிறகு உங்களை வரவழைக்கலாமென்றிருந்தேன்" என்றான் அநபாயன்.

"இப்பொழுது அந்தச் சிரமம் தங்களுக்கில்லை. நாங்களே வந்து விட்டோம், ஆனால் ஒரு வித்தியாசம்" என்றான் கண்டியத்தேவன்.

"என்ன வித்தியாசம்?"

"உங்கள் விடுதலைக்கு எங்கள் கையை எதிர்பார்த்தீர்கள். ஆனால் இப்பொழுது எங்கள் விடுதலைக்கு உங்கள் கையை எதிர்பார்க்கிறோம். நிலைமை தலைகீழாக மாறி விட்டது."

"என் சொற்படி நடந்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது."

"உங்கள் சொற்படிதான் நடந்தோம்."

"நான் வழக்கமாகச் சந்திக்கும் இடத்தில் சந்தித்தீர்களா?"

"அதே இடத்தில்தான் சிறைக்குப் பின்புறமிருக்கும் அந்தச் சிறு வீட்டில்தான் சந்தித்தோம். ஆனால் அங்கு நாங்கள் மட்டும் சந்திக்கவில்லை."

"வேறு யார் சந்தித்தது?"

"பீமனும் எங்களைச் சந்தித்தான்."

இதைக் கேட்டதும் அநபாயன் புருவங்கள் வியப்பால் சற்றே மேல் நோக்கி எழுந்தன. "என்ன, பீமனா!" என்ற கேள்வியில் அந்த வியப்பின் ஒலி பலமாகப் பரவி நின்றது.

சுங்க அதிகாரி அநபாயனை நோக்கித் தலைதாழ்த்தி விட்டுச் சொன்னான்: "ஆம், அநபாயரே! பீமன் எங்களுக்கு முன்னதாக அந்தச் சிறு வீட்டிற்குள் காத்திருந்தான். நாங்களிருவரும் அந்த விடுதிக்குள் நுழைந்ததுமே வீரர்களைவிட்டு எங்களை சிறை செய்தான். எந்தெந்த இடங்களை ரகசிய இடங்களாக இந்த ஊரில் நாம் நினைத்திருந்தோமோ, அந்த




இடங்களெல்லாம் இப்பொழுது பீமன் வசத்திலிருக்கின்றன. இதோ இருக்கும் கூலவாணிகர் மாளிகையை நமது இரகசிய இடமாக வைத்திருந்தோம். அந்த இரகசியம் அம்பலமாகி விட்டது. அவர் மாளிகை கைப்பற்றப்பட்டது. அவரும் ஒற்றராகச் சிறை செய்யப்பட்டார். வெளி நாட்டுப் பிரமுகர் வீதியில் குணவர்மரைத் தாங்கள் தங்க வைக்கச் சொன்ன விடுதியிலும் இப்பொழுது கலிங்க வீரர்கள் சொன்ன விடுதியிலும் இப்பொழுது கலிங்க வீரர்கள் நிறைந்திருக்கிறார்கள். சிறைக்குப் பின்னாலிருக்கும் அந்தப் பழைய சிறு வீட்டையும் என்னையும் பீமன் புரிந்துகொள்ளவில்லையென்று நினைத்தேன். அதுவும் தவறாகி விட்டது. இந்தப் பாலூரிலுள்ள வீரர் வசமிருக்கின்றன. மற்றும்..."

"மற்றுமென்ன? சொல்லும் மேலே" அநபாயன் குரல் வறண்டு கிடந்தது.

"நீதி மண்டபத்திலிருந்து இளைய பல்லவரையும் மற்றத் தமிழரையும் நீங்கள் விடுவித்து வந்தீர்களல்லவா!"

"ஆம்"

"அதற்குப் பிறகு எந்தத் தமிழ் வீரனும் இந்தப் பாலூரின் கோட்டை வாயில்களில் காவல் செய்ய அனுமதிக்கப்படவில்லை.

இதைக் கேட்டதும் இளையபல்லவன் தன் ஆசனத்திலிருந்து பெரும் சீற்றத்துடன் எழுந்தான் அவனது ஈட்டிக்கண்கள் அநபாயனை ஒரு விநாடி நோக்கின. "அப்படியானால், பாலூரிலுள்ள தமிழ் வீரர்களை நாம் திரட்டி, கோட்டை வாயில்களில் பொருதி வெளியேறினாலென்ன?" என்று வினவினான்.

கண்டியத்தேவன் இளைய பல்லவனை நன்றாக ஏறெடுத்து நோக்கினான். " செய்யலாம். செய்வது சாத்தியம்கூட. ஆனால் அதன் விளைவுகள் பயங்கரமாய் இருக்கும்" என்றும் சொன்னான்.

"என்ன விளைவுகள்?"

"இப்பொழுது பாலூரில் தமிழர் ஓரளவுதான் துன்புறுத்தப்படுகிறார்கள் பெரும்பாலோர் மீது கண்காணிப்புதான் நடக்கிறது. என்னைப்போல் தீவிரமாக வேவுத் தொழில் ஈடுபடுபவர் மீதுதான் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதற்குக் காரணம் இந்தப் பாலூரின் ஜனத்தொகை அமைப்பு, படைப் பகுதிகளின் அமைப்பு. பாலூரில் மூன்றிலொரு பங்கு தமிழர் இருக்கிறார்கள்.

படைப் பிரிவும் அந்தக் கணக்கில் தானிருக்கிறது. படையை முழுவதும் விரோதித்துக் கொள்வது பலனளிக்காது என்பதைப் பீமனும் அனந்தவர்மனும் உணர்ந்திருக்கிறார்கள். படையிலிருக்கும் தமிழர் புரட்சி செய்தால் பாலூரில் உண்டாகக்கூடிய நிலைமையும் அவர்களுக்குத் தெரியும் அந்தப்பயம் அவர்கள் கொடுஞ் செயல்களைத் தேக்கியிருக்கிறது.

தமிழ்ப் படைப் பிரிவை நாம் திரட்டி கோட்டைக் காவலை உடைக்க முயன்றால் அடுத்து வருவது இரண்டு நாள் பாலூர்ப் போர். பிறகு சோழர் கலிங்கர் போர். இதற்கிடையே தமிழர்கள் பெருநாசம். நால்வர் விடுதலைக்காக இந்த நிலைமையை நாம் சிருஷ்டிப்பதானால் நீங்கள் சொல்லும் திட்டத்தை நாம் கடைப்பிடிக்கலாம்" என்றான் சுங்க அதிகாரி.

மேற்கொண்டு ஏதோ பேச முயன்ற இளைய பல்லவனைத் தன் பார்வையொன்றினாலேயே தடை செய்த அநபாயன், சுங்க அதிகாரியை நோக்கி, "முடியாது. முடியாது அந்தத் திட்டத்தை நாம் கடைப்பிடிக்க முடியாது. சோழ நாட்டுக்கும் கலிங்கத்துக்கும் போர் நிகழ்வதானால் அதற்குக் காரணம் நாமாக இருக்கக்கூடாது.

போரைத் தூண்டும் பொறுப்பு பீமனுக்கும் அனந்தவர்மனுக்குமே இருக்கட்டும்" என்று கூறினான். பிறகு சற்று நிதானித்து விட்டு "அப்படியானால் எந்தக் கோட்டை வாசல் மூலமும் வெளியேற முடியாதா? பலவீனமான காவல் எங்கும் இல்லையா?" என்றும் வினவினான் சுங்க அதிகாரியை நோக்கி.

சுங்க அதிகாரி சொன்னான்: "அநபாயரே! இந்தப் பாலூர்ப் பெருந்துறையில் நான் அறியாத இடமோ வீரர்களோ கிடையாதென்பது தங்களுக்குத் தெரியும். இந்தக் கூலவாணிகர் இங்கு வருவதற்கு வெகு நாட்களுக்கு முன்னிருந்தே பாலூரின் சுங்கச்சாவடியில் மேலுக்கும் உண்மையில் சோழநாட்டு அலுவலுக்கும் நான் பணி புரிந்து வருவது தங்களுக்குத் தெரியும்.

ஆகவே, உள்ள நிலைமையை உள்ளபடி சொல்கிறேன். நாம் எந்தெந்த இடங்களை இரகசியமென்று வைத்திருந்தோமோ அந்த இடங்களெல்லாம் கலிங்க வீரர்கள் கையிலிருக்கின்றன. அங்கு நாம் நிறுத்தியிருந்த புரவிகள் வணிகப் பொருட்களை ஏற்றிச் செல்லும் வண்டிகள் அனைத்தும் கலிங்கத்தின் குதிரை சாலைகளுக்கும், வாகனக் கூடங்களுக்கும் பறந்து விட்டன.

அது தவிர உங்கள் நால்வரைப் பற்றிய அடையாளங்களும், ஒவ்வொரு கோட்டை வாயில் காவலருக்கும் விபரமாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகவே, நீங்கள் நால்வரும் தனித்தனியாகச் சென்றாலே கோட்டை வாயில்களைக் கடப்பது கஷ்டம். நால்வரும் சேர்ந்து சென்றால் கண்டிப்பாய்க் கடக்க முடியாது.

நிலமார்க்கமும் அறவே அமைக்கப்பட்டு விட்டது. நிலவழியில் கோட்டையைக் கடந்தாலும், அதற்கப்பால் ஒரு காதத்துக்கு வரிசையாக உள்ள சுங்கச் சாவடிகளில் ஏதாவதொன்றில் கண்டிப்பாய்ச் சிறைப்படுவீர்கள். (தொடரும்)

# உதிக்குமா செயற்கைச் சூரியன்

மனிதகுலம் இதுவரை சந்தித்திராத மாபெரும் விந்தை நிகழ்வொன்றை இப்பகுதியில் நாம் பார்க்கப் போகிறோம். 'இப்படியெல்லாம் நடக்குமா?' என்று வியந்துபோகுமளவுக்கு அந்த விந்தை நிகழ்வு சமீபத்தில் நிகழ்த்தப்பட்டிருக்கிறது. சூரியன் எவ்வளவு ஆற்றலுடையது என்பது உங்களுக்குத் தெரியும். 150 மில்லியன் கிலோமீற்றர் தூரத்தில் இருந்தாலும், அது தரும் சக்தியால், பெருமளவிலான மின்சாரத்தைத் தயாரித்துக்கொண்டிருக்கிறோம்.


அந்தச் சூரியனின் மொத்த சக்தியும் நமக்குக் கிடைத்தால்? சொல்லவே வேண்டியதில்லை. இதை அடிப்படையாகக்கொண்டு, ஆராய்ச்சித் திட்டமொன்றைச் சில விஞ்ஞானிகள் உருவாக்கினார்கள். அந்தத் திட்ட த்தை அவர்கள் வெளிப்படுத்திய போது, முதலில் கேலியாகவே பார்க்கப்பட்டது. ஆனால், பின்னர் பலராலும் அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த விந்தையான திட்டம் என்ன தெரியுமா? 'பூமியில் சிறிய அளவிலான சூரியனை உருவாக்குவது'

'என்ன... பூமியில் சூரியனை உருவாக்குவதா... இது என்ன முட்டாளதனம் என்றார்கள் பலர். ஆனால், விஞ்ஞானிகளின் கனவு மெய்ப்பட்டது. இந்தியா உட்பட 35 நாடுகள் இணைந்து, 'ITER' **(International Thermonuclear Experimental Reactor)** என்னும் அமைப்பை, பிரான்ஸ் நாட்டில் உருவாக்கினார்கள். அங்கு, 'டொகமாக்' **(Tokamak)** என்னும் எந்திரத்தைத் தயார் செய்தார்கள். அந்த டொகமாக் எந்திரம்தான் சூரியனாக மாறி ஒளிரப்போகிறது. கிட்டத்தட்ட 65 பில்லியன் டொலர் செலவைக் கொடுக்கக்கூடிய திட்டம் என்பதால், பல நாடுகளால் தொடர்ச்சியாகப் பணம் செலுத்த முடியாத சூழ்நிலை உருவானது. அதனால், **ITER** இன் திட்டம் சற்றுத் தள்ளிப்போனது. இதனால், டொகமாக் ஆராய்ச்சியே இல்லாமல் போய்விடுமே என்று விஞ்ஞானிகள் பயந்தபோதுதான், கடந்த வாரம் சிறியதொரு சூரியனை உருவாக்கி நம்பிக்கையளித்திருக்கிறது சீனா.

பிரான்ஸ் நாட்டின் **ITER** திட்டத்தில் சீனா இணைந்திருந்தாலும், தன் நாட்டிலும் சிறிய அளவிலான டொகமாக் எந்திரத்தைத் தயார் செய்து வந்தது. அதைத்தான் கடந்த வாரம் இயக்கிக் காட்டி, சாதனை புரிந்திருக்கிறது. இது, யாருமே நம்ப முடியாத ஆச்சரியம். அந்த நிகழ்வைப் பலர் அறிந்திருக்கவில்லை. மனிதகுலத்தின் மாபெரும் சாதனை அது. பிரான்ஸின் **ITER** திட்டத்தைத் தொடர்வதற்கான நம்பிக்கையை அது கொடுத்திருக்கிறது. மொத்தத்தில், குட்டிச் சூரியன் பூமியில் உதித்தே விட்டான்.

மின்சாரம், இன்றைய உலகில் மிகப்பெரிய பிரச்சினையாக மாறியிருக்கிறது. உபயோகத்துக்காக அதிக அளவில் அது தேவைப்படுகிறது. எந்த வழியில் மின்சாரத்தைத் தயாரிக்க முயன்றாலும், அங்கு ஏதோவொரு சிக்கல் உருவாகிக்கொண்டேயிருக்கும். அனல் மின்னுலைகள் மூலமாக மின்சாரத்தைத் தயாரித்தோம். அதற்குப் பயன்படுத்தப்படும் நிலக்கரியால், காபனீரொட்சைட்டு வெளியாகி, பூமியின் வளிமண்டலத்தை மாசாக்குகிறது என்னும் சிக்கல் எழுந்தது. அதற்கு மாற்றுவழியாக அணுசக்தியைப் பயன்படுத்தி, அணு உலைகளில் மின்சாரம் பெறப்பட்டது.

அணு உலைக் கழிவுகளை அகற்றுவது பெரும் பிரச்சினையானது. கூடவே அணு உலை விபத்து ஆபத்தும் பயத்தை உருவாக்கியது. எவ்வளவு பாதுகாப்பாக இருந்தாலும், சில அணு உலைகள் விபத்தில் சிக்கி



யிருக்கின்றன.

இயற்கையில் மின்சாரத்தைப் பெறுக் கொள்ளலாம் என்ற முடிவுடன், காற்றாலை, சூரியசக்தி போன்ற வழிமுறைகளில் மின்சாரத்தை உருவாக்கினோம். அவை ஓரளவுக்கு வெற்றியையும் கொடுத்தன. ஆனாலும், உலகம் முழுவதற்குமான மின்சாரத் தேவையோ மிகவும் அதிகமானது. எரிவாயுக்களால் பயன்படுத்தப்பட்ட வாகனங்களை, மின்சார வாகனங்களாக மாற்ற வேண்டிய சூழ்நிலைக்கு உலக நாடுகள் தள்ளப்பட்டன. அத்துடன், வீட்டில் பயன்படுத்தும் மின் எந்திரங்களும் அதிகமாகின. கூடவே, தொழிற்சாலைகளும் அதிகரிக்கத் தொடங்கின. இவையெல்லாம் சேர்ந்து, மின்சாரத்தின் தேவைகளை இரட்டிப்பாக்கின.

சூரியனின் மையக்கோளத்தின் வெப்பநிலை, 15 மில்லியன் டிகிரி செல்சியஸ். ஆனால், டொகமாக் எந்திரத்தில், 150 மில்லியன் செல்சியஸ் வெப்பத்தை உருவாக்கினார்கள். சொல்லப் போனால், இதுவும் ஒரு வகையில் அணுசக்தி மூலமாக மின்சாரம் தயாரிக்கும் மின்னுலைதான். 150 மில்லியன் செல்சியஸ் வெப்பநிலையில், ஐதரசன் அணுக்கருக்களை பிளாஸ்மா கதிர்களாக்கி, பலமான காந்தச் சிறைக்குள் அடைக்கும்போது, அங்கு அணுசக்தி உருவாகிறது. சீனாவின் பரிசோதனையில், சில விநாடிகளுக்கு டொகமாக் எந்திரம் இயங்கினாலும், அதை முதற்படி வெற்றியாகவே எடுத்துக் கொள்ளலாம். 10 நொடிகளில் பெறப்படும் சக்தியால், 50 ஆயிரம் வீடுகளுக்கு மின்சாரம் வழங்க முடியுமென்றால் அதன் சக்தி எப்படிப்பட்டது என்பதை கணித்துக் கொள்ளுங்கள். இதையே மேலும் தொடர்ச்சியாகப் பரிசோதனை செய்வதற்கு சீனா முடிவெடுத்திருக்கிறது.

பிரான்ஸிலிருக்கும் **ITER**, 2035 ஆம் ஆண்டளவில் முழுமையாக இயங்க ஆரம்பித்துவிடும் என்று அறிவித்திருக்கிறது. சீனாவோ, அதற்கு முன்னரே முழுமையான சூரியனைத் தொடர்ந்து உதிக்க வைத்துவிடும் என்று நம்புகிறது. ஆனாலும், அதற்கும் பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.

ஓர் அணுக்கருவை இரண்டாகப் பிளக்கும் போது, அதிகளவில் சக்தி வெளியாகும். அந்தச் சக்தியைக் கொண்டு இயங்குபவைதான் சாதாரணமான அணு உலைகள். ஒரு யுரேனியம் கதிர் வீச்சுத் தனிமத்தை (U235), ஒரு நியூட்ரோனால் தாக்குவதால், பேரியம் (Ba), கிரிப்டான் (Kr) என்னும் இர ண்டு கதிர்வீச்சுத் தனிமங்களும், மூன்று மேலதிக நியூட்ரோன்களும், சிறிது சக்தியும் அங்கு வெளிப்படுகின்றன. வெளியாகும் மூன்று நியூட்ரோன்கள், மேலும் மூன்று யுரேனியத்தைத் தாக்க அது மேலும் பிளவடைந்து சக்தியைக் கொடுக்கும். இது சங்கிலித் தொடராக நடைபெறுவதால், தொடர்ச்சியாகச் சக்தி வெளியே வந்து கொண்டிருக்கும். இங்கு அணுக்கள் பிளக்கப்படுவதால், அதை 'அணுப்பிளவு' (Atom fission) என்று அழைக்கிறார்கள்.

இந்தச் சங்கிலித்தொடர் விளைவை ஆரம்பித்துவிட்டால், அதை நிறுத்துவது கடினம். அதனால், அணு உலைகள் விபத்துக்குள்ளானாலோ, பாதிப்புக்கு உள்ளானாலோ, மிகப்பெரிய ஆபத்தைக் கொடுக்கும். நிறுத்தவே முடியாமல் அணுக்கதிர் வீச்சு எங்கும் பரவிவிடும் ஆபத்து உண்டாகிறது. ஆனால், டொகமாக் எந்திரத்தில் நடைபெறுவது அணுப்பிளவு கிடையாது. அங்கு உருவாவது அணுப்பிணைவு. ஐதரசன் அணுவின் இரண்டு வகை ஐசோடோப்புகளான, 'டியூடேரியம்' (Deuterium), 'ட்ரிடியம்' (Tritium) இரண்டையும், அதிக அளவிலான வெப்பத்தில் பிளாஸ்மா கூழாக மாற்றுகிறார்கள். அந்த பிளாஸ்மா கூழ், அதிக சக்திவாய்ந்த காந்தக் குழாய்களினுள் அழுத்தப்பட்டு, இரண்டு அணுக்களும் ஒன்றுடன் ஒன்று பிணையும் நிகழ்வு ஆரம்பமாகிறது. அவை, ஒன்றுடன் ஒன்று பிணையும் போது, ஹீலியமும், பெரும் பாலான சக்தியும் உருவாகின்றன. இது தொடர்ச்சியாக நடைபெறுவதால், அதிகளவு சக்தியை நாம் பெற்றுக் கொள்ளலாம். இதை, 'அணுப்பிணைவு' **(Atom fusion)** என்கிறார்கள்.

அணுப்பிளவால் உருவாகும் கழிவுகளைப்போல, அணுப்பிணைவில் எந்தக் கழிவும் உருவாவதில்லை என்பது மிகப்பெரிய அனுகூலமாகப் பார்க்கப்படுகிறது. அத்துடன் விபத்துகள் ஏற்படும் பட்சத்தில், எந்த நேரத்திலும் இதை நிறுத்திவிடலாம். இதுவும், இந்த அணுசக்தியால் ஏற்படும் இன்னுமொரு நன்மையாகிறது. இந்த நிகழ்வே, நிஜமான சூரியனிலும் நடைபெறுகிறது என்பதுதான் இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது. அதனால்தான், டொகமாக் எந்திரத்தை 'இன்னுமொரு சூரியன்' என்கிறார்கள்.

சூரியனின் மையக்கோளத்தின் அதிக வெப்பத்தால், ஐதரசன் அணுக்கருக்கள் பிளாஸ்மா கூழாக மாறி, ஒன்றுடன் ஒன்று பிணைய ஆரம்பிக்கின்றன. அப்போது, ஹீலியமும் சக்தியும் உருவாகின்றன. சூரியனில் நெருப்பு எரிவதாகப் பலர் தப்பாக நினைத்துக்கொள்கிறார்கள். சூரியனில் நெருப்பு எரிவதேயில்லை. அங்கு நடப்பதெல்லாமே அணுக்கதிர் வீச்சுகள்தான்.

அந்த அணுக் கதிர்வீச்சின் வெப்பமே நம்மைச் சுட்டெரிக்கும் சூரியனாக மாறுகிறது. சூரியனைப் போல, அதிக அளவு வெப்பமும், அங்கு நடைபெறும் அணுப் பிணைவும் இருப்பதாலேயே டொகமாக் எந்திரங்களையும் 'சூரியன்' என்று சொல்கிறார்கள்.

தொடர்ச்சியாக டொகமாக் இயங்க ஆரம்பித்தால், அதைச் 'சின்னச் சூரியன்' என்று அழைப்பதில் எந்தத் தயக்கமும் தேவையில்லை. காலம் விரைவில் பதில் சொல்லும்.

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : கண்ணா நலமா
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்-டி.கே.ராமமூர்த்தி
பாடியவர்கள் : சௌந்தரராஜன், பி.சுசீலா




பெற்றெடுத்த உள்ளம் என்றும் தெய்வம் தெய்வம்
அது பேசுகின்ற வார்த்தை என்றும் மௌனம் மௌனம்
ரத்தத்துடன் சேர்ந்ததந்தப் பாசம் பாசம்
அது நாள் கடந்தும் பிள்ளையுடன் பேசும் பேசும்
அது நாள் கடந்தும் பிள்ளையுடன் பேசும் பேசும்

அன்றொரு நாள் மன்னன் சாலமனுடைய சபையில்
ஒரு விசித்திரமான வழக்கு வந்தது
ஒரு பிள்ளை ... இரண்டு தாய்மார்கள்
இரண்டு பேரும் அது தன்னுடைய பிள்ளை என்கிறார்கள்
பிள்ளைக்கோ தன் தாய் யாரென்று
சொல்லத் தெரியவில்லை
மன்னன் சாலமன் யோசித்தான்

ஒரு தாயார் பல பிள்ளை பெறுவதுண்டு
இரு தாய்க்கு ஒரு பிள்ளை வருவதுண்டோ
அசல் யாரோ ... நகல் யாரோ
அறியேனென்று அதிசயித்த மன்னன்
சொன்னான் முடிவில் ஒன்று முடிவில் ஒன்று

இரண்டு பேருமே இது தன் பிள்ளை என்பதால்
யாரிடம் ஒப்படைப்பதென்று தெரியவில்லை
ஆகவே ... காவலா, இந்தப் பிள்ளையை ஆளுக்குப்
பாதியாகக் கொடு என்றான்..

காவலன் சென்றான் ..இடை வாளை எடுத்தான்
அந்த மகனை இழுத்தான் வாளை ஓங்கினான்
வாளை ஓங்கினான் .....மன்னா ...மன்னா ஆஆ

அம்மா என்றொரு குரலில்
ஒரு பெண் கண்ணீர் வடிக்கின்றாள்
இன்னொரு பெண்ணோ வாளைக் கண்டும்
புன்னகை புரிகின்றாள் புன்னகை புரிகின்றாள்

பாதி கொடுங்கள் என்றே அவளோ
மன்னனைக் கேட்கின்றாள்
மன்னா வேண்டாம் என்றே இவளோ
மன்னனைத் தடுக்கின்றாள்

இந்தா என்றவன் அந்தப் பெண்ணிடம்
மகனைத் தருகின்றான்
இவள் தான் உண்மைத் தாயென
மன்னன் சாலமன் முடிக்கின்றான் சாலமன் முடிக்கின்றான்
பெற்றெடுத்த உள்ளம் என்றும்

சக்தி வடிவானவளே அன்னை அன்னை
சக்தி வடிவானவளே அன்னை அன்னை
அவள் தானறிவாள் தான் வளர்த்த கண்ணை கண்ணை
சக்தி ஓம் .. சக்தி ஓம் .. சக்தி ஓம் .. சக்தி ஓம் ..

பக்தியிலும் அன்னை தான் முதலில் தெய்வம்
இந்தப் பார் முழுதும் அவள் வளத்த செல்வம் செல்வம்
சக்தி ஓம் .. சக்தி ஓம் .. சக்தி ஓம் .. சக்தி ஓம் ..

பதியம் வைத்த மரம் புதிய
தோட்டம்தனில் நின்று வாழ்வதுண்டு
புதியதாக வரும் உறவு யாவும்
அதன் சொந்தமாவதில்லை
சக்தி ஓம் .. சக்தி ஓம் .. சக்தி ஓம் .. சக்தி ஓம் ..

உதிரம் கொண்டு வரும் இதயம் போல
ஒரு உண்மை அன்பு இல்லை
உருகும் உள்ளமென தமிழ் கூறுவது
அன்னை என்ற சொல்லை
சக்தி ஓம் .. சக்தி ஓம் .. சக்தி ஓம் .. சக்தி ஓம் ..

பூவும் மஞ்சளுடன் பொங்கும் தேவி அவள் புவனேஸ்வரி
சக்தி ஓம் .. சக்தி ஓம் .. சக்தி ஓம் .. சக்தி ஓம் ..
பூஜை செய்து வரும் மாதர் காவல் தரும் ராஜேஸ்வரி
சக்தி ஓம் .. சக்தி ஓம் ...

பாசம் பொக்கி வரும் தேவி சக்தி அவள் ஜெகதீஸ்வரி
சக்தி ஓம் .. சக்தி ஓம் .
பார்வை தன்னில் உயர் நீதி சொல்ல வரும் பரமேஸ்வரி
சக்தி ஓம் .. சக்தி ஓம்

# கண்ணே நீ நலமா?

வாயால் சொல்ல முடியாத எத்தனையோ வார்த்தைகளை கண்கள் மூலம் சொல்லி விடலாம். இதனால் தான் காதலியின் கடைக் கண் பார்வைக்கு அப்படி ஒரு பவர் இருக்கிறது.

ஆனால் பலர் கண்ணை கண்டு கொள்ளாமல் இருப்பதால் பார்வையே பறிபோகும் நிலைகூட ஏற்பட்டு விடுகிறது. அதனால் கண்ணை பாதுகாத்தல் என்பது அவசியமாகிறது. அந்தப் பாதுகாப்பை எந்தெந்த முறைகளில் பின்பற்றலாம். அதற்கு சில டிப்ஸ்கள்.

❖ பாடசாலையில் குழந்தைகளைச் சேர்ப்பதற்கு



முன்பு 5 வருடத்திற்குள் ஒருமுறையாவது அவர்களது கண்களைப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

❖ பிறவியிலேயே பார்வைக் கோளாறு காணப்பட்டால் 9 வயதுக்குள்ளேயே அதை சரி செய்து கொள்ள வேண்டும். அதன் பின்னர் சரி செய்து கொள்வது என்பது கடினமான செயல்.

❖ பார்வைக் குறைபாடுகள் உள்ள மாணவர்கள் தற்போது நகர்ப்புறங்களில் தான் அதிகம் உள்ளனர். இதற்குக் காரணம் நகர்ப்புறங்களில் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை வெளியே அழைத்துச் செல்லாது வீட்டிலேயே வைத்திருப்பது தான். அதனால் குழந்தைகளை குறைந்தது அரை மணித்தியாலமாவது வெளியே அழைத்துச் செல்ல வேண்டும். வெளியே குழந்தையை அழைத்துச் செல்லும் இடம் மன அமைதி தரும் எந்த இடமாகவும் இருக்கலாம்.

❖ கண்கள் சிவப்பாக காணப்பட்டாலோ கண்ணில் வலி இருந்தாலோ அல்லது தூசி விழுந்தாலோ உடனே கண்ணில் தாய்ப்பால் விடுதல், நாக்கை விட்டு துலாவி தூசை எடுப் பது இன்றும் வழக்கமாக உள்ளது. இது தவறான செயல்கள். இவ்வாறு செய்வதால் கண் கெட்டுப் போகத் தான் வாய்ப்பு ஏற்படுமே தவிர அவை முறையான சிகிச்சை அல்ல. அதே போன்ற நேரங்களில் சுத்தமான நீரால் கண்களை கழுவி பின்னர் அருகில் உள்ள கண் மருத்துவரிடம் பரிசோதனை செய்து தேவையான சிகிச்சை பெறுவதே சிறந்தது.

❖ தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள் பாது காப்புக்காக கண்ணாடி கண்டிப்பாக போட்டுக் கொள்ள வேண்டும். தவறினால் கண்கள் பாதிக்கப்பட வாய்ப்புகள் மிக அதிகம்.

❖ சூரிய கிரகண நேரம் வெறும் கண்களால் பார்க்கக்கூடாது.

❖ மாறு கண் இருப்பது அதிர்ஷ்டம் என்று சிலர் நினைக்கிறார்கள். அது தவறு. கண் குறைபாடு தான் இந்த மாறு கண். இந்தக் குறைபாடு இருந்தால் 9 வயதுக்குள் அதை சரி செய்து கொள்ள வேண்டும்.

❖ மரபணு சம்பந்தப்பட்ட பார்வை குறைபாடு உள்ளவர்கள் சொந்தத்துக்குள் திருமணம் செய்து கொள்வதை முடிந்தவரை தவிர்க்க வேண்டும். மீறிச் செய்தால் பார்வைக் குறைபாடு உள்ள குழந்தைகள் அவர்களுக்கு பிறக்கும் வாய்ப்புகள் உண்டு. ஈட்டி எறிதல், கில்லி, வில் அம்பு எய்தல், கிட்டிப்புல் போன்ற கூர்மையான விளையாட்டு உபகரணங்களை பயன்படுத்தி விளையாடுவதை தவிர்க்க வேண்டும்.

❖ சலவை பவுடர், சம்போவை பல்லால் கடித்து அதை பிய்த்தல் கூடாது. அதேபோன்று சோடா போத்தல் திறக்கும் போது பல்லால் கடித்து அதைத் திறக்கக் கூடாது. இவ்வாறு செய்வதனால் கண்களுக்கு எதிர் விளைவுகள் ஏற்படும் பட்சத்தில் பார்வையிழப்பு ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.

❖ பண்டிகைக் காலங்களில் பட்டாசு வெடிக்கும் போது அந்த இடத்தில் சிறுவர்கள் நிற்பதை தவிர்க்க வேண்டும்.

❖ கண்களில் காயம் ஏற்பட்டு சிதைவு ஏற்பட்டால் கூட சத்திரசிகிச்சை மூலம் பார்வையிழப்பை தடுத்து விடலாம்.

❖ சர்க்கரை நோய் (நீரிழிவு), இரத்தக் கொதிப்பு உள்ளவர்கள் 6 மாதத்துக்கு ஒரு முறையாவது கண்களை பரிசோதனை செய்ய வேண்டும்.

❖ மருந்துக் கடைகளில் கிடைக்கும் கண் சம்பந்தப்பட்ட மருந்துகளை வைத்தியரின் பரிந்துரை இல்லாமல் வாங்கி உபயோகப்படுத்தக் கூடாது.

❖ கண்ணின் அழகான பார்வைக்கு கீரை, கரட், மீன், பால், முட்டை போன்றவற்றை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

தினமும் இவற்றில் ஏதேனும் ஒன்று உணவில் இடம்பெறுமாறு பார்த்துக் கொள்ளுங்கள். இவற்றை பின்பற்றினால் கண்ணை என்றும் நலமாக வைத்துக் கொள்ளலாம். பார்வையையும் மெருகேற்றலாம்.


கண்ணை பாதுகாப்பது எந்த அளவுக்கு முக்கியமோ அந்த அளவுக்கு கண் தானம் செய்வதும் அவசியம். ஒருவர் தனது கண்ணை தானம் செய்வதன் மூலம் உயிருடன் உள்ள இரண்டு பார்வையற்றவர்களுக்கு பார்வை கொடுக்க முடியும்.

தொகுப்பு:
வி.பிரணவன்
யாழ்.கலட்டி.

# நாம் தமிழர் கட்சியிலிருந்து பிரிந்தாலும் தமிழீழச் சிந்தனையில்தான் இருக்கிறேன்

## உறுதிபடத் தெரிவிக்கும் பேராசிரியர் கல்யாணசுந்தரம்

'எதிர்பாராததை எதிர்பாருங்கள்...' என்ற 'பிக்போஸி'ன் வார்த்தைகளைத் தமிழக அரசியல்களத்தில் இனி அடிக்கடி எதிர்பார்க்கலாம். இந்த வரிசையில், 'நாம் தமிழர் கட்சி'யின் இளைஞரணிப் பொறுப்பிலிருந்த பேராசிரியர் கல்யாண சுந்தரம், அண்மையில் அ.தி.மு.கவில் இணைந்திருக்கிறார். அவர் ஜுனியர் விகடனுக்கு வழங்கிய செவ்வி இங்கு அப்படியே பிரசுரமாகிறது.



**“2009 இறுதிப் போரில் நடந்திருப்பது இனப்படு கொலை. இந்த இனப்படுகொலைக்கு ஒரு தீர்வு வேண்டும் என்று தான் அம்மையார் ஜெயலலிதாவே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார். இனப்படுகொலைக்குத்தீர்வு என்று சொல்கிறபோதே, இரண்டு தனிநாடுகளாகத் தானே அது பார்க்கப்படும்.”**

**“திராவிட அரசியலுக்கு எதிராக தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தி வந்த நீங்கள், திடீரென திராவிட அரசியலில் கால் பதித்ததன் நோக்கம் என்ன?”**

"தமிழ்நாடு மற்றும் உலகத் தமிழர்களின் நல்வாழ்வுக்கான கோரிக்கைகளை முன்வைத்த போராட்டமாகத்தான் தமிழ்த் தேசிய அரசியலில் என் பயணம் இருந்திருக்கிறது. 'நாம் தமிழர்' கட்சியிலிருந்து வெளியேறிய பிறகு, தமிழ்நாட்டு மக்களின் நலன்பேணும் ஓர் இயக்கத்தில் என்னை இணைத்துக்கொள்ள விரும்பியபோது, என்னுடைய தேர்வு அ.தி.மு.கவாக இருக்கிறது. காரணம், சாதி, மதம் கடந்து எல்லா மக்களுக்குமான இயக்கமாக அ.தி.மு.க செயற்பட்டு வருவதுதான்!"

**“தமிழ், தமிழர் நலனை முன்வைத்து அரசியல் களமாடி வரும்' 'திராவிடக் கட்சிகளை தமிழ்த் தேசியவாதிகள் எதிர்ப்பது அரசியல் புரிதலின்மை' என்ற வாதத்தை இப்போது ஏற்றுக் கொள்கிறீர்களா?”**

“இதை அப்படிப் பார்க்க வேண்டாம். கோட்பாட்டு ரீதியாக திராவிடத்தை ஏற்கிறோமா மறுக்கிறோமா என்பதெல்லாம் வேறு. அதெல்லாம் 'திராவிடர் கழகம்' போன்ற அமைப்புகளோடு நாம் நடத்த வேண்டிய மிகப்பெரிய விவாதம். பெரியாரின் 'கடவுள் மறுப்புக் கொள்கை'யில் பெரிய அளவில் அ.தி.மு.க. மாறுபட்டு நிற்பதைப் பார்க்க முடிகிறது.

எல்லாச் சமயங்களைப் பின்பற்றுபவர்களுக்கும், கடவுள் நம்பிக்கை அற்றவர்களுக்குமான ஓர் அமைப்பாகத்தான்-அ.தி.மு.க. இருக்கிறது. திராவிடமா?, தமிழ்த் தேசியமா? என்ற தத்துவார்த்த அடிப்படைகளை யெல்லாம் தாண்டி, யதார்த்த அரசியல் களத்தில், தமிழர்களுக்கான அரசியலை முன்னெடுத்துச் செல்கிறார்கள் என்ற அடிப்படையில் தான் அ.தி.மு.கவை நான் பார்க்கிறேன். அதன் அடிப்படையிலேயே கட்சியிலும் இணைந்திருக்கிறேன்!"

**“தமிழீழம் அமையவேண்டும் என்ற உங்களது நீண்டகால கோரிக்கையை, தற்போது நீங்கள் இணைந்துள்ள அ.தி.மு.க. ஏற்காதே?”**

“2009 இறுதிப் போரில் நடந்திருப்பது இனப்படுகொலை. இந்த இனப்படுகொலைக்கு ஒரு தீர்வு வேண்டும் என்று தான் அம்மையார் ஜெயலலிதாவே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார். இனப்படுகொலைக்குத்தீர்வு என்று சொல்கிறபோதே, இரண்டு தனி நாடுகளாகத் தானே அது பார்க்கப்படும்."

**“தமிழீழம் என்ற வார்த்தை தீர்மானத்தில் பயன்படுத்தப்படவில்லை. அந்தக் கோரிக்கையையும் அ.தி.மு.க. ஆதரிப்பது இல்லை. எனில், இந்த விடயத்தில் உங்கள் நிலைப்பாடு என்ன?”**

"தனித் தமிழீழம் என்ற வார்த்தை பயன்படுத்தப்படவில்லை. ஆனால், ஓர் இனம் மற்றோர் இனத்தின் மீது தொடுத்த இனப்படுகொலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

'2009 இறுதிப் போரில், நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலை' என்பதை நிரூபிக்கத்தான் நாங்களும் போராடிக் கொண்டிருந்தோம். எனவே, இனப்படுகொலை என்று நிரூபிக்கப்பட்டு விட்டால், அது இரண்டு தனிநாடுகளுக்கிடையே நிகழ்ந்த யுத்தம்தான். எனவே, தனி ஈழம் என்ற என் கொள்கைக்கு நெருக்கமாக அ.தி.மு.க.நிற்கிறது."

**“அப்படியென்றால், 'தனித்தமிழீழம் அமைவது தான் நிரந்தரத் தீர்வு' என்ற கொள்கையில், இப்போதும் நீங்கள் உறுதியாக இருக்கிறீர்களா?”**

"இதுவரையிலும் நான் போராடி வந்த என் சிந்தனையில் நான் தெளிவாகத்தான் இருக்கிறேன். அந்தச் சிந்தனைக்கு நெருக்கமாக இருக்கிற கட்சியாகவே அ.தி.மு.கவை நான் பார்க்கிறேன். அமைச்சர்கள் மற்றும் முதல்வரோடு ஜனநாயகத் தன்மையோடு நமது கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளும் தன்மை அ.தி.மு.கவில் இருக்கிறது.

எனவே, எனக்கு வாய்ப்பு கிடைக்கிற போது என் மனதிலுள்ள கருத்துகளையும் அவர்களோடு பகிர்ந்து கொள்வேன்."

**“நாம் தமிழர் கட்சியிலேயே சாதி ரீதியாக வேட்பாளரை நிறுத்த முயன்ற கல்யாணசுந்தரம், தற்போது அ.தி.மு.கவிலும் அவர் சார்ந்த சாதியப் பின்புலத்துடனேயே இணைந்திருக்கிறார் என்கிறார்களே?”**

"நாம் தமிழர் கட்சியில் நான் இருந்தபோதும்கூட இப்படியொரு பார்வையை வேண்டுமென்றே என் மீது சிலர் வைத்தனர். மூன்று மாதங்களுக்கு முன்புவரை அண்ணன் சீமானுடன் தான் பயணித்திருக்கிறேன். அவரும் நானும் ஒரேசாதி அல்ல. வேட்பாளர் பட்டியலை அறிவிப்பதும் அண்ணன் சீமான்தான்.

எனவே, இந்தக் குற்றச்சாட்டை அவரும் என்மீது சுமத்த முடியாது. வேட்பாளராக என்னால் பரிந்துரைக்கப்பட்டவர்களிலும் பலர் மாற்றுச் சாதியைச் சேர்ந்தவர்கள். நான் நியமனம் செய்திருந்த 10 மாவட்டப் பொறுப்பாளர்களில், ஒருவர் மட்டுமே என் சுய சாதியைச் சேர்ந்தவர். அந்த ஒருவரும்கூட இப்போதும் நாம் தமிழர் கட்சியில் தான் இயங்கிக் கொண்டிருக்கிறார். என்னோடு வெளியே வரவில்லை. இதுதான் உண்மைநிலை!

2016 தேர்தலின்போது, இதே அமைச்சர் வேலுமணியை எதிர்த்து பரப்புரை செய்திருக்கிறேன். அப்படியென்றால், அன்றைக்கு அவரும் நானும் வேறு வேறு சாதியா? எனக்கு 37 வயதாகிறது. இன்றைய திகதி வரையில் எந்தவொரு சாதிச் சங்கத்திலும் என் பெயரும் இல்லை... சாதிச் சங்கத்துக்காக ஒரு ரூபாய்கூட நான் கொடுத்ததும் இல்லை."

**“பா.ஜ.க. ஆதரவு மனநிலை கொண்ட ஓ.பி.எஸ்.ஆதரவாளர்களுக்கு பதிலடி கொடுப்பதற்காகவே கல்யாணசுந்தரத்தைக் கட்சியில் சேர்த்திருக்கிறார் ஈ.பி.எஸ். என்கிறார்களே..?”**

“இது தவறான செய்தி. முதல்வர் தலைமையில் நான் கட்சியில் இணைந்த பிறகு, துணை முதல்வரையும் நேரில் சந்தித்தேன். அவரும் என்னை அன்போடு வாழ்த்தினார்."

ஜுனியர் விகடன்



# பலமான சக்திகள்

## ஒன்றிணைந்து டிஜிட்டல் தொழில்நுட்ப வரலாற்றை உருவாக்குகின்றன


அனைத்து இலங்கையர்களும் இதற்கு முன்னர் அனுபவித்திராத டிஜிட்டல் தொடர்பாடல் அனுபவத்தை வழங்கி, உங்கள் வாழ்க்கையிலும் தொழில்சார் எதிர்பார்ப்புக்களை மிக இலகுவாகவும் செயற்திறன் மிக்க வகையில் செய்துகொள்வதற்கான பின்னணியை வழங்க ஸ்ரீ லங்கா டெலிகொம் மற்றும் மொபிடெல் சேவைகள் இணைந்து புதிய பயணத்தை ஆரம்பித்துள்ளன.

SLTMOBITEL

நிகரற்ற இணைப்பு

# அடம் கில்கிறிஸ்ட் அதிரடி பக்கங்கள்

## காலத்தின் பதிவு



> அவுஸ்திரேலிய அணிக்குள் இருந்து கொண்டு அன்பை விதைத்தவர் அடம் கில்கிறிஸ்ட். எந்த நாட்டு கிரிக்கெட் ரசிகனையும், தன்னுடைய ரசிகனாக்கிவிடும் வல்லமை படைத்த கிரிக்கெட்டர். விக்கெட் கீப்பிங் பட்ஸ்மன் - என்கிற பெயருக்கு உண்மையான அர்த்தம் கொடுத்தவர்.

ஆக்ரோஷ அவுஸ்திரேலிய கிரிக்கெட்டர்களுக்கு மத்தியில் அமைதியாய் தான் உண்டு தன் கேம் உண்டு என விளையாடிய ஜென்டில்மன் கிரிக்கெட்டர் அடம் கில்கிறிஸ்ட். குணத்தில் மட்டும்தான் இவர் அமைதியே தவிர பட்ஸ்மனாகக் களத்தில் இறங்கிவிட்டால் செயல்புயல். யாரை மிகச்சிறந்த பௌலர் என்கிறார்களோ, யாரை எல்லா பட்ஸ்மன்களும் கண்டு மிரள்கிறார்களோ, அந்த பௌலரை டார்கெட் செய்து, அடித்து வெளுத்து எதிரணியின் கெத்தை மொத்தமாகக் காலி செய்வதுதான் கில்கிறிஸ்ட்டின் தனிச்சிறப்பு. கில்கிறிஸ்ட்டின் இடம் என்பது சர்வதேச கிரிக்கெட்டில் இன்று வரை யாராலும் நிரப்பமுடியாத இடமாக வெறுமையுடனேயே இருக்கிறது.

ரிக்கி பொன்ட்டிங், ஷேன் வோர்ன், டேமியன் மார்ட்டின், வாக் பிரதர்ஸ், ஜேஸன் கில்லெஸ்பி என 90-களின் அவுஸ்திரேலிய அணியில் யாரைப் பார்த்தாலும் வெறுப்பும், கோபமும் வரும். அவுஸ்திரேலிய வீரர்கள் மிகுந்த கர்வம் கொண்டவர்களாக இருப்பார்கள். ஆனால், இந்த அவுஸ்திரேலிய அணிக்குள் இருந்துகொண்டு அன்பை விதைத்தவர் ஆடம் கில்கிறிஸ்ட். எந்த நாட்டு கிரிக்கெட் ரசிகனையும், தன்னுடைய ரசிகனாக்கிவிடும் வல்லமை படைத்த கிரிக்கெட்டர். விக்கெட் கீப்பிங், பட்ஸ்மன் என்கிற பெயருக்கு உண்மையான அர்த்தம் கொடுத்தவர். விக்கெட் கீப்பர் என்றால் எப்படி ஆடவேண்டும் என்பதற்கான உதாரணம் கில்கிறிஸ்ட். 90-களின் கிரிக்கெட் வரலாற்றை கில்கிறிஸ்ட் இல்லாமல் எழுதிவிட முடியாது!

அவுஸ்திரேலிய அணி என்பது அப்போது தொடர் ஆச்சரியங்களைக் கொடுக்கக்கூடிய அணியாக இருக்கும். அவுஸ்திரேலியாவில் ஒரு சிறந்த வீரர் ஓய்வுபெற்றால், அவருக்கு மாற்றாக அவரைவிட மிகவும் சிறந்த இன்னொரு வீரர்தான் வருவார். அப்படி 90-களின் ஆரம்பத்தில் அவுஸ்திரேலியாவின் முகமாக இருந்த இயான் ஹீலிக்கு பதிலாக 96இல் அவுஸ்திரேலிய அணிக்குள் நுழைந்தவர்தான் அடம் கில்கிறிஸ்ட்.

மிகப்பெரிய சாதனைகள் படைத்தவர்கள் எல்லோருமே ஆரம்பத்தில் சறுக்கியவர்களாகத்தான் இருப்பார்கள் என்பதற்கு ஆடம் கில்கிறிஸ்ட்டும் விதிவிலக்கல்ல. 1996இல் இந்தியாவில் நடைபெற்ற டைட்டன் கோப்பைத் தொடர்தான் அடம் கில்கிறிஸ்ட்டின் கரியரைத் தொடங்கிவைத்தது. இயான் ஹீலி காயம் அடைந்ததால் அடம் கில்கிறிஸ்ட் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் ப்ளேயிங் லெவனில் சேர்க்கப்பட்டார். முதல் போட்டியில் எட்டாவது பட்ஸ்மனாகக் களமிறங்கிய கில்கிறிஸ்ட் 22 பந்துகளில் 18 ரன்கள் அடித்துவிட்டு டொனால்ட் பந்துவீச்சில் போல்டானார். அடுத்த போட்டியில் முதல் பந்திலேயே ரன் அவுட். இதனால் இரண்டு போட்டிகளோடு கில்கிறிஸ்ட் நீக்கப்பட்டு மீண்டும் இயான் ஹீலி அணிக்குள் சேர்க்கப்பட்டார்.

கில்கிறிஸ்ட் மீண்டும் அவுஸ்திரேலிய அணிக்குள் வர ஒரு வருடம் ஆனது. ஹீலிக்கு இரண்டு போட்டிகளில் விளையாடத் தடைவிழுந்ததால் மீண்டும் அணிக்குள் வந்தார் கில்கிறிஸ்ட். ஆனால், இந்தமுறை மீண்டும் இயான் ஹீலி அணிக்குள் வந்தபோதும், கில்கிறிஸ்ட்டின் இடம் காலியாகவில்லை. மார்க் வாக் காயமடைந்திருந்ததால் பட்ஸ்மனாக அணிக்குள் தொடர்ந்தார் கில்கிறிஸ்ட். இங்கிருந்துதான் கில்கிறிஸ்ட்டின் கிரிக்கெட் வாழ்க்கை அடுத்த கட்டத்துக்கு நகர்ந்தது.

மார்க் டெய்லரை ஒருநாள் போட்டிகளில் இருந்து அவுஸ்திரேலிய தேர்வாளர்கள் தூக்க, மார்க் வாகிற்கு சரியான ஒப்பனிங் பார்ட்னர்கள் இல்லாமல் தவித்தது அவுஸ்திரேலியா. அப்போது லோயர் ஓடரில் ஆடிக் கொண்டிருந்த கில்கிறிஸ்ட்டை ஓப்பனிங் இறக்க முடிவெடுத்தார் அப்போதைய கப்டன் ஸ்டீவ் வாக். அவுஸ்திரேலியாவின் பொற்காலம் ஆரம்பமானது. ஓப்பனராகக் களமிறங்கிய இரண்டாவது போட்டியிலேயே சதம் அடித்து அசத்தியவர் அடுத்தடுத்து அற்புதங்களை நிகழ்த்த ஆரம்பித்தார்.

1997 - 1998 இல் நடைபெற்ற கார்ல்ட்டன் அண்ட் யுனைடெட் சீரிஸில் அவுஸ்திரேலியாவை எதிர்த்து விளையாட தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து அணிகள் அவுஸ்திரேலியா வந்திருந்தன. இதில் லீக் போட்டிகளில் தென்னாபிரிக்காவுடன் மோதிய நான்கு போட்டிகளிலுமே அவுஸ்திரேலியா தோல்வியடைந்தது. ஆனால், நியூசிலாந்துக்கு எதிராகப் பெற்ற வெற்றிகளால் தட்டுத்தடுமாறி பெஸ்ட் ஓப் 3 பைனலுக்குள் நுழைந்தது அவுஸ்திரேலியா. முதல் இறுதிப்போட்டியில் முதல் முறையாக மார்க் வாகுடன் ஓப்பனிங் வீரராகக் களமிறக்கப்பட்டார் கில்கிறிஸ்ட். முதல் போட்டியில் மார்க் வாகுக்கும், கில்கிறிஸ்ட்டுக்கும் காம்போ செட் ஆகாமல் மார்க் வாக் 3 ரன்களில் ரன் அவுட் ஆக, கில்கிறிஸ்ட்டும் 20 ரன்களில் அவுட் ஆனார். அவுஸ்திரேலியா முதல் பைனலில் தோற்றுப்போனது. அவுஸ்திரேலியாவின் கதை முடிந்தது. சொந்த மண்ணிலேயே தொடர் தோல்விகளைச் சந்திக்கிறார்கள், இனி தென்னாபிரிக்காதான் கிரிக்கெட்டின் சுப்பர் பவர் என எல்லோரும் நினைத்த நேரத்தில்தான் இரண்டாவது இறுதிப்போட்டியில் இருந்து சூழல் மாறியது.

சிட்னியில் நடந்த இரண்டாவது இறுதிப்போட்டியில் மீண்டும் மார்க் வாகோடு ஓப்பனிங் இறங்கினார் கில்கிறிஸ்ட். தென்னாபிரிக்காவின் 228 ரன் டார்கெட்டை 42 ஆவது ஓவரில் முடித்தது அவுஸ்திரேலியா. 104 பந்துகளில் 100 ரன்கள் அடித்தார் கில்கிறிஸ்ட். ஷான் பொல்லாக், லான்ஸ் க்ளூஸ்னர், ஆலன் டொனால்ட், பேட் சிம்காக்ஸ், மேக்மில்லன், கல்லினன் என மிகச்சிறந்த பந்துவீச்சாளர்களுக்கு எதிராக அடிக்கப்பட்ட சதம் இது.

முதலில் ஒருநாள் ஸ்பெஷலிஸ்ட் என டெஸ்ட் போட்டிகளில் கில்கிறிஸ்ட்டைச் சேர்க்காமல் வைத்திருந்தார்கள் அவுஸ்திரேலிய தேர்வாளர்கள். இயான் ஹீலியின் மோசமான ஆட்டம் கில்கிறிஸ்ட்டுக்கு டெஸ்ட்டிலும் இடம் கிடைக்க வழிவகுத்தது. 1999இல் ஹோபார்ட்டில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டிதான் கில்கிறிஸ்ட்டை ஒரு டெஸ்ட் பட்ஸ்மனாகவும் நிலைநிறுத்தியது.

### வேர்ல்ட் கப் ஸ்பெஷலிஸ்ட்!

1999 இங்கிலாந்து, 2003 தென்னாபிரிக்கா, 2007- கரீபியன் என தொடர்ந்து மூன்று உலகக்கோப்பைகளையும் அவுஸ்திரேலிய வெல்ல மிக முக்கியக் காரணம் அடம் கில்கிறிஸ்ட். இந்த மூன்று உலகக்கோப்பைகளின் இறுதிப்போட்டியிலும் ஆடம் கில்கிறிஸ்ட்டின் பங்கிருக்கிறது. 1999 உலகக்கோப்பை இறுதிப்போட்டியில் பாகிஸ்தான் வெறும் 132 ரன்களுக்கு ஓல் அவுட் ஆக, 20 ஓவர்களில் மேட்சை முடித்தது அவுஸ்திரேலியா. ஆடம் கில்கிறிஸ்ட் 36 பந்துகளில் 54 ரன்கள் அடித்து டொப் ஸ்கோரராக இருந்தார்.

2003 உலகக்கோப்பை இறுதிப் போட்டியில் ரிக்கி பொன்ட்டிங் இந்திய பௌலர்களை ஓடஓட விரட்ட, முதலில் ரூட்மப் போட்டுக்கொடுத்தவர் அடம் கில்கிறிஸ்ட். 48 பந்துகளில் 57 ரன்கள் அடித்துவிட்டு பொன்ட்டிங்கை "மாப்ள... நீ கவலைப்படாமா ஆடு... பந்தெல்லாம் நேரா பட்டுக்குத்தான் வருது" என சொல்லிவிட்டுப்போனார்.

கரீபியனில் 2007இல் நடந்த உலக கோப்பையின்போது தன் அந்திமக் காலத்தில் இருந்தார் கில்கிறிஸ்ட். சரியான போர்மில் இல்லாமல் திணறிக்கொண்டிருந்தவர், சரியாக இறுதிப் போட்டியில் போர்முக்கு வந்துவிட்டார். 2003 உலகக்கோப்பை இறுதிப்போட்டியில் இந்தியாவுக்கு ரிக்கி பொன்ட்டிங் கொடுத்த ட்ரீட்மென்ட்டை, இலங்கைக்கு அடம் கில்கிறிஸ்ட் கொடுத்தார். 104 பந்துகளில் 149 ரன்கள். 13 பவுண்டரி, 8 சிக்ஸர்கள். பவுண்டரி, சிக்ஸர்களில் மட்டும் 100 ரன்கள் அடித்திருந்தார் அடம் கில்கிறிஸ்ட். தில்ஹாரா பெர்னாண்டோ எனும் இலங்கை பௌலரின் அன்றைய கதறல்களைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. மலிங்கவுக்கும் அடி விழுந்தது.

இந்த உலகக்கோப்பை முடிந்ததும் மீண்டும் போர்முக்கு வருவதும் போவதுமாக இருந்தார் கில்கிறிஸ்ட். 2008 இல் இந்தியா அவுஸ்திரேலியா வில் வென்ற இரண்டாவது இறுதிப் போட்டிதான் கில்கிறிஸ்ட்டின் கடைசிப் போட்டி. தனது இறுதிப்போட்டியில் 2 ரன்களோடு வெளியேறினார் கில்கிறிஸ்ட்.

இந்தியாவுக்கு எதிராக விளையாடிய டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரோடு ஓய்வுமுடிவை அறிவித்தார் கில்கிறிஸ்ட். ஆனால், அவுஸ்திரேலிய பிரதமர் முதல் பயிற்சியாளர்கள் வரை கில்கிறிஸ்ட்டின் ஓய்வுமுடிவை பரிசீலனை செய்யும்படி கேட்டார்கள்.

ஆனால், ""லட்சுமணின் கேட்ச்சை டிராப் செய்ததுமே, என் மனம், இனி நீ இந்த விளையாட்டை விளையாடும் முழுத் தகுதியை இழந்துவிட்டாய் என சொல்லிவிட்டது. இனிமேல் நான் தொடர்ந்து விளையாடுவது நியாயமாக இருக்காது" என்றுசொல்லி ஓய்வு முடிவை உறுதிசெய்தார் கில்கிறிஸ்ட்.


# ஆர்ட்டமிஸ் ஆலயம் துருக்கி (கி.மு.323)

துருக்கியிலுள்ள ஆசியா மைனரின் மேற்கு கடற்கரையில் உள்ள தொன்மையான எபேசஸ் என்னும் துறைமுக நகரில் அமைந்திருந்த ஆர்ட்டமிஸ் ஆலயம்தான் உலக அதிசயப்பட்டியலில் இடம்பெற்ற மற்றொரு கிரேக்கக் கலைநுட்ப அற்புதம். எபேசஸ் இன்றைய துருக்கியின் செல்க்யூஸ் நகருக்கு தென்மேற்கே 3 கி.மீ.தொலைவிலும் புகழ்பெற்ற மற்றொரு துறைமுக நகரான இஸ்மித்துக்கு 50 கி.மீ.தொலைவிலும் அமைந்துள்ளன.

ஆர்ட்டமிஸ் எனும் பெண் கடவுள் அன்றைய கிரேக்க சமூகத்தில் இளம் பெண்களின் பாதுகாவல் கடவுளாக வணங்கப்பட்ட தெய்வம். ஸோயுஸ் மற்றும் லிட்டோவுக்கும் மகளாக அப்பலோவுடன் இரட்டைக் குழந்தைகளில் ஒருவராக பிறந்தவள். ஆர்ட்டமிஸ் குறித்து பல்வேறு செவிவழி புராண நம்பிக்கைகள் கிரேக்க மக்களிடம் இருந்திருக்கின்றன.

அப்பலோவுக்கு சில நிமிடங்கள் முன்னதாகப் பிறந்த ஆர்ட்டமிஸ் தனது தாய்க்கு அடுத்து குழந்தையான அப்பலோ பிறக்க தாதியாக உதவி புரிந்தாள் என்று அந்தக் கதைகளின் வழியே போதிக்கப்பட்டு வந்தது. அத்தனை அதி அற்புத சக்தி படைத்தவள் என்பதால் கிரேக்கப் பெண்கள் தங்கள் பிரசவ காலத்தில் ஆர்ட்டமிஸ் தெய்வம் தான் தங்களுக்கு துணை நிற்கும் என்று நம்பினார்கள்.

அதோடு மட்டுமல்லாமல் தவறான எண்ணம் கொண்ட ஆண்களிடமிருந்து ஆர்ட்டமிஸ் கடவுள் மட்டுமே தங்களைக் காப்பாற்றும் வல்லமை கொண்டது என்றும் அவர்கள் உறுதியுடன் கருதினார்கள்.



அதற்கும் பல கதைகள் அவர்களிடையே உலவி வந்தன. கிரேக்க நாட்டுப்புறக் கதைகளின் அடிப்படையில் காலிமாச்சூஸ் எழுதிய கவிதைகளின் ஆர்ட்டமிஸ் தனது மூன்றாவது வயதில் தனது தந்தை ஸோயுஸிடம் ஆறு வரங்களைக் கேட்டதாகவும் ஸோயுஸ் அதற்கு உறுதியளித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கடைசி வரை திருமணம் செய்யாமல் கன்னியாகவே இருக்கவும் கிரேக்க பெண்களின் பிரசவ சமயங்களில் துணை செய்யும் வலிமையையும் அப்பலோவை விட அதிகமான புகழை பெறவும் வேட்டைகளில் ஈடுபட்டு வெற்றி பெறும் சக்தியைத் தரவும் இளம் பெண்களுக்கு பாதுகாவலாக விளங்கவும் தன்னை வணங்குபவர்களுக்கு வளமிக்க வாழ்வைத் தரவும் போதுமான சக்தியை வரமாகப் பெற்றாள். ஆண்களின் தெய்வமாக அப்பலோ வணங்கப்பட்டாள்.

ஆர்ட்டமிஸ்க்கு ஒன்பது வயதாகும்போது அவளுக்கு காட்டின் அரசன் பான் தங்க கொம்புகள் கொண்ட மான்கள் பூட்டிய தேர், வேட்டை நாய்கள், வில், அம்பு ஆகியவற்றையும் அவள் வேட்டைக்கு செல்வதற்காகப் பரிசளித்தார்.

பேரழகியான ஆர்ட்டமிஸ் மீது பல அரசர்களின் கண்கள் பதிந்தன. ஆற்றின் கடவுளான ஆல்பியுஸ் அவள் மீது தீராக் காதலுடன் இருந்திருக்கிறான். ஆனால் ஆர்ட்டமிஸ்க்கு அவன் மீது சிறிதும் நாட்டமில்லை. ஒருமுறை அவளை அடைய நினைக்கையில் அவள் இதைப் புரிந்து கொண்டு முகமெல்லாம் சேற்றினை அப்பிக்கொண்டு தப்பித்தாள். பிறகு டைடன் லோப்காஸின் மகன் போபகாஸ் மனதில் தீய எண்ணங்களுடன் அவளை அணுகிய போது அவனைப் போலோ மலைப் பிரதேசத்தில் தாக்கிக் கொன்று விட்டாள்.

சிப்ரோட்டஸ் எனும் இளைஞன் பலாத்காரம் செய்யும் எண்ணத்துடன் அவளருகே வரும் போது அவனது மனதை படித்து விட்ட ஆர்ட்டமிஸ் அவன் வயதில் மிகச் சிறியவன் என்பதால் அவனைக் கொல்ல விரும்பாமல் அவனை பெண்ணாக மாற்றிவிட்டாள். (தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2196

**கலைவாணி**




**பிரவீன்**




**சாதுரியா**




**நஜீபன்**




**விக்னேஸ்**




**தாரணி**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 236

## தாவரங்களில் துளிர்த்து வரும் பசுமை

எம்மை சுற்றி பச்சைப்பசேல் என்று வளரும் தாவரங்கள் அனைத்தும் நித்தமும் பல்லாயிரக் கணக்கான லீற்றர் ஈரலிப்பான ஒட்சிசனை உருவாக்கிக்கொண்டிருக்கும் தொழிற்சாலைகளாக விளங்குகின்றன. உயிருக்காய் போராடும் மனிதர்களை மீட்டெடுக்க ஈரலிப்பு கலந்த ஒட்சிசன்வாயு தேவைப்படுகின்றது என்பதை நாம் அறிவோம். ஒட்சிசன் இன்றி உயிரினங்கள் உயிர்வாழ முடியாது என்றும் தெரிந்து வைத்திருக்கிறோம். அத்துடன் நாம் வெளிவிடும் அசுத்தக் காற்றை உள்ளெடுத்து சுத்திகரிக்கும் வடிகட்டிகளாகவும் தொழிற்படுகின்றன. சுற்றாடலின் வெப்பநிலையைக் குறைத்து சூழல் வெப்பநிலையை மனிதன் சுகமாக வாழக்கூடிய ஒருவெப்பநிலையில் சீர்செய்து வைக்கும் ஒரு வெப்பநிலை சீராக்கியாகவும் இந்த மரங்கள் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தாவரங்களில் துளிர்த்து வரும் குருத்துக்களும், பசுமையும், குளிர்ச்சியும், நிழலும் அதன் மலர்களும் மனித மனங்களுக்கு புத்துணர்ச்சியையும் அமைதியையும் அள்ளி வழங்குகின்றன. மாதம் மும்மாரி பொழியாவிட்டாலும் போதுமான அளவு மழைவீழ்ச்சி கிடைப்பதற்கும் எமது தண்ணீர்த் தேவையை நிவர்த்திப்பதற்கும் மரங்கள் இன்றியமையாதவை என்பதும் மரம் இன்றி மழை இல்லை என்பதும் எமக்குத் தெரியும். எமக்கு உணவுப்பொருட்களையும் வருவாயையும் தரும் தாவரங்கள் தான் பயனுள்ள தாவரங்கள் என்று எண்ணிக்கொள்கிறோம். அனைத்துத் தாவரங்களுமே பயனுள்ள அட்சய பாத்திரங்கள் என்பதை மறந்து விடுகின்றோம். இந்தப் பாத்திரங்களையும் அதன் பயன்களையும் பாதுகாக்க என்ன செய்யப் போகிறோம்.



நாம் வெட்டிவீழ்த்திய ஒவ்வொரு மரங்களுக்காகவும் வேதனைப்படுவோம். அதற்கு பிராயச்சித்தமாக வீழ்த்திய ஒவ்வொரு மரங்களுக்கு பதிலாகவும் பல மரங்கள் நட்டு வளர்ப்போம். மரம் ஒன்றை நாட்டி வளர்ப்பது ஒரு உன்னதமான புண்ணிய காரியம் மட்டுமல்ல மனித குலத்திற்கும் மருத்துவ உலகிற்கும் செய்யும் ஒரு மகத்தான சேவை என்பதை மனதில் நிறுத்துவோம். தாவரங்களிலும் அன்பு செலுத்து வோம். நாம் ஒவ்வொருவரும் எமது வாழ்நாளில் எத்தனை மரங்கள் நட்டு வளர்த்தோம் என்பதை கணக்கிட்டு வைத்துக்கொள்வோம். அதைச்சொல்லிக்கொள்வதில் பெருமைப்பட்டுக் கொள்வோம்.

மனிதனுக்கு உணவு, உடை, உறைவிடம், மருந்து, சுவாசக்காற்று, நிழல், குளிர்ச்சி, மன அமைதி, மழை, நீர், எரிபொருள், மகிழ்ச்சி என அனைத்தையுமே தொடர்ந்து அள்ளிவழங்கிக் கொண்டிருக்கும் தாவரங்களையும் மரங்களையும் நட்டுவளர்த்து. வீட்டுச்சுற்றாடலையும் பொது இடங்களையும் தாவரங்களால் பசுமைப்படுத்துவோம்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

## வைத்தியர் கூறுவது உத்தரவு அல்ல ஆலோசனை

- உங்கள் மருத்துவம் சம்பந்தமான குறிப்புகள் துண்டுகள், புத்தகங்கள், சோதனைமுடிவுகள் அனைத்தையும் ஒரு பைல்கவரில் அல்லது பை ஒன்றில் போட்டு பாதுகாப்பாக வைத்திருங்கள். வைத்தியரைச் சந்திக்கும் பொழுது அவை அனைத்தையும் உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள். அவை உங்களுக்குப் பொருத்தமான மருத்துவப் பராமரிப்பை தீர்மானிப்பதற்கு பெரிதும் உதவியாக இருக்கும். இவற்றை எடுத்துச் செல்ல நீங்கள் தவறினால் உங்களுக்குப் பொருத்தமான சிகிச்சையை ஆரம்பிப்பதில் தாமதங்கள் ஏற்படலாம். சில முக்கியமான ஆவணங்களை போட்டோப் பிரதி எடுத்து வைத்துக் கொள்வது உங்கள் மருத்துவ தகவல்கள் தொலையும் சந்தர்ப்பங்களில் மிகவும் பயனுடையதாக அமையும்.

- வைத்தியர் சோதிக்கும் கருவியை (ஸ்ரெதஸ் கோப்) காதில் மாட்டியிருக்கும் பொழுது அவருடன் பேசுவதைத் தவிர்த்தல் வேண்டும். காரணம் அந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் கதைப்பது வைத்தியருக்கு கேட்காது. நீங்கள் கதைத்துக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இந்தக் கருவியினால் உங்களை சோதித்துப் பார்ப்பதும் கடினமாக இருக்கும்.

- உங்களுடைய நோய்நிலை சம்பந்தமாக நீங்களே வைத்தியருக்கு விபரிப்பது நல்லது. உங்களுக்கு இருக்கும் உண்மையான சரியான அறிகுறிகளை உங்களால் மட்டுமே முழுமையாக விபரிக்க முடியும். அதாவது ஒருநோயாளியின் நோய்நிலை சம்பந்தமாக அவரின் குடும்ப உறுப்பினர்கள் விபரிப்பதிலும் பார்க்க அந்த நோயாளியே நேரடியாக வைத்தியருக்கு சொல்வது சிறந்தது.

- நீங்கள் பாவித்துக்கொண்டிருக்கும் மாத்திரைகளின் பெயர்களை அறிந்து வைத்திருப்பது மிகவும் அவசியமாகும். மாத்திரைகளின் நிறத்தையும், வடிவத்தையும் சொல்லி அதனை அடையாளப்படுத்த முனைவது சில சமயம் ஆபத்திலும் முடியலாம். ஒவ்வொரு வகையான மாத்திரைகளும் பல்வேறுபட்ட வடிவங்களிலும், நிறங்களிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே நீங்கள் குறிப்பிடும் வடிவத்தையும் நிறத்தையும் வைத்து நீங்கள் என்ன மாத்திரை பாவித்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை வைத்தியரினால் கண்டறிவது சிரமம்.

- வைத்தியரைச் சந்திக்கும் போது உங்கள் நோய்நிலை சம்பந்தமான எல்லாத் தகவல்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். உதாரணமாக உங்களுக்கு என்ன நோய்கள் இருக்கின்றன? உங்கள் குருதி அமுக்கம் எவ்வளவு?. ஒவ்வொரு மாத்திரைகளும் எதற்காக தரப்படுகின்றன?. அவற்றின் பெயர் என்ன?. செய்யப்பட்ட சோதனையின் முடிவு என்ன?. உங்கள் உணவுமுறை எப்படி அமைய வேண்டும்?. நீங்கள் என்னவகையான உடற்பயிற்சிகள் செய்யமுடியும்?. போன்ற வினாக்களுக்குகான விடைகளைத் தெரிந்து கொள்வது உங்களது உரிமையும் கடமையுமாகும்.

- சிறிய மருத்துவப் பிரச்சினைகளுக்கும் மருத்துவ நிபுணரை சந்திக்க வேண்டும் என்ற அவசியமில்லை. உங்கள் வீட்டின் அருகில் உள்ள அரசாங்க வைத்தியசாலையில் வைத்தியரை சந்தியுங்கள். தேவை ஏற்படின் மேலதிக சிகிச்சைக்கான ஒழுங்குகளை அந்த வைத்தியர் செய்துத ருவார்.

- வைத்தியர் கூறும் மருந்துகளை பாவிப்பதற்கு உங்களுக்கு விருப்பமில்லையானால் நீங்கள் அதனை வைத்தியரிடம் தெரிவித்து அதற்கான மாற்று வழிகளை அறிந்து கொள்ள முடியும்.

- வைத்தியர் கூறும் சிகிச்சை முறைகளையும் ஆலோசனைகளையும் ஏற்றுக்கொள்வது உங்களுக்கு கஷ்டமாக இருந்தால் அதனை திறந்த மனத்துடன் வைத்தியருக்கு நீங்கள் தெரியப்படுத்த முடியும்.

- வைத்தியர் உங்களுக்கு கூறுவது ஆலோசனையே தவிர உத்தரவு அல்ல. உங்களுடைய விருப்பத்திற்கு அமைவாகவும் உங்களின் அனுமதியுடன் மட்டுமே சிகிச்சைமுறை இறுதியில் வடிவமைக்கப்படும். எனவே வைத்தியரின் ஆலோசனையைக் கேட்டபின் உங்களது விருப்பத்தையும் தீர்மானத்தையும் வைத்தியருக்கு தெரியப்படுத்துவது உங்களது கடமையும் ஆகும்.

- உங்களுக்கு இருக்கும் அறிகுறிகளை கூட்டியோ மறைத்தோ. அல்லது குறைத்தோ வைத்தியருக்கு தெரியப்படுத்தினால் அது உங்கள் வைத்திய முறையில் பாதிப்பை ஏற்படுத்தலாம். எனவே வைத்தியரை உங்கள் நண்பராக கருதி உண்மை நிலையை அவருக்கு தெரியப்படுத்துவது நல்லது. உங்களது மருத்துவத் தகவல்களின் இரகசியத்தன்மை எப்பொழுதும் வைத்தியர்களால் பேணப்படும்

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

# இராசிபலன்

03.01.2021
மார்கழி 19, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தி முற்பகல் 8.28 மணிவரை
மகம் முன்னிரவு 8.05 மணிவரை
சுபநேரம் 9.30-11.00 மணிவரை
இராகுகாலம் 5.00-6.30 மணிவரை
சந்திராஷ்டமம் திருவோணம், அவிட்டம்
திருக்காட்சி ஞாயிறு வளவன்

**மேஷம்**: பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், அடிப்படை வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வழிபாடு திருப்தி தரும்.

**ரிஷபம்**: தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**: உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்**: குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**சிம்மம்**: நண்பர்கள் ஒளிவு மறைவின்றிப் பழகுவார்கள், குடும்பச் சுமை கூடும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி**: அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், சுப விரயங்கள் கூடும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சயன சுகக் குறைவான நாள்.

**துலாம்**: விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள்.

**விருச்சிகம்**: தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான நாள்.

**தனுசு**: அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும்.

**மகரம்**: சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள்.

**கும்பம்**: மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள்.

**மீனம்**: காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

துன்பம் ஒருவனை செல்வந்தனாக்காவிடினும் அறிவாளியாக்கும்

# சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்தால் மீளக் கட்டியெழுப்புவது கடினம்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

**(கொழும்பு)**

**கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத் துறையை கட்டியெழுப்பும் நடவடிக்கை தோல்வியடைந்தால் அனைத்து நடவடிக்கைகளும் தோல்வி அடையும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

உக்ரேய்னில் இருந்து வந்த முதலாவது சுற்றுலா பயணிகள் குழுவில் 6 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாமையை தொடர்ந்து அந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்தால் ஆபத்தான நிலைமை ஏற்படுவதற்கு வாய் ப்புகள் உள்ளதாக வைத்தியர்கள் மேலும் எச்சரித்துள்ளனர். (ஐ-4)

# உதயமாகியுள்ள புதிய வருடத்திலும் கொரோனாவுக்கு இடமளிக்கக்கூடாது

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் திட்டவட்டம்



(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் பரவலினால் கடந்த வருடத்தில் நாம் எதிர்கொண்டு வந்த நெருக்கடி நிலைமையை, உதயமாகியுள்ள இந்த புதிய வருடத்திலும் தொடர்வதற்கு இடமளிக்கக்கூடாது என்றும், அதனை தவிர்த்து செல்வதற்கு நாட்டு மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவார்கள் என்று எதிர்ப்பார்ப்பதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொவிட்-19 வைரஸ் பரவல் காரணமாக கடந்த வருடத்தில் ஒன்பது மாதங்கள் வரை நாம் பெரும் நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்தோம்.

அதற்கமைய இந்த வைரஸ் பரவல் காரணமாக இன்னும் சில பகுதிகள் முடக்கப்பட்டே காணப்படுகின்றன.

எனினும், தற்போது புது வருடமொன்று பிறந்துள்ளது.

உதயமாகியுள்ள புதிய வருடத்தை வரவேற்பதுடன் கடந்த வருடத்தில் நாம் எதிர்நோக்கி வந்த நெருக்கடி நிலைமை மீண்டும் உருவாகுவதற்கு இடமளிக்கக்கூடாது.

அதனை தடுப்பது என்றால் அனைவரும் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை கடைப்பிடிப்பதுடன், சுகாதார வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

இதேவேளை, தேவையின்றி வீட்டை விட்டு வெளி பிரதேசங்களுக்கு செல்வதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்நிலையில், தற்போது வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசித்து வரும் மக்கள், தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை கடைப்பிடிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# முடங்கியது திருமலை நகரம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக திருகோணமலை நகரம் முடங்கியுள்ளது.

திருகோணமலை மத்திய வீதியில் கொரோனாத் தொற்றாளர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அடையாளம் காணப்பட்டதை தொடர்ந்து குறித்த வீதியானது முடக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நகர் பகுதியில் எழுமாற்றாக நடத்தப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் ஒருவருக்கு தோற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து குறித்த கடை தொகுதிகளில் பணிபுரியும் வேலை ஆட்களுக்கு அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பரிசோதனையில் மேலும் ஆறு பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டதை அடுத்து. மத்திய வீதி ஆனது மணிக்கூட்டு கோபுர சந்தியில் இருந்து சம்பத் வங்கி சந்தி வரை மூடப்பட்டுள்ளது. (ஐ-4)

# திருமணத்தில் கலந்து கொண்ட மேலும் 21 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

அளுத்கமை பிரதேசத்தில் நடைபெற்ற திருமண வைபவம் ஒன்றில் கலந்து கொண்ட மேலும் 21 பேருக்கு கொரோனா தொற்றியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.


இவர்கள் பயாகலை, பொத்துவில மற்றும் களுத்துறை ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என களுத்துறை பொது சுகாதார பரிசோதகர் ஆர்.ஜீ. சிங்கபாகு தெரிவித்துள்ளார்.

கடந்த 16 ஆம் திகதி அளுத்கமையில் நடைபெற்ற திருமண வைபவத்தில் கலந்து கொண்ட ஒருவர் கொரோனா தொற்றாளர் என அடையாளம் காணப்பட்டார்.

இதனையடுத்து அதில் கலந்து கொண்டவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது. அதில் மணமகள் உட்பட 27 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இதனையடுத்து இவர்களின் இணைப்பாளர்களுக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் இந்த 21 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஐ-4)

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

## 27.12.2020 முதல் 20.12.2023 வரை



### தனுசு இராசி வாசகர்களே!

இதுவரை உங்கள் இராசியிலேயே ஜென்மச் சனியாக உலா வந்த சனி பகவான், இப்பொழுது 26.12.2020 அன்று இரண்டாமிடத்தில் அடியெடுத்து வைக்கின்றார். ஏழரைச்சனியில், ஜென்மச்சனி விலகி விட்டது. இப்பொ முது 'பாதச்சனி என்று அழைக்கப்படும் குடும்பச்சனியின் ஆதிக்கம் தொடங்கி விட்டது. எனவே குடும்பத்தில் ஒற் றுமை பலப்படும். மங்கல ஓசை மனை யில் கேட்கும். செல்வ வளம் சிறப்பாக இருக்கும்.

மகர இராசியில், ஏற்கனவே நீச்சம் பெற்ற குரு இருக்கிறார். அவரோடு சனி சேர்வதால் 'நீச்சபங்க இராஜயோகம்' ஏற்படுகிறது. மேலும் உங்கள் இராசி நாதன் 2 ஆம் இடத்தில் தன ஸ்தா னத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே பண வரவு திருப்தி தரும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். பிள்ளைகளால் வந்த பிரச்சினைகள் அகலும்.

### சுபகாரியங்கள் நிறைவேறும்

டிசெம்பர் 26 ஆம் திகதி முதல் உங் கள் இராசிக்கு 2 ஆம் இடமான குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனியால், குடும்பத்தில் இருந்த வேறுபாடுகள் அகலும். தள்ளிப்போன கல்யாண காரி யங்கள் இப்பொழுது திடீரென முடிவாகி மகிழ்ச்சியை வழங்கும். விலகிச்சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணை வர். எதிரிகளின் தொல்லை குறையும். வழக்குகள் உங்களுக்கு சாதகமாக மாறலாம். இடமாற்றங்கள் இனிமை தரும் விதத்தில் அமையும். கைநழுவிச் சென்ற ஒப்பந்தங்கள் கைகூடி வரும். உத்தியோகத்தில் உங்கள் திறமைக் கேற்ற உயர்வு கிடைக்கும். சக ஊழி யர்களின் ஒத்துழைப்போடு முன்னேற் றத்தை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

### சனியின் பார்வை பலன்கள்

உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனிபகவானின் பார்வை, 4, 8, 11 ஆகிய இடங்களில் பதிவாகின் றது. எனவே அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றது. கல்வி முன்னேற் றம், சுகம், வாகனம், தாய்வழி உறவு, இழப்புகளை ஈடுசெய்யும் அமைப்பு, எதிர்பாராத இடமாற்றம், ஆரோக்கிய நிலை, வெளிநாட்டு முயற்சி, தொழி லில் இலாபம், உத்தியோக உயர்வு போன்றவற்றை பற்றி அறிந்து கொள் ளும் இடங்களில் உங்களுக்கு யோகம் தரும் சனியின் பார்வை பதிகிறது. எனவே, அவைகளில் எல்லாம் உங்க ளுக்கு எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக் கப் போகிறது. 4 ஆம் இட பார்வையால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். தாய்வழி ஆதரவு உண்டு.

சனியின் பார்வை அஷ்டம ஸ்தான த்தில் பதிவதால், ஆரோக்கியத் தொல்லை வரத்தான் செய்யும். ஆனால் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது. இருப்பி னும் சுய ஜாதகத்தை ஒருமுறை புரட்டிப் பார்த்துக்கொள்ளுங்கள். திசாபுத்திக் கேற்ற தெய்வ வழிபாடுகளை மேற்கொ ள்வது நல்லது.

சனியின் பார்வை பதினோராமிடத் தில் பதிவதால், தொழிலில் திருப்திகர மான இலாபம் வந்து சேரும். இந்த நேர த்தில் ஒருசிலருக்கு கிளைத்தொழில்கள் தொடங்கும் யோகமும் உண்டு. இளைய சகோதரத்தோடு இருந்த பகை மாறும். வெளிநாட்டிலிருந்து அனுகூலமான தகவல் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த பதவி உயர்வும் ஊதிய உயர்வும் இப்பொழுது கிடைக்க லாம். அரசு சார்ந்த பணிகளில் சேர விண்ணப்பித்து இருந்தவர்களுக்கு அது கைகூடும். அரசியல் பிரமுகர்களுக்கு மேலிடத்தின் ஆதரவும் நல்ல பொறுப்பு களும் கிடைக்கலாம். வாங்கிய கடனில் ஒரு பகுதியை கொடுத்து மகிழ்வீர்கள். வாகன யோகம் உண்டு.

### சனியின் பாதசாரப் பலன்கள்




27.12.2020 முதல் 27.12.2021 வரை: சூரியன் சாரத்தில் சனி சஞ்சரிக் கும் பொழுது, அரசியல் அனுகூலம் பெற்றவர்களின் ஆதரவோடும் உங்கள் வாக்கு வன்மையாலும் பல காரியங்க் ளைச் சாதித்துக் கொள்வீர்கள். பெற்றோர் வழியில் இருந்த மனவருத்தங்கள் மறையும். தந்தை வழியில் ஆதாயம் தரும் தகவல் உண்டு. பூர்வீக சொத்துக் களில் இருந்த பஞ்சாயத்துகள், நல்ல முடிவிற்கு வரும். சகோதர சச்சரவுக ளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் நீங்கள் கேட்ட சலுகைகள் கிடைக்கும். 'வீடு வாங்க வேண்டும்', 'வாகனம் வாங்க வேண்டும்' என்ற உங்களின் கனவு நனவாகப் போகின்றது. உஷ்ணா திக்க நோய்கள் வந்து போகும்.

28.12.2021 முதல் 26.01.2023 வரை: சந்திரன் சாரத்தில் சனி சஞ்ச ரிக்கும் பொழுது, கூடுதல் கவனம் செலு த்த வேண்டிய நேரமாகவே அமை கின்றது. அஷ்டமாதிபதியாக சந்திரன் விளங்குவதால் பொருளாதாரப் பற்றாக் குறை அதிகரிக்கும்.

27.01.2023 முதல் 19.12.2023 வரை: செவ்வாய் சாரத்தில் சனி சஞ்சரிக் கும்போது, பிள்ளைகள் வழியில் ஏற்பாடு செய்த கல்யாண முயற்சிகள் கைகூடும். பிள்ளைகள் மேற்படிப்பிற்காக வெளிநாடு செல்லவும் வெளிமாநிலம் செல்லவும் நீங்கள் செய்த முயற்சி கைகூடும். இக்காலத்தில் கும்ப இராசிக்குச் சனி செல் கின்றார். எனவே சுபவிரயங்கள் அதிகரி க்கும். வாங்கிய சொத்தை விற்றுவிட்டு புதிதாக வீடு வாங்கும் யோகம் உண்டு. உடல்நலம் சீராகும்.

### குருப்பெயர்ச்சிக் காலம்

சனிப்பெயர்ச்சிக்காலத்தில் மூன்று முறை குருப்பெயர்ச்சி நடைபெற இருக் கின்றது. கும்பத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் குரு வருகின்றார். எனவே சகோதரர்களால் நன்மை கிடைக்கும். வாழ்க்கைப் பாதையில் புதிய திருப்பம் உண்டாகும். தொழிலில் புதிய பங்குதா ரர்கள் வந்திணையலாம். தைரியத் தோடு எதையும் செய்வீர்கள். மீனத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, தொழில் ஸ்தானத்தை குரு பார்க்கப்போகின்றார். எனவே தொழில் முன்னேற்றம் உண் டாகும். மிதமிஞ்சிய பொருளாதாரம் ஏற்படும். மேஷத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை உங்கள் இராசி யில் பதியப் போவதால் உடல் நலம் சிறப்பாக இருக்கும். உள்ளம் மகிழும் சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும்.

### ராகு-கேது பெயர்ச்சிக் காலம்

21.03.2022 இல் நடைபெறும் ராகு-கேது பெயர்ச்சியின்போது, மேஷத்தில் ராகுவும் துலாத்தில் கேதுவும் சஞ்சரிப் பார்கள். இந்தக் காலகட்டத்தில் சொத்துக் களால் ஆதாயம் உண்டு. தொழில் வள ர்ச்சி சிறப்பாக இருக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமைப்படத் தக்கதாக இருக்கும். கேது பலத்தால் வருமானம் திருப்தி தரும்.

08.10.2023 இல் நடைபெறும் ராகு-கேது பெயர்ச்சியின்போது, மீனத்தில் ராகுவும் கன்னியில் கேதுவும் சஞ்சரிப் பார்கள். இந்த நேரத்தில் தாயின் உடல் நலத்தில் கவனம் தேவை. சகோதர ஒத்துழைப்பு குறையலாம். வாகன மாற்றம் வருவதற்கான அறிகுறி தென்ப டும். தேக நலனுக்காகச் செலவிடும் சூழ்நிலை உண்டு. கேது பலத்தால் உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகை கள் கிடைக்கும்.

### வெற்றி பெற வைக்கும் வழிபாடு

வியாழக்கிழமை தோறும் குரு பகவானை வழிபடுவதோடு இல்லத்துப் பூஜை அறையில் சஞ்சீவி மலையைத் தூக்கிவரும் அனுமன் படத்தை வைத்து, அனுமன் கவசம் பாடி வழிபட்டால் அன் றாட வாழ்க்கை நன்றாக அமையும்.

### சனியின் வக்கிர காலம்

12.05.2021 முதல் 26.09.2021 வரை, 25.05.2022 முதல் 09.10. 2022 வரை, 27.06.2023 முதல் 23.10. 2023 வரை என மூன்று முறை சனி வக்கிரமடைகின்றார்.

இக்காலத்தில் சகோதர பாசம் குறை யலாம். உங்களைச் சார்ந்து இருப்பவர் களால் பிரச்சினைகள் வந்து கொண்டே இருக்கும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. குடும்பத்தில் அமைதி குறை யாமலும் உடன் இருப்பவர்களுடன் பகை ஏற்படாமலும் பார்த்துக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும்.

## குடும்பச் சனியின் ஆதிக்கம், வாழ்வில் கடுமை இனிக்குறையும்!

## ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இந்த சனிப்பெயர்ச்சியால் பெண்க ளுக்கு பொருளாதாரப் பிரச்சினை அகலும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். குடும்ப உறவு பலப்படும். மங்கல காரியம் இல்லத்தில் நடைபெற லாம். கணவன் - மனைவிக்குள் அன் பும் பாசமும் அதிகரிக்கும். கடன் சுமை குறையும். தாய் மற்றும் சகோதரர்கள் தக்க விதத்தில் உதவி செய்வர். பிள் ளைகளால் பெருமை சேரும். அவர் களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட இடத் திற்கு இடமாறுதல்களும், ஊதிய உயர் வும் உண்டு. பாதச்சனி நடைபெறுவ தால் ஆரோக்கியத்தில் மட்டும் சிறுசிறு தொல்லைகள் ஏற்பட்டு அகலும். எதி லும் கவனமுடன் இருந்து கொள்வது நல்லது. (தொடரும்)

# உலக சக்திகளுடனான மோதலை தவிர்க்க விரும்புகிறோம்

## ஐ.நாவிற்கு ஈரான் தெரிவிப்பு

(டெஹ்ரான்)

**உலக சக்திகளுடனான மோதலைத் தவிர்க்க விரும்புவதாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கு எழுதிய கடிதத்தில் ஈரான் தெரிவித்துள்ளது.**

ஈரானிய புரட்சிப் படையின் தளபதி காஸிம் சுலைமானி கொல்லப்பட்டு ஓராண்டு நினைவையடுத்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதுடன் ஈரானின் வளைகுடா பகுதியில் அமெரிக்க இராணுவத்தின் அண்மைய செயற்பாடுகளை ஈரான் கண்டித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபைக்கு நேற்று முன்தினம் எழுதியுள்ள கடிதத்தில், ஈரானின் வளைகுடா மற்றும் ஓமான் கடலில் அமெரிக்காவின் இராணுவ சாகசத்தை ஈரான் கண்டித்துள்ளது.

அத்துடன், ஈரானுக்கு எதிராக அமெரிக்காவால் போலித் தகவல்கள், ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் மற்றும் அச்சுறுத்தும் கருத்துக்கள் பகிரப்படுவதையும் ஈரான் கண்டித்துள்ளது.

மேலும், அமெரிக்காவின் போர்க் குணங்கள் பதற்றங்களை ஆபத்தான நிலைக்கு உயர்த்தும் எனவும் அதன் அனைத்து விளைவுகளையும் அமெரிக்காவே பொறுப்பேற்க வேண்டும் என்றும் ஈரான் மோதலை விரும்பவில்லை என்பதுடன் தமது மக்களையும் தேசிய பாதுகாப்பையும் பாதுகாப்பதற்கும் உறுதிபூண்டுள்ளதாக ஈரான் குறிப்பிட்டுள்ளது. (நி-4)

## ஊடகவியலாளர் சுட்டுக்கொலை


(காபூல்)

ஆப்கானிஸ்தானின் கோர் (Ghor) மாகாணத்தில் வானொலி ஊடகவியலாளர் ஒருவர் ஆயுததாரிகளால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானில் கடந்த இரண்டு மாதங்களில் கொல்லப்பட்ட ஐந்தாவது ஊடகவியலாளர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆப்கானில், தலிபான்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருந்தாலும் வன்முறை அதிகரித்து வருவதால், பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள் மற்றும் உரிமை ஆர்வலர்கள் உள்ளிட்ட முக்கிய நபர்களை கொலை செய்யும் நடவடிக்கைகள் அண்மைய மாதங்களில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## கனத்த மனதுடன் புதிய ஆண்டை வரவேற்ற மருத்துவ ஊழியர்கள்



(பிரேசிலா)

கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றுவரும் கொரோனா நோயாளிகளை பராமரிக்கும் மருத்துவ ஊழியர்கள் தமது விடுதிகளில் இருந்தவாறே அமைதியாக நின்று 2020ஆம் ஆண்டிற்கு விடைகொடுத்து 2021ஆம் ஆண்டை வரவேற்றனர்.

சீனாவில் 2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் 2020ஆம் ஆண்டு முழுவதிலும் தனது ஆதிக்கத்தை செலுத்தியது. இந்தக் கொரோனா வைரஸால் 2020ஆம் ஆண்டு உலக மக்களுக்கு மறக்க முடியாத ஆண்டாகவே அமைந் தது.

இதற்கிடையில், இன்று 2021ஆம் ஆண்டு பிறந்துள்ளது. இந்த ஆண்டு முதல் கொரோனா வைரஸ் முடிவுக்கு வந்து மக்கள் தங்கள் இயல்பு வாழ்க்கையை தொடங்க வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பு. 2021 ஆம் ஆண்டு பிறந்ததை உலக நாடுகள் கொண்டாடி வரும் சூழலில் இலட்சக்கணக்கானோர் தற்போதும் வைரஸால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.


இந்நிலையில், 2021 புத்தாண்டு கொண்டாட்டம் பிரேசில் நாட்டிலும் ஆர்வமாக கொண்டாடப்பட்டது. ஆனால், கொரோனா பாதிப்பால் மிகுந்த இன்னல்களை சந்தித்து வரும் நாடுகள் பட்டியலில் முக்கிய நாடாக உள்ளது பிரேஸில்.

அங்கு புத்தாண்டு கொண்டாடப்பட்டு வரும் நிலையில், வைரஸ் பாதிக்கப்பட்டோர் சிகிச்சை பெற்று வரும் வைத்தியசாலையில் பணியாற்றி வரும் மருத்துவ ஊழியர்கள் 2020 ஆம் ஆண்டை இறுகிய மனதுடன் கடந்தனர்.

வைத்தியசாலையில் கொரோனாச் சிகிச்சை பிரிவில் பணியாற்றி வரும் ஊழியர்கள் புத்தாண்டு பிறந்த நேரத்தில் தங்கள் இருக்கையில் இருந்து எழுந்து நின்று சில நிமிடங்கள் அமைதியாக நின்றனர்.

பெரும் பாதிப்புகளை ஏற்படுத்திய 2020 ஆம் ஆண்டு முடிவடைந்து 2021 அம் ஆண்டு பிறந்ததை அவர்கள் அமைதியாக நின்று எந்தவித ஆரவாரமும் இன்றி வரவேற்றனர். மேலும், கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளின் படுக்கை அருகே சென்று அவர்களுக்கு புத்தாண்டு வாழ்த் துக்களை உணர்ச்சிகரமாக தெரிவித்தனர். (நி-4)

## கின்னஸ் சாதனைகளை தட்டிச் சென்ற வாணவேடிக்கை



(அபுதாபி)

அபுதாபியில் நடந்து வரும் ஷேக் ஜாயித் பாரம்பரிய திருவிழாவில் 35 நிமிடங்கள் இடைவிடாமல் நடைபெற்ற வாணவேடிக்கை நிகழ்ச்சிக்கு 2 கின்னஸ் சாதனை விருதுகள் வழாங்கப்பட்டுள்ளன.

அபுதாபியில் பாரம்பரிய கலாசாரங்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் ஷேக் ஜாயித் பாரம்பரிய திருவிழா நடந்து வருகிறது. மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஷேக் ஜாயித் பெயரில் நடக்கும் இந்த விழாவில் பல்வேறு நாடுகளை சேர்ந்த கலை மற்றும் கலாசார நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த திருவிழா நடைபெறும் வளாகத்தில் புத்தாண்டு கொண்டாட்டத்திற்காக பிரமாண்டமான வாணவேடிக்கை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இதில் அங்கு அமைக்கப்பட்டு இருந்த 16 கோபுரங்களில் இருந்து 35 நிமிடங்களுக்கு தொடர்ந்து வாணவேடிக்கை நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்காக 2 கின்னஸ் சாதனை விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

முதலாவதாக 35 நிமிடங்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற உலகின் மிக நீண்ட வாண வேடிக்கை என்ற தலைப்பி லும், இரண்டாவதாக கிரண்டோலா வாணவேடிக்கை எனப்படும் வானில் சுழன்றுகொண்டே செல்லும் வகையில் நீண்ட நேரம் நடத்தப்பட்ட வாண வேடிக்கை என்ற தலைப்பிலும் இந்த சாதனை விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. (நி-4)

## முகேஸ் அம்பானிக்கு அபராதம் விதித்தது 'செபி'

(டில்லி)

இந்திய பங்குச்சந்தைகள் ஒழுங்குமுறை வாரியம், தொழில் அதிபர் முகேஷ் அம்பானிக்கு ரூ.15 கோடி இந்திய மதிப்பில் அபராதம் விதித்துள்ளது.

செபி எனப்படும் இந்திய பங்குச்சந்தைகள் ஒழுங்குமுறை வாரியம் பங்கு வர்த்தகத்தில் நடைபெறும் மோசடிகளை கண்காணித்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

கடந்த 2007ஆம் ஆண்டு ரிலையன்ஸ் இன்ஸ்ட்ரீஸ் நிறுவனம் ரிலையன்ஸ் பெற்றோலியம் நிறுவனத்தின் 4.1 சதவீத பங்குகளை பங்குவர்த்தகத்தை பாதிக்கும் வகையில் அது வீழ்ச்சி அடைந்த நேரத்தில் வாங்கி, விற்பனை செய்திருந்தது செபி விசாரணையில் கண்டறியப்பட்டது.

இந்த நிலையில் முறைகேடாக பங்கு வர்த்தகம் மேற்கொண்டது தொடர்பாக ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனம், அதன் தலைவரும்,



நிர்வாக இயக்குநருமான முகேஷ் அம்பானி மற்றும் மும்பை எஸ்.இ.எஸ். நிறுவனம், நவி மும்பை எஸ்.இ.எஸ். நிறுவனம் ஆகியவற்றிற்கு அபராதம் விதித்து உள்ளது. (நி-4)



மணிப்பூர்-நாகலாந்து எல்லையில் உள்ள சூக்கோ பள்ளத்தாக்கு பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை காட்டுத் தீ ஏற்பட்டது. நாகலாந்து பகுதியில் பற்றிய தீ மணிப்பூரின் சேனாபதி மாவட்டத்திற்குட்பட்ட பகுதிக்கு ப்ரவத் தொடங்கியது. வேகமாக தீ பரவிய நிலையில், பல ஆயிரம் ஏக்கர் பரப்பில் உள்ள மரங்கள், செடி, கொடிகள் கருகி உள்ளன. தீயணைப்பு துறையினர், வனத்துறையினர் மற்றும் தன்னார்வலர்கள் தீயணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (நி-4)

# அரசியல் கைதிகளுக்கு அரசாங்கமே பொறுப்பு

## அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து குரல் கொடுப்போம்

### அழைக்கிறார் வினோ எம்.பி



**(குருமன்காடு)**

**அரசாங்கத்தின் மனங்களில் கைதிகள் விடயத்தில் மாற்றம் வரவேண்டும். அரசியல் கைதிகளுக்கு சிறைச்சாலையில் மரணங்கள் நிகழ்ந்தால் அரசாங்கமே அதற்கு முழுப் பொறுப்புக்களையும் ஏற்க வேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.**

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திய போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திய போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல் காலங்களில் தற்போதைய ஆட்சியாளர்கள் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம் என்ற ஒரு உறுதி மொழியைக் கூறி தமிழ் மக்களின் வாக்குகளை கவரும் வேலைகளை செய்தார்கள். ஆனால் தேசிய கட்சிகள் ஆட்சிக்கு வந்தவுடன் தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை கைவிட்டு ஆட்சியைத் தொடர்வது போல் இந்த ஆட்சியிலும் உறுதி மொழிகளை மீறி தமிழ் மக்களுக்கு மிகப் பெரிய துரோகத்தை செய்துள்ளன. தமிழ் அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளில் கொவிட்-19 தாக்கத்திற்குள்ளாகியுள்ளார்கள்.

இந்த நேரத்தில் மனிதாபிமான அடிப்படையில் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

அவர்களது உயிருக்கு அரசாங்கம் உத்தரவாதம் வழங்க வேண்டும். அதையும் மீறி சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்ற அரசியல் கைதிகளுக்கு தற்போது அதிகம் தொற்றுக்குள்ளாகி வருகிறார்கள். அவர்களை உடனடியாக விடுதலை செய்வதற்கு அனைத்துத் தரப்பும் ஒன்றுதிரள வேண்டும்.

இந்த விடயத்தில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள மனிதவுரிமை அமைப்புக்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும். அரசாங்கத்திற்கு உறைக்கும் வகையில் அழுத்தம் கொடுக்கும் செயற்பாடுகளை அனைத்துத் தரப்பும் முன்னெடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4-250)

# வயல்களுக்குள் யானைகள் அட்டகாசம்

## கவலை தெரிவிக்கும் விவசாயிகள்

(குருமன்காடு)



வவுனியா, சின்னத்தம்பனை கிராமத்தில் நெல் வயல்களுக்குள் புகுந்து காட்டு யானைகள் அட்டகாசம் செய்துள்ளதாக அப்பிரதேச விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு சின்னத்தம்பனை கிராமத்திற்குள் புகுந்த காட்டு யானை ஒன்று அப்பகுதியில் உள்ள வயல் நிலங்களுக்குள் சென்று பயிர்களுக்கு சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் பல்வேறு சிரமப்பட்டு விதை விதைத்த போதும் யானைகள் குறித்த வயல் நிலங்களுக்குள் புகுந்து அட்டகாசம் செய்வதால் பயிர்கள் அழிவடைந்து தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். தொடர்ச்சியாக காட்டு யானைகள் தமது வயல் நிலங்களுக்குள் புகுந்து சேதம் ஏற்படுத்துவதால் அதனை தடுத்து நிறுத்த அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் விவசாயிகள் கோரியுள்ளனர். (நி-4-250)

# யோகா பயிற்சி வகுப்புக்கள்


(முல்லைத்தீவு)

இலங்கை யோகா பயிற்சிக் கல்லூரி. நடப்பாண்டிற்கான யோகா பயிற்சி வகுப்புக்களுக்கான ஆண், பெண் இருபாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சியில் பங்கு பற்ற விரும்புவோர் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் யோகாசிரியர் ஜெயம்ஜெகன், இயக்குநர், இலங்கை யோகாப் பயிற்சிக் கல்லூரி, 2ம் வட்டாரம், கோம்பாவில் புதுக்குடியிருப்பு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக தகவல்களுக்கு 077 518 5713 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (நி-4)

# பாவற்குளம் சமுர்த்தி வங்கி கணனிமயப்படுத்தப்பட்டது



(நெளுக்குளம்)

இலங்கை பூராகவும் சமுர்த்தி வங்கிகள் கணனிமயப் படுத்தப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம், நெடுங்கேணி, ஓமந்தை சமுர்த்தி வங்கிகள் கணனிமயப்பட்டுத்தப்பட்டதன் பின்னர் அண்மையில் பாவற்குளம் சமுர்த்தி வங்கி கணனிமயப் பட்டுத்தப்பட்டது.

வவுனியா மாவட்ட சமுர்த்தி திணைக்களப் பணிப்பாளர் திருமதி ச.பத்மரஞ்சன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் செட்டிகுளம் பிரதேச செயலாளர் க.சிவகரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.

இந்நிகழ்வில் சமுர்த்தி தலைமை அதிகாரிகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் வங்கியின் வாடிக்கையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-299)

# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டம்

(குருமன்காடு)



அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

புதிய ஜனநாயக மாக்ஸிச லெனினிச கட்சியின் ஏற்பாட்டில் வவுனியா வைத்தியசாலைக்கு முன்பாக சுகாதார நடை முறைகளைப் பின்பற்றி குறித்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய், காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி என்ன...?, இறந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதி போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி குறித்த போராட்டம் இடம்பெற்றது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "அரசே காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டங்களுக்கு பதில் என்ன?, அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பே கிடையாது, முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்களை எரிக்காதே, அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய், அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கு" உள்ளிட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

குறித்த போராட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், புதிய மாக்ஸிச லெனினிச கட்சியின் உறுப்பினர்களான டொன்பொஸ்கோ, பிரதீபன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (நி-4-250)

# போதைப் பொருளுடன் நால்வர் கைது

(கரணவாய்)

பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்று சனிக்கிழமை அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 4 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 500 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைக்காக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (நி-4-60)

ஒவ்வொரு புதிய சோதனையும் சமூகத்தில் புதுப்புது பாணியாகிறது. நாமும் உற்சாகத்தோடு ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு அதன் வசப்பட்டு மகிழ்ச்சியை அடைகின்றோம். – சின்மயானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் இளம் சமூகத்துக்கு முன்மாதிரிகள் இல்லையாயின்...

போலச் செய்தல் என்பது தவிர்க்க முடியாத ஒன்று.

திருமுருக கிருபானந்தவாரியாரைப் போல கதாப் பிரசங்கம் செய்வது, பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் போல பாடுவது, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் போல நடிப்பது, படிப்பித்த ஆசிரியரைப் போல படிப்பிப்பது அவர் அணிகின்ற ஆடைகள் போல அணிவது என்பன போலச் செய்தலாகும்.

ஆக, போலச் செய்தல் என்பது முன்மாதிரியான கற்றலின் வெளிப்பாடாகும்.

இதை நாம் கூறும்போது, தவறான முன்மாதிரிகள் பின்பற்றப்படமாட்டாது என்று யாரும் நினைத்து விடக்கூடாது.

ஆசிரியர் மதுபானம் அருந்தினால், புகைத்தல் செய்தால் அதில் நியாயம் இருப்பதாக, அதற்கு சமூக அங்கீகாரம் கிடைப்பதாக மாணவர்கள் கருதுவர்.

அந்தக் கருத்தியல் மாணவர் சமூகம் பாதை மாறிச் செல்வதற்கான சூழமைவை ஏற்படுத்தும்.

இவை ஒருபுறமிருக்க, இப்போது நம் மத்தியில் இருக்கக்கூடிய மிகச் சிக்கலான விடயம் சமூக வலைத்தளங்களாகும்.

உண்மையில் சமூக வலைத்தளங்களில் வெளிவருகின்ற கருத்துக்கள், காட்டூன்கள், நகைச்சுவைகள், கற்பனைகள், பொது அறிவு மற்றும் துணுக்குகள் என்பவற்றைப் பார்க்கும்போது; இத்துணை கற்பனை வளமும் அறிவாற்றலும் நம் இளம் சமூகத்திடம் இருக்கிறது எனப் பெருமிதம் கொள்ள வைக்கும்.

அதேநேரம் அரசியல், அரச நிர்வாகம், தனிப்பட்டவர்கள் தொடர்பில் ஒரு சாரார் செய்கின்ற விமர்சனங்களைப் பார்க்கும் போது சமூக வலைத்தளங்கள் போதும் எங்கள் இளம் சமூகத்தின் ஒழுக்கவியலை, பண்பாட்டை, நயத்தக்க நாகரிகத்தை வெட்டி விழுத்துவதற்கு என்று எண்ணத் தோன்றும்.

ஒரு உத்தியோகத்தர் தன் உயர் அதிகாரியைத் தூற்றி முகநூலில் பதிவேற்றம் செய்வதாக, ஆசிரியர் அதிபரை விமர்சிப்பதாக, அதிபர் தன் உயர் அதிகாரியைத் தாக்கி எழுதுவதாக நிலைமை இருக்குமாயின், இதன் விளைவு என்னவாகும் என்று கேட்டால்,

கீழ்த்தரமான விமர்சனங்கள் எப்படியும் வாழலாம் என்ற ஒரு வெறுப்பு நிலைக்கு மனித சமூகத்தை இட்டுச் செல்லும்.

இந்தச் சுணைக்கேடு ஏற்பட்டு விட்டால், பின்னர் யாரும் யாரையும் ஏசி எழுதலாம் என்ற நிலைமை வந்து விடும்.

அதிலும் குறிப்பாக மாணவர்கள் ஆசிரியர்களை முகநூல் வழியாக விமர்சிக்கும் சூழ்நிலை உருவாகிவிடும்.

இதன் பின்பு யார்தான் என்ன செய்ய முடியும்.

ஆக, சமூக வலைத்தளங்கள் ஊடாக, நியாயத்தை எடுத்துரைப்பதற்கும் தவறைப் பக்குவமாகச் சுட்டிக் காட்டுவதற்கும் பயன்படுத்தினால் அஃது இளம் சமூகத்தை நல்வழிப்படுத்தி மிக உன்னதமான மனிதத்தை நமக்குத் தந்தருளும்.

இதுபற்றி அனைவரும் சிந்திப்பது காலத்தின் கட்டாய தேவையாகும்.

# தோற்றுவிடுவோம் என்ற அச்சத்திலேயே மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் அரசு காலத்தை இழுத்தடிக்கின்றது

## சிறிதரன் எம்.பி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தோற்றுவிடுவோம் என்ற அச்சத்திலேயே மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் அரசு காலத்தை இழுத்தடிப்பு செய்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

கிளிநொச்சி கட்டக்காடு பகுதியில் நேற்றைய தினம் மக்கள் சந்திப்பு மற்றும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. அதன்பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

13ஆம் திருத்தத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட மாகாண சபைத் தேர்தல் முறைமையானது இன்று கடந்த மூன்று வருடங்களாக இலங்கை முழுவதும் செயலிழந்து இருக்கின்றது.

இவ்வாறு மாகாண சபைகள் செயலிழந்து இருப்பது வடக்கு மாகாணத்திலே வாழுகின்ற சமஷ்டி அடிப்படையிலான சுயாட்சியை விரும்புகின்ற தமிழர்களுக்கு அவர்களின் காலத்தினை இழுத்தடிக்கின்ற சதி முயற்சியாகவே நாங்கள் இதனை பார்க்கின்றோம்.

அத்துடன் இப்பொழுது மாகாண சபைத் தேர்தலை வைத்தால் தென்னிலங்கையிலே சிங்கள மக்களின் ஆதரவு தமக்கு கிடைக்காது. தாம் தேர்தலில் தோற்றுவிடுவோம் என்ற அச்சம் தற்போதைய அரசாங்கத்திற்கு இருக்கின்றது. அதனால் அரசாங்கம் இந்த தேர்தலை வைக்க தயங்குகின்றது.

ஆனால் தமிழ் மக்கள் தமது தமிழ் பிரதேசங்களில் தமது அரசியல் உரிமைகளை பெற்றெடுப்பதற்காக மற்றும் இறந்து போன இறைமையை மீட்டெடுப்பதற்காக இந்த மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டும் என்பதில் தெளிவாக இருக்கின்றார்கள். நாங்களும் இந்த கோரிக்கையை பல முறை முன்வைத்து இருக்கின்றோம்.

இப்பொழுதும் கூட நாங்கள் அரசாங்கத்திடம் கோருவது யாருடைய நிர்ப்பந்தங்களோ நெருக்கடிகளோ இல்லாது நியாயமான முறையில் தேர்தல் என்ற அடிப்படையில் மாகாணசபை தேர்தல்களை உடனடியாக நடத்தி அபிவிருத்திகளுக்கு கவனம் செலுத்த வேண்டும் என குறிப்பிட்டார். (ம-3,312)

### அச்சுவேலி தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் மற்றும் உத்தியோகத்தர்களை தனிமைப்படுத்துமாறு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்பு வங்கியின் அச்சுவேலி கிளை முகாமையாளர் மற்றும் உத்தியோகத்தர்களை தனிமைப்படுத்துமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த டிசெம்பர் 22 ஆம் திகதி அந்த வங்கிக் கிளைக்குச் சென்ற இராணுவ உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளதாக கண்டறியப்பட்ட நிலையில் இந்தப் பணிப்பு வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனால் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் பணியாற்றும் இராணுவ உத்தியோகத்தர் ஒருவர் தனது விடுப்புக் காலத்தில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார். அவர் டிசெம்பர் 22ஆம் திகதி தேசிய சேமிப்பு வங்கியின் அச்சுவேலிக் கிளைக்கும் சென்றுள்ளார்.

இந்த நிலையில் இராணுவ உத்தியோகத்தர் கொழும்பு திரும்பிய நிலையில் கடந்த 30ஆம் திகதி புதன் கிழமை பிசிஆர் பரிசோதனையில் அவருக்கு கொரோனாவைரஸ் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.


அதனால் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட அறிவித்தலின் அடிப்படையில் தேசிய சேமிப்பு வங்கியின் அச்சுவேலிக் கிளை முகாமையாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் நேற்று தொடக்கம் குடும்பத்தினருடன் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ம-3)

### மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களினக்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 4ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** கூடுவெந்த புலவு கிராமம், புதிய சின்னக்குளம் கிராமம், அரசடிக்குளம், சின்னசிப்பிக்குளம். ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ உன் ஜீவன் ஆத்திரம் கொள்வதில் வேகமாய் இராது. ஏனெனில் சினம் என்பது மூடர்களின் இருதயத்தில் தங்கியிருக்கிறது.

❖ அவனுடைய கை ஒவ்வொருவனுக்கும் எதிராக இருக்கும். ஒவ்வொருவனின் கையும் அவனுக்கு எதிராக இருக்கும்.

❖ அசட்டுத்தனமான வீண் கேள்விகளைத் தவிர்த்துவிடு. அவை சச்சரவுகளையே பிறப்பிக்கின்றன.

❖ தரித்திரன் கெஞ்சுதலையே உபயோகிக்கிறான். பணக்காரனோ முரட்டுத்தனமாகப் பதிலுரைக்கிறான்.

❖ நடக்க வேண்டிய வழியில் குழந்தையைப் பழக்கினால் வயதான பிறகு அந்த வழியிலிருந்து விலகாமலிருப்பான்.

❖ துன்மார்க்கனின் தொண்டை திறக்கப்பட்டிருக்கும் பிரேதக்குழி.

❖ உடல் சதைக்குரிய சிந்தனையோ மரணம் ஆகும். ஞானத்துக்குரிய சிந்தனையோ வாழ்வும் அமைதியும் ஆகும்.

❖ கடவுளின் ஜீவன் எங்கிருக்கிறதோ அங்கு சுதந்திரமுண்டு.

❖ வேஷதாரியே! முதலில் உன் கண்ணில் இருக்கிற உத்திரத்தை விட்டெறி. பிறகு உன் சகோதரன் கண்ணில் இருக்கிற துரும்பை எடுத்தெறியத் தெளிவாய் பார்க்கலாம்.

# முதல் டெஸ்டில் இந்தியா தோற்றது இதனால் தான் என்கின்றார் அக்தர்



அடிலெய்டு பகல்-இரவு டெஸ்டில் இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது. முதல் இன்னிங்ஸில் 53 ரன்கள் முன்னிலைப் பெற்ற போதிலும், 2 ஆவது இன்னிங்ஸில் 36 ரன்னில் சுருண்டது.

இந்தியா தோற்றதற்கு அவுஸ்திரேலியாவின் பந்து வீச்சு முக்கிய காரணமல்ல. பிங்க்-பந்து தான் முக்கிய காரணம் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சோயிப் அக்தர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சோயிப் அக்தர் கூறுகையில் "நான் கண்டதில் அவுஸ்திரேலியாவின் பலவீனமான பட்டிங் ஓடர் கொண்ட அணியாக இது உள்ளது. இது மிகவும் உடையக் கூடிய, மிக வும் பலவீனமானது. ஸ்மித்தை நீக்கிவிட்டு மிடில் ஓடரை பார்த்தால் மிகவும் மோசம். முதல் போட்டியில் இந்தியா ஏன் தோற்றது என்று என்னிடம் கேட்டால், அதற்கு காரணம் பிங்க்-பந்து தான் என்பேன்" என மேலும் தெரிவித்தார். (4)

# பாகிஸ்தான் எதிர் நியூசிலாந்து இரண்டாவது டெஸ்ட் இன்று

பாகிஸ்தான் மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

கிறிஸ்ட்சர்ச் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ள இப்போட்டியில், நியூசிலாந்து அணிக்கு கேன் வில்லியம்சனும் பாகிஸ்தான் அணிக்கு மொஹமட் ரிஸ்வான் அல்லது பாபர் அசாம் தலைமை தாங்கவுள்ளனர்.

கை பெருவிரலில் ஏற்பட்ட லேசான எலும்பு முறிவால் முதலாவது டெஸ்டில் ஒதுங்கியிருந்த பாகிஸ்தான் அணித்தலைவர் பாபர் அசாம் நேற்று முன்தினம் நீண்ட நேரம் பயிற்சியில் ஈடுபட்டார்.

ஆனால் காயத்தில் இருந்து அவர் முழுமையாக குணமடைந்து விட்டார் என்று அணி மருத்துவ குழு கூறினால் மட்டுமே இந்த டெஸ்டில் விளையாடுவார்.

ஒருவேளை உடல்தகுதியை எட்டாவிட்டால் விக்கெட் காப்பாளர் மொஹமட் ரிஸ்வான் தொடர்ந்து அணித்தலைவராக செயற்படுவார்.

இதுதவிர நியூசிலாந்து அணியில், காயமடைந்த வேகப்பந்து வீச்சாளர் நெய்ல் வாக்னருக்கு பதிலாக மெட் ஹென்ரி அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை பொறுத்தவரை முதல் போட்டியில் நியூசிலாந்து அணியில் 101 ஓட்டங்களால் வெற்றி பெற்று தொடரில் முன்னிலைப் பெற்றுள்ளது. (4)

# இங்கிலாந்து தொடருக்கு பின்னர் வீரர்களுக்கான வருடாந்த ஒப்பந்தம்

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களுக்கான வருடாந்த ஒப்பந்தம், இங்கிலாந்து அணிக்கு எதிராக நடைபெறவுள்ள தொடருக்கு பின்னர் வழங்கப்படும் என இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி தற்போது தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது.

இந்தப் போட்டித் தொடரில் முதல் போட்டி நிறைவடைந்துள்ள நிலையில், தென்னாபிரிக்க அணி தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கின்றது.

இந்நிலையில், இலங்கை கிரிக்கெட் அணியானது, மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற் கொள்வதற்கு முன்னர், வீரர்களுக்கான வருடாந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஷ்லி டி சில்வா தெரிவித்தார்.

"வீரர்களுக்கான வருடாந்த ஒப்பந்தத்தை ஜனவரியின் இறுதிப்பகுதி யில் வழங்க வேண்டும். வீரர்களுக்கான ஒப்பந்தம் கடந்த மாதம் நிறைவுக்கு வந்துள்ளது. ஆனால், தென்னாபிரிக்கா மற்றும் இங்கிலாந்து தொடர்களுக்காக ஒப்பந்தம் இரண்டு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே, இங்கிலாந்து தொடரையடுத்து, வீரர்கள் வருடாந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவர் எனவும் குறிப்பிட்டார்.

புதிய ஒப்பந்தத்திற்காக வீரர்களை இதுவரை வகைப்படுத்தவில்லை. நாம், கடந்த வருடத்தை மீண்டும் பார்க்க வேண்டும்.

கடந்த ஆண்டு 30 வீரர்களை இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர்கள் ஒப்பந்தத்தில் இணைத்திருந்தோம்" என இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஷ்லி டி சில்வா மேலும் தெரிவித்தார். (4)

# எவருக்கும் தொற்றில்லை

இலங்கை புறப்படுவதற்கு இங்கிலாந்து கிரிக்கெட் அணி வீரர்கள் மேற்கொண்ட கொரோனா பரிசோதனையில், எவருக்கும் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கடந்த வருடம் மார்ச் மாதம் நடைபெற இருந்த இலங்கை - இங்கிலாந்து டெஸ்ட் தொடர் ஒத்திவைக்கப்பட்டது.

இந்தத் தொடர் எதிர்வரும் 14ஆம் திகதி தொடங்குகிறது. இதற்காக இங்கிலாந்து அணி வீரர்கள் இன்று இலங்கை புறப்படுகின்றனர். புறப்படுவதற்கு முன் கொரோனா பரிசோதனையில் அனைவரும் தகுதி பெற வேண்டும்.

நேற்று அவர்களுக்கான கொரோனா பரிசோதனை முடிவுகள் கிடைத்தன. இதில் எவருக்கும் தொற்று இல்லை என உறுதிசெய்யப்பட்டுள்ளதால், அவர்கள் அனைவரும் புறப்படுகின்றனர்.

இலங்கையில் குறிப்பிட்ட நாட்கள் தனிமைப்படுத்தலில் இருந்த பின் அவர்கள் விளையாட தொடங்குவார்கள்.

இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி, எதிர்வரும் 14ஆம் திகதி காலி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. (4)

# ஓய்வு குறித்த கேள்விக்கு கெய்ல் மிரட்டல் பதில்



கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறும் எண்ணம் எதுவும் தற்போது இல்லை என்று யுனிவர்ஸ் பாஸ் என்றழைக்கப்படும் கிறிஸ் கெய்ல் தெரிவித்துள்ளார்.

தனியார் செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்துள்ள பேட்டியில்,

மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு கிரிக்கெட் விளையாட முடியும் என்ற நம்பிக்கை தனக்கு இருப்ப தாகவும் கூறியுள்ளார்.

ஆகவே, 45 வயதுக்கு முன்னர் கிரிக்கெட்டிலிருந்து விலக வாய்ப்பே இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இன்னும் இரண்டு உலகக் கிண்ணம் போட்டிகளில் விளையாட வேண்டியிருப்பதாக சுட்டிக்காட்டிய கிறிஸ் கெய்ல்,

வயது என்பது தன்னைப் பொறுத்தவரை வெறும் எண்ணிக்கை தான் என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டார்.

இந்தியாவில் இவ்வாண்டு நடைபெறவிருக்கும் இருபது ஓவர் உலகக் கிண்ணம் மற்றும் அவுஸ்திரேலியாவில் அடுத்த ஆண்டு நடத்த திட்டமிடப்பட்டிருக்கும் தொடர் ஆகியவற்றில் விளையாடும் நாளை ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளதாக கிறிஸ் கெய்ல் மேலும் தெரிவித்துள்ளார். (4)

# கங்குலிக்கு மாரடைப்பு



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சவுரவ் கங்குலிக்கு மாரடைப்பு ஏற்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் சவுரவ் கங்குலி. கிரிக்கெட் உலகின் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியுள்ள அவருக்கு கோடிக்கணக்கான ரசிகர்கள் உள்ளனர். இந்த நிலையில் சவுரவ் கங்குலி நேற்று வீட்டில் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்த போது அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இதை தொடர்ந்து அவர் கொல்கத்தாவில் உள்ள உட்லாண்ட் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அங்கு அவருக்கு ஆஞ்சியோப்ளாஸ்திரி சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

கங்குலிக்கு மாரடைப்பு ஏற்பட்ட தகவல் ரசிகர்களை பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ள நிலையில் அவருக்காக பிரார்த்தனை செய்து வருகின்றனர். (4)

## தனியார் வகுப்பு...

தற்போது வகுக்கப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது பேசிய தலைமை தொற்று நோயியல் நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர, உடனடியாக கடுமையான சுகாதார நெறிமுறைகளின் கீழ் தனியார் கல்வி வகுப்புகள் இயங்க அனுமதிக்கப்படும் என்று உறுதிப்படுத்தினார்.

மாணவர்கள் அல்லது ஆசிரியர்களிடையே எந்தவொரு பாதிக்கப்பட்ட நபரையும் உடனடியாக ஒரு சிகிச்சை நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கான வழிகள் உள்ளிட்ட முக்கியமான பிரச்சினைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று சமரவீர குறிப்பிட்டார். (ம-3)

## முல்லைத்தீவில்...

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சிலாவத்தை தீர்த்தக்கரை பகுதியில் நேற்று மாலை 4.15 மணியளவில் வீசிய மினி சூறாவளி காரணமாக மீனவரின் வாடி ஒன்று சேதமடைந்துள்ளதோடு மேலும் சில கட்டடங்களில் பகுதியளவிலான சேதம் ஏற்பட்டுள்ளது.

திடீரென கடற்கரையில் இருந்து இந்த மினி சூறாவளி வீசியதாகவும் திடீரென தனது வாடியை ஊடறுத்து சென்றதாகவும் இதனால் வாடியின் கூரைப் பகுதி தூக்கி வீசப்பட்டுள்ளதோடு வாடியில் இருந்த பொருட்கள் சிலவும் சேதமடைந்துள்ளது. (ம-3,281)

## நிர்ணய விலை...

இதற்கமைய அரிசி, மா, பருப்பு, ரின் மீன், நெத்தலி, வெங்காயம், உருளைக் கிழங்கு, கோழி இறைச்சி மற்றும் முட்டை ஆகிய 10 அத்தியாவசிய உணவு பொருட்களுக்கான நிர்ணய விலை அடுத்த மாதம் முதல் அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## விபரீத முடிவெடு...

சாவகச்சேரி பஸ் தரிப்பு நிலையத்திற்கு அருகாமையில் உள்ள முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் சாவகச்சேரி - கல்லடி மூட்டுப் பகுதியைச் சேர்ந்த 38 வயதான சுதாகரன் என்ற முச்சக்கரவண்டிச் சாரதியே இவ்வாறு நஞ்சருந்தி தற்கொலை செய்துள்ளார்.

நஞ்சருந்தி உயிருக்குப் போராடிய அவரை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்த போதிலும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,30)

## கொரோனாவுக்கு...

க்கை 211ஆக உயர்வடைந்துள்ளது.

70, 76 மற்றும் 93 வயதுடைய 3 பேரே உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், நாட்டில் நேற்று +502 பேர் கோவிட் - 19 நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 44 ஆயிரத்து 358 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## பண்டிகைக்...

எனினும் களுத்துறை, பேருவளை பொல்காவல, மொனராகல, திருகோணமலை, காத்தான்குடி, மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் நிலைமை மோசமடைகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக பொதுமக்கள் தொடர்ந்தும் சுகாதார விதிமுறைகளை பின்பற்ற வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

பண்டிகை காலத்தில் பொதுமக்கள் மேல் மாகாணத்தை விட்டு வெளியேறிய தன் காரணமாக அடுத்த சில நாட்களில் நாட்டில் புதிய பரவல்கள் ஆரம்பமாகலாம் என அவர் அச்சம் வெளியிட்டுள்ளார். (ம-3)

## சாட்சியங்கள்...

உரிமைகள் பேரவையில் உரிய சாட்சியங்களுடன் இந்த முறை நிரூபிப்போம் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத் தொடர் 2021 பெப்ரவரி 22ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

மார்ச் 19ஆம் திகதி வரை நடைபெறும் குறித்த கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் தொடர்பிலும் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது என்று இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.

இந்த நிலையில் மேற்படி கூட்டத் தொடர் தொடர்பில் விபரிக்கையிலேயே சரத் வீரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜெனிவாக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் எந்தவொரு குற்றச்சாட்டுக்கும் உரிய பதிலை வழங்குவதற்கு அரசு தயாராகவே இருக்கின்றது.

இலங்கை இராணுவம் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை. தீவிரவாதிகளின் பிடிக்குள் சிக்கியிருந்த மக்களை மீட்பதற்காக மனிதாபிமான நடவடிக்கையிலேயே ஈடுபட்டது. உரிய சாட்சியங்களுடன் இதனை நிரூபிப்போம் என்றார். (ம-3)

## அரசியல் யாப்பு...

புதிய அரசியல் யாப்பு பற்றிய தமிழ் மக்கள் கூட்டணியின் கருத்துக்களை அனுப்பியபோது, இதனையும் தெரிவித்துள்ளார்.

சிபார்சுகளுடன் அனுப்பப்பட்ட கடிதத்தில்,

மேன்மைமிகு மற்றும் படித்த பெரியோர்கள் உங்கள் நிபுணத்துவ குழுவை அலங்கரித்துக் கொண்டிருப்பினும் எங்களுடைய அதுவும் முக்கியமாக தமிழ் மக்களின் கருத்துரைகள் எதுவுமே உங்கள் குறித்த குழுவினால் பரிசீலிக்கப்பட மாட்டாது என்பது எமது பார்வை பாற்பட்ட கருத்தாகும்.

எமது சந்தேகப்படி பெரும்பான்மை சமூகத்தவருக்கு சார்பான ஒரு அரசியல் யாப்பு வரைபை நீங்கள் ஏற்கெனவே தயாரித்து வைத்துக் கொண்டு பொது மக்களிடம் கருத்துக் கேட்பதாகப் பாசாங்கு செய்து ஈற்றில் ஏற்கெனவே தயாரித்த குறித்த வரைவை வெளிவிடுவதே உங்கள் எண்ணம் என்று நாம் கருதுகின்றோம்.

எம்மிடம் கருத்துக்கள் கோரி பத்திரிகைகளில் விளம்பரம் செய்தமைக்கு காரணம் எல்லோரினதும் கருத்துக்களையும் கேட்டறிந்தோம் என்று உலகத்திற்குப் பறைசாற்றவே என்று நாமெண்ணுகின்றோம் என்றார். (ம-3)

## யுத்த...

இலங்கை இராணுவம் படுகொலையில் ஈடுபடவில்லை. போர்க் குற்றங்களை இழைக்கவில்லை. எனவே நாம் எதற்கும் அஞ்ச மாட்டோம் என்று ஜெனரல் கமால் குணரத்ன வெளியிட்ட கருத்துக்கு பதிலளித்தே இந்தக் கோரிக்கையை எழுப்பியிருக்கிறார் விக்னேஸ்வரன்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஜெனரலின் கருத்துக்களை நான் வரவேற்கின்றேன். இது எங்களுக்கு நம்பிக்கையைத் தருகிறது. இலங்கை படைகள் இந்த "நல்ல ஜெனரல்" கூறியமை போன்று நல்லொழுக்கத்தின் ஒரு முன்னுதாரணமாக இருந்திருந்தால், இலங்கை ஏன் சர்வதேச விசாரணைக்கு அஞ்ச வேண்டும்? சர்வதேச அரங்கில் எங்கள் முன்மாதிரியான நடத்தையை நாம் நிரூபிக்க முடிவதோடு எங்கள் மீதான கெட்ட பெயரையும் ஒரேயடி யாகத் துடைத்தழிக்க முடியும் அல்லவா என்று கேள்வி எழுப்பியுள்ளார். (ம-3)

## புதிய கொரோனா பரவாதிருக்க நடவடிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸின் தன்மையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பாக தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுவதாக இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவில் ஏற்பட்டுள்ள புதிய வகை கொரோனா வைரஸ் இலங்கைக்குள் பரவாதிருப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக ஆய்வுகூடங்களில் விசேட பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாக இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே குறிப்பிட்டுள்ளார். (ம-3)


மெகா பவர்
திகதி 02/01/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0722
Z 07 02 19 53 63

மஹஜன சம்பத
திகதி 2021/01/02
சீட்டிழுப்பு இலக்கம் 4355
T 1 7 2 8 6 6

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 02.01.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2650
L 38 62 63 79

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 02/01/2021 சீட்டிழுப்பு இலக்கம் 1084
N 0 7 2 6 2 0

தன நிதானய
திகதி - 2021.01.02
சீட்டிழுப்பு இலக்கம் - 392
F 23 30 60 75
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

சீட்டிழுப்பு வாரம் 040
சீட்டிழுப்பு திகதி 02.01.2021 சனி
வெற்றி இலக்கங்கள் 11 21 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.

அத கோடிபதி
கிழமை: சனி
சீட்டிழுப்பு இல: 1151
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 02.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 95,375,240
வெற்றி இலக்கங்கள் 10 19 48 75 L

சனிதா
கிழமை: சனி
சீட்டிழுப்பு இல: 3481
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 02.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 38,626,518
வெற்றி இலக்கங்கள் 28 42 62 68 F

சுப்பர் ஜக்பொட் 2,000,000/=
திகதி: 02.01.2021
வெற்றி வாரம்: 3032
வர்ணம்: இளம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 16 19 32 46 விருச்சிகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,591,925

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1325 நிறம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 02/01/2021 தினம் சனி
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் F 04 26 30 63
அடுத்த சுப்பர் ஜக்பொட் 61,110,322

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 398 திகதி 02.01.2021 வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 03 42 52 விதி எண் 5
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 12,462,068
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

# உருமாறிய வைரஸ் தொற்று இலங்கையிலும் பரவலாம்

## பேராசிரியர் நீலிகா மலாவிஜ் தெரிவிப்பு

(கொழும்பு)

**கொரோனா வைரஸ் திரிபடைந்துள்ளதை தொடர்ந்து, நாட்டுக்குள் அல்லது வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் மூலம் திரிபடைந்த வைரஸ் பரவலை கண்டறியும் பொருட்டு கொரோனா வைரஸின் ஆய்வக பரிசோதனை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.**

**இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று பரவத் தொடங்கிய மார்ச் மாதத்திலிருந்து ஆய்வக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மருத்துவ அறிவியல் பீடத்தின் நுண்ணுயிரியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் நீலிகா மலாவிஜ் தெரிவித்தார்.**

வைரஸ்திரிபடைந்து கொண்டிருக்கிறது. இலங்கையில் ஒரு புதிய மாறுபாடு உள்ளதா என்பதைக் கண்டறிய மாதத்திற்கு ஒரு முறை சோதனை செய்யப்பட்டது என்று அவர் கூறினார்.

பேராசிரியர் நீலிகா மலாவிஜ், இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்காவில் ஒரு புதிய திரிபு கண்டறியப்பட்டமை, இலங்கையில் சடுதியாக தொற்றாளர் அதிகரித்தமை போன்ற காரணங்களையடுத்து, ஆய்வக சோதனையின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது என்றார்.

இப்போது இலங்கைக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் விமான நிலையங்கள் விரைவில் முழுமையாக இயங்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால், ஆய்வக சோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

"ஆய்வக சோதனையின் எண்ணிக்கையை ஒவ்வொரு இரண்டு வாரங்களுக்கும் அல்லது வாரத்திற்கு ஒரு முறையும் அதிகரிக்க முடிவு செய்துள்ளோம்" என்று நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) ஒரு ஊடக மாநாட்டில் அவர் கூறினார்.

பேராசிரியர். நீலிகா மலாவிஜ், ஆய்வக சோதனைக்கு உலக சுகாதார நிறுவனம் பல்கலைக்கழகத்திற்கு உதவி வழங்கி வருகிறது என்றார்.

இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்காவில் மாறுபாடுகள் கண்டறியப்பட்டாலும், கொரோனா வைரஸின் திரிபுகளை எதிர்பார்க்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

"நாங்கள் இலங்கையில் திரிபடைந்த வைரஸை கூட காணலாம்," என்று அவர் மேலும் கூறினார்.

இப்போது சோதனை செய்யப்படும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கோவிட் தடுப்பூசிகளை புதிய வகைகளைச் சமாளிக்க மாற்றியமைக்க முடியும் என்றும் தெரிவித்தார். (ம - 03)

# மோட்டார் சைக்கிள் மோதியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

## கோண்டாவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

புதுவருடப்பிறப்பிற்கு துவிச்சக்கர வண்டியில் ஆலயத்திற்குச் சென்று வீடு திரும்பிய குடும்பஸ்தர் ஒருவர் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் கோண்டாவில் உப்புமடம் சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் கோண்டாவில் மேற்குப் பகுதியைச் சேர்ந்த 58 வயதுடைய சின்னராசா உதயகுமார் என்பவரே உயிரழந்தவராவார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-03)

### மாகாண சபை தொடர்பில்

# சுதந்திரக் கட்சியின் யோசனைக்கு சஜித் அணி எதிர்ப்பு

(கொழும்பு)

மாகாண சபை தொடர்பில் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்துள்ள யோசனைக்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறும் வரை பழைய மாகாண சபைகளை ஸ்தாபித்து முன்னாள் உறுப்பினர்களை இயங்கு நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற யோசனையை அரசிடம் முன்வைப்பதற்கு சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

சு.கவின் இந்த யோசனை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு என்னவென்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்னவிடம் வினவிய போது அவர் கூறியவை வருமாறு,

தேர்தல் என்பது அரசியல்வாதிகளுக்குப் பதவிகளை வழங்குவதற்காக நடத்தப்படுவது அல்ல. மாறாக மக்களின் ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்தி, மக்களின் இறைமைக்காகவே அது நடத்தப்படுகின்றது. எனவே, தேர்தலை எந்நேரமும் எதிர்கொள்வதற்கு நாம் தயார். ஆனால், தேர்தல் என்ற போர்வையில் பதவிகளை வழங்கும் திட்டத்தை ஏற்கத் தயாரில்லை" - என்றார். (ம-03)

### அம்பாந்தோட்டையிலும்

# கொரோனா

(கொழும்பு)

மகிந்தவின் கோட்டை என வர்ணிக்கப்படும் அம்பாந்தோட்டை - வீரகெட்டிய, யக்கஸ்முல்ல பகுதி தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பகுதியில் 17 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையிலேயே குறித்த பகுதி தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வீரகெட்டிய யக்கஸ்முல்ல பகுதியில் 60 பேருக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில், 17 பேருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. (ம-03)

**காணி தேவை**

யாழ்ப்பாணம், நல்லூர்,மானிப்பாய்,கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இடங்களுக்குள் 10 பரப்பு தொடக்கம் 30 பரப்பு வரையான காணிகள் தேவை. (தரகர் தேவையில்லை) (5137)

076 221 2037

**அறை வாடகைக்குண்டு**

நல்லூரை அண்டிய பகுதியில் நல்ல பாதுகாப்பான சூழலில் பெண்கள் தங்கக்கூடிய அறை வாடகைக்கு உண்டு.

(படிக்கும் பெண் பிள்ளைகளுக்கு மட்டும்)

077 712 6536

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-1051)

0768226240 DHL

**ஜேர்மன், சுவிஸ் செல்ல முயல்பவரா நீங்கள் ?**

German, Swiss போன்ற ஐரோப்பிய நாடுகளுக்கு செல்ல முயல்பவராயின் எங்களால் ரொச் மற்றும் A1 பரீட்சைகளுக்கான இலகு வழிகாட்டல்கள் மற்றும் விசேட வகுப்புக்கள் ஒழுங்கமைக்கப்படும். (C-1019)

தொடர்புகளுக்கு : 076 401 8564

**வேலைவாய்ப்பு**

1. Manager (ஆண்/பெண்)
2. Technician
   - Laptop Motherboard (ஆண்)
   - Computer Hardware (ஆண்/பெண்)
   - Printer, CCTV, TV (ஆண்)
   - Photocopier, A/C. (ஆண்)
3. Office Assistant (ஆண்/பெண்)

GUNA BEST PC 0779086737

கணினி சிசிரிவி விற்பனை திருத்தம்

379, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

522, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (5162)

**அண்ணா விரைவுப் பொதிகள் சேவை**

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் 1150/= (5kgக்கு மேல் 11kgக்கு மேல் 21kgக்கு மேல் கட்டணம் குறைவு) (C-1070)

லண்டன் 1050/= இத்தாலி 1250/=

மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை

கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1350/= (வரி உள்ளடக்கப்படவில்லை)

உங்கள் இடங்களுக்கு வந்து பொதிகள் பெற்றுக் கொள்ளப்படும். (கட்டணம் வேறுபடும்)

பொதிகளுக்கு 20,000ரூபா பெறுமதி வரையான காப்புறுதிக் கட்டணம் இலவசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது

எம்முடன் இணைந்து பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்பு கொள்ளவும்

070 330 5500 077 888 9388 075 330 5500

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை சண்டிலிப்பாய் சுன்னாகம் | நெல்லியடி ஆவரங்கால் சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கிளிநொச்சி வவுனியா மன்னார் | கனகராயன்குளம் மல்லாவி துனுக்காய்

**பணியாளர்கள் தேவை**

வடமாகாணம், யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் Nflash Super Detergent நிறுவனத்திற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு பணியாளர்கள் தேவை.

- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் (Sales Rep.) ஆண்கள் மட்டும்.
- காட்சியறை முகாமையாளர் ( பெண் ) ( கிளிநொச்சி, முல்லைத்தீவு )
- கணனி இயக்குனர் (பெண்) (யாழ்ப்பாணம்)
- உற்பத்தி பிரிவு உத்தியோகத்தர் (யாழ்ப்பாணம்)
- சந்தைப்படுத்துதல் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆண், பெண் (25 பேர்)
- சந்தைப்படுத்தல் மேற்பார்வையாளர் ( ஆண் )

மேற்குறித்த வெற்றிடங்கள் காணப்படுவதால் அவற்றிற்கு பொருத்தமான தகைமைகளின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும்.

குறிப்பு : மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்களே உள்ளன. (C-1086)

077 552 1714, 076 410 4509, 021 222 2855

கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**வீடு வாடகைக்கு**

கொக்குவில், பொற்பதி வீதி, செம்பாட்டு ஒழுங்கையில் அமைந்துள்ள 4 அறைகளும் 4 குளியல் அறைகளையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. வாடகை ரூபாய் 25,000/- (பேசித் தீர்மானிக்கலாம் )

( விவசாய பீடத்துக்கு அருகாமையில் ) (5161)

071 040 8301, 077 431 6132

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், பலாலி வீதி, கோண்டாவில் சந்தியில் இருந்து இருபாலை வீதியில் 7 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

( பழனி ஆண்டவர் கோவில் முன்பாக )

(தரகர் தேவையில்லை)

077 288 0152

077 505 8561

074 075 4204

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.